https://tamileelamarchive.com/

# எரிமலை

செப்ரெம்பர் 2005



https://tamileelamarchive.com/




சிறீலங்காத் தேர்தல் அரங்கம்

முன் அட்டை, பின் அட்டை உள் ஒளிப்படங்கள் : இ.ஜீவகுமார்

https://tamileelamarchive.com/

# உள்ளே...

எரிமலை












கதிர்காமத்தெய்யோ




நேர்காணல்: கருணாகரன்

## கட்டுரைகள்

தாவித் 04, 36
நாதன் 06
மீரா 09, 38
பிரமதீஸ்வரி 20
தி.தவபாலன் 28, 43

## உண்மைப்பதிவு

மணலாறு விஜயன் 44

## நேர்காணல்

கருணாகரன் 12

## சிறுகதைகள்

சித்திரா சுதாகரன் 24
முத்து. இராதாகிருஷ்ணன் 32
ஆதிலட்சுமி சிவகுமார் 40
மீள்வு 46

## கவிதைகள்

ஜெயசீலன் 17
அஞ்சலி 26
சுகிர்தா 34
அடில் அடாம் - மொழிபெயர்ப்பு - மல்லீஸ்வரி 39
தா.பாலகணேசன் 50
தீபச்செல்வன் 53

## தொகுப்பு

நிகழ்வும் பதிவும் 54
நினைவுக்குறிப்பு 56
மீள்பார்வை 57
பதிவுகள் 58

https://tamileelamarchive.com/





# எந்தச் சவாலையும் ஏற்பதற்கு எமக்கு ஆன்ம உறுதியைத் தவிர வேறு ஆயுதங்கள் தேவையில்லை

"

இன்று நாம் எதிர்கொள்ளும் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் எதிரியின் எந்தச் சவாலுக்கும் நாம் முகங்கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். எமது மன உறுதிக்கு எதிரி சவால் விடுகின்றான். இந்தச் சவாலை ஏற்பதற்கு எமக்கு ஆன்ம உறுதியைத்தவிர வேறு ஆயுதங்கள் தேவையில்லை. சிங்கள அரசானது ஒருபுறம் போர்க்கொடியை உயர்த்திக்கொண்டு மறுபுறம் சமாதானச் சமிக்ஞைகளைக் காட்டுகிறது. நாம் சமாதானத்துக்கும் தயார். போருக்கும் தயார். நாம் சமாதானத்தின் வழியைத் திறப்பதா? அல்லது யுத்தத்தின் பாதையிற் செல்வதா? என்பதை எதிரிதான் தீர்மானிக்கவேண்டும். நாம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்துவிட்டிருக்கின்றோம். சமாதான வழிமுறையில் சமரசப் பேச்சுக்களை நடாத்த நாம் தயார். எந்தவித அழுத்தங்களுமின்றி, எந்தவித ஆதிக்கமின்றி, சமத்துவத்தின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில் நிபந்தனையின்றிப் பேச்சுக்களில் பங்குகொள்ள நாம் என்றும் தயார். எமது கொள்கையை. எமது நிலைப்பாட்டை, எமது தேசியப் போராட்டத்துக்கு ஆதரமான அடிப்படைகளைச் சிங்கள அரசுக்கும், உலகுக்கும் எடுத்து விளக்கப் பேச்சுவார்தைகள் வாய்ப்பளிக்கும். நாம் இனத்துவேசிகள் அல்ல. நாம் போர்வெறி கொண்ட வன்முறையாளர்களும் அல்ல. நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ, விரோதிகளாகவோ கருதவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கின்றோம். சிங்களப் பண்பாட்டைக் கௌரவிக்கின்றோம். சிங்கள மக்களின் தேசிய வாழ்வில் அவர்களது சுதந்திரத்தில் நாம் எவ்விதமும் தலையிட விரும்பவில்லை. நாம் எமது வரலாற்றுத் தாயகத்தில் ஒரு தேசிய மக்கள் இனம் என்ற அந்தஸ்துடன் நிம்மதியாக, சுதந்திரமாக கௌரவத்துடன் வாழ விரும்புகின்றோம். 'எம்மை நிம்மதியாக வாழவிடுங்கள்' என்பதுதான் எமது மக்களின் எளிமையான அரசியல் அபிலாஷை. இந்த நியாயமான, நீதியான, நாகரிகமான எமது மக்களின் வேண்டுகோளைச் சிங்கள அரசு எப்போது அங்கீகரிக்கின்றதோ அப்பொழுதுதான் ஒரு நிரந்தர சமாதானமும் தீர்வும் ஏற்பட வாய்ப்புண்டு.

"

தமிழீழத் தேசியத் தலைவர்

மேதகு **வே.பிரபாகரன்** அவர்கள்

1991 ஆம் ஆண்டு மாவீரர் நாளை முன்னிட்டு
தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள்
விடுத்த செய்தியிலிருந்து...

https://tamileelamarchive.com/

# தலைவாசல்

எரிமலை




# கதிர்காமர் மடிந்தார்

ஒரு வெளிவிவகார அமைச்சரை நியமிக்கும் பாரம்பரியத்தை 1977ம் ஆண்டுத் தேர்தல் வெற்றிக்குப் பின்பு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஆரம்பித்தார். அதற்கு முன்பு அரசுத்தலைவரே வெளிவிவகார அமைச்சராகப் பொறுப்பைத் தன்னோடு வைத்துக்கொண்டார். டி.எஸ் சேனநாயக்கா, பண்டா தம்பதிகள் தாமே வெளிவிவகார அமைச்சர்களாகவும் செயற்பட்டனர். ஜெயவர்த்தனா வெளிவிவகார அமைச்சர் பதவியை உருவாக்கியதோடு இஸ்லாமியரான ஏ.சி.எஸ் ஹமீதை அப்பதவியில் இருத்தினார். மூன்று மொழிகளிலும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் வல்லவரான ஹமீது மிகச் சிறந்ததொரு இராசதந்திர நிபுணராகக் கருதப்படுகிறார். பேரினவாதிகளுக்கு பணிந்து நடக்காதவராகவும். ஈழத் தமிழர்களுக்குத் துன்பம் தராதவராகவும், அவர் முயன்ற மட்டும் நடுநிலையைக் கடைப்பிடித்தார். விடுதலைப் புலிகளின் ஆலோசகர் பாலசிங்கத்தின் மனைவி அடேல் ஆன் எழுதிய 'சுதந்திரவேட்கை' என்ற நூலில் ஹமீதை 'அரிய நண்பன்' என்று குறிப்பிடுகிறார். தமிழினம் அவரை இதற்கும் மேலாகக் கௌரவிக்க இயலாது. சிறீலங்காவுக்கான முதலாவது வெளிவிவகார அமைச்சர் என்ற சிறப்போடு, ஈழத்தமிழர்களின் அரிய நண்பர் என்ற தேட்டமும் ஹமீது அவர்களைச் சாரும்.

1994ல் பதவிக்கு வந்த சந்திரிகா தலைமையிலான மக்கள் முன்னணி அரசின் வெளிவிவகார அமைச்சராக லக்ஸ்மன் கதிர்காமர் நியமிக்கப்பட்டார். ஹமீது அவர்களுடன் ஒப்பிடுகையில் கதிர்காமரின் குணாம்சங்கள் தெள்ளெனத்தெரிய வரும். ஹமீது மூவின மக்கள் வாழும் அக்குரச தேர்தல் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர். கதிர்காமர் ஒரு நியமன எம்.பி, பண்டாரநாயக்கா குடும்ப விசுவாசி, தமிழர் என்று கூறிக்கொண்டாலும் பேரினவாதிகளின் கைக்கூலியாகவே செயற்பட்டவர். தமிழறியா நாவும், தமிழ் மண்ணில் மிதியாத காலும் பூண்ட கதிர்காமருக்கு வாய்த்தது தமிழ்ப் பெயர் ஒன்று மாத்திரமே. தேவைப்படும் போதெல்லாம் தன்னையொரு தமிழனாக இனங்காட்டுவார். ஆனால் ஒரு சிங்களவன் கூடச் செய்யாத கொடுமையைத் தமிழர்களுக்குச் செய்துள்ளார். தன்னுடைய பிறப்பையும், சுற்றத்தையும் விற்பவர்களுக்கு துரோகி என்ற பட்டம் சூட்டப்படுவது இயல்பு. நாம் எட்டப்பன் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். எட்டப்பனை கதிர்காமரோடு ஒப்பிட்டால் எட்டப்பன் ஒரு அப்பாவி போல் காட்சி தருவான். அத்தனை கொடியவன் கதிர்காமர் என்பது பொருள்.

துரோகிகளின் உளவியல் தாக்கங்களை விளங்கிக் கொள்வது கடினம். தமிழினத்தின் மீது கதிர்காமர் காட்டிய வெறுப்பும் துவேசமும் அளப்பரியது. இதுவே அவருடைய மூலதனம். "தமிழர்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, அரசுக்கு விசுவாசமாக இருக்கிறேன். அதுவொன்றே எனக்குப்போதும்" என்று கதிர்காமர் பல முறை கூறியுள்ளார். தமிழர்கள் சிங்கள இராணுவத்தால் கொல்லப்பட்டபோது, நவாலி கிறிஸ்தவ தேவாலயத்தில் சரண்புகுந்த அகதிகள் விமான குண்டுவீச்சில் கொல்லப்பட்டபோது சர்வதேச நிறுவனங்கள் கண்டித்தன. அதே சர்வதேச நிறுவனங்களை சிறீலங்காவின் உள்விவகாரங்களில் தலையிடவேண்டாம் என கதிர்காமர் எச்சரித்தார். றிவிரச இராணுவ நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்த மக்களுக்கு கிடைக்கவிருந்த நிவாரண உணவுப்பொருட்களை வரவிடாமல் அவர் தடுத்தார். பேரினவாதிகளின் கரகோசமும் நன்மதிப்பும் அவருக்கு உற்சாக மூட்டின. சிங்களவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்த அவரைத் தமிழினம் ஒட்டுமொத்தமாக வெறுத்தொதுக்கியது. தன்னுடைய அழிவைத் தானாகத் தேடிய மனிதன்தான் கதிர்காமர்.

தனது பத்து வருடப் பதவிக்காலத்தில் கதிர்காமர் தன் மனைவி பிள்ளைகளிடமிருந்து ஒதுங்கி வாழ்ந்தார். மறுதார விவாகம் செய்த சிங்கள மனைவியுடன் அவர் தனக்குத் தானே அமைந்த சிறைக்குள் வாழ்ந்தார். அவருடைய மறைவுச் செய்தி கேட்டதும் ஈழத் தமிழர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து வெடிசுட்டுக் கொடி பிடித்துக் கொண்டாடினர். ஒரு இனத்துரோகிக்குத் கிடைத்த பரிசு என்றுதான் இதை வர்ணிக்கலாம்.

கலை
பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

இருபத்திநான்காம் ஆண்டு
செப்ரெம்பர்
2005

திருவள்ளுவர் ஆண்டு 2036

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
பிரான்ஸ்

https://tamileelamarchive.com/

தாவித்

# கதிர்காமத்தெய்வமே

லக்ஸ்மன் கதிர்காமர்: இலங்கை அரசின் வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகித்தவர். தமிழ் பேசத்தெரியாத இந்தத் தமிழ்க்குடிமகன் தலைநகரின் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் வைத்துப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். படுகொலை செய்யப்பட்ட அடுத்த நாளே ஏதோ முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்டது போல சூத்திரதாரிகள் என விடுதலைப்புலிகளை நோக்கி அரசின் குரல்கள் ஒலித்தன, கைகள் நீண்டன. அவர் படுகொலை செய்யப்பட்டபோது அவரின் பாதுகாப்பிற்கு பொறுப்பாக ஐந்து பேரே இருந்துள்ளனர் என ஒரு ஊடகம் செய்தியொன்று தெரிவிக்கின்றது. கதிர்காமரின் பாதுகாப்பிற்கென 76 கொமாண்டோக்கள் உட்பட 150 பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எனினும் கதிர்காமர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட வீடு எதுவென அறிந்து கொள்ள முடியுமாக இருந்த போதிலும் அந்த வீட்டில் பாதுகாப்புப் படையினர் 3 மணிநேரத்தின் பின்னரே தேடுல் நடத்தியுள்ளனர். அத்துடன் அந்த வீட்டிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்த இடமெனக் கூறப்படும் ஜன்னலை மறைக்கும் விதத்தில் இருந்த மரத்தின் கிளைகள் இருவாரங்களுக்கு முன்னரே வெட்டப்பட்ள்ளன. இது குறித்து பாதுகாப்புத் தரப்பு உரிய கவனம் செலுத்தியுள்ளதாக தெரியவில்லை. கதிர்காமரின் சொந்த வீட்டின் பாதுகாப்பு சம்பந்தமாக பல தடவைகள் வேண்டுகோள் விடப்பட்டிருக்கிறது. ஆனால் அவை செவிமடுக்கப்படவில்லை. தற்போது அமைச்சரின் பாதுகாப்பிற்கென இருந்த கொமாண்டோக்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கதிர்காமரின் உடலையும் அவரின் உத்தியோகபூர்வ இல்லத்தையும் பாதுகாப்பதற்கே கொமாண்டோக்கள் பொறுப்பாக இருந்தனர் என்றும் அவரின் சொந்த வீட்டை பாதுகாக்கும் பொறுப்பு அவர்கள் வசம் இருக்கவில்லை என்றும் கூறப்படுகிறது. அதே போன்று அயலிலுள்ள வீடுகளையும் சோதனையிடும் உரிமை தமக்குக்கிடையாதென்றும். அவர்கள் கூறுகின்றனர். இவை அனைத்தும் பொலிசாரின் கடமைகள் என்பதே கொமாண்டோ வீரர்களின் கருத்தாக உள்ளது.

நாட்டின் பாதுகாப்புச் செயலாளரான மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தன அமைச்சரின் உறவினராவார். அமைச்சரின்



பாதுகாப்பு ஆலோசகராக பாதுகாப்பு செயலாளரின் சகோதரரான லெப்டினன் கேணல் சரத் ஜயவர்த்தனாவே செயற்பட்டு வந்திருக்கிறார்.

இவ்வாறான பாதுகாப்பு மத்தியில் உள்ள ஒருவரை அதுவும் மிகப் பாதுகாப்புமிக்க அந்த மையத்துள் எவ்வாறு கொலையாளிகள் நுழையமுடியும். என்கிற கேள்வி பல சந்தேகங்களைக் கிளப்புகின்றன. மேலும் தமிழ் நாதம் இணையத்தளத்தில் இவர் குறித்து எழுதப்பட்ட கட்டுரையின் ஒரு பகுதியை பார்ப்போம்.

“தமிழர்க்கு எதிரான இந்தச் சதிவலையின் நாயகன் ஆனந்தசங்கரிதான் என்ற தகவல்களும் வெளியாகியிருக்கின்றது. இதில் விமல் வீரவன்சவும் இன்னும் ஒரு அதிதீவிர பௌத்த பேரினவாதியும் சம்பந்தப்பட்டிருந்தார்கள். தமிழ்த் தேசியத்துக்கு எதிரான கூட்டமைப்பு ஒன்றினை ஏற்படுத்துவதற்காக இவர்கள் இரகசியமாக ஓரிடத்தில் சந்தித்தனர். அமைச்சர் கதிர்காமர் படுகொலை செய்யப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர்தான் இச்சந்திப்பு நடந்தது. இந்த இரகசியச் சந்திப்பின் ஏற்பாட்டாளராக அமைச்சர் கதிர்காமரே இருந்ததுடன், அவரும் அந்தரங்கமான இந்தச் சதியாலோசனையில் பிரசன்னமாயிருந்தாராம்.

மறைந்த சங்கர் ராஜி தலைமையிலான ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எப். (வரதர் அணி), ஈ.என்.டி.எல்.எப். முன்னாள் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையிலான ஈ.பி.டி.பி. ஒரு பிரிவு, புளொட், மற்றும் ஆனந்தசங்கரியும் அவரது ஆதரவாளர்களும் வலுவான பின்னணிச் சக்தி ஒன்றின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொண்டதும், அதன் தலைவராக ஆனந்தசங்கரி தெரிவு செய்யப்பட்டிருந்தமையும் ஏற்கனவே தெரிந்த விடயம்.

தமிழ்த் தேசியத்திற்கு எதிரான இந்தக் கூட்டமைப்பின் தலைவர் ஆனந்தசங்கரியுடன் பௌத்த பேரினவாத கட்சிகளையும் இணைத்து அகன்ற சதிவலைக் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது, அம்மையாரின் அரசியல் அஸ்த்தமனத்திற்கு அப்பால் அடுத்த தலைமைக்கு வலுச்சேர்ப்பதன் மூலம் தனது அரசியல் எதிர்காலத்தையும் உறுதிப்படுத்திக் கொள்வது போன்ற பல்நோக்குத் திட்டத்துடன் அமரர் கதிர்காமர் தன்னுடைய சதித் திட்டத்தை தீட்டியிருந்தமையையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

அந்தரங்கமாய் நடந்த விடயம் எப்படியோ அம்மையாருக்குத் தெரிந்து விட்டது. உண்மையில் இந்தச் சதித்திட்டம் நிறைவேற்றப்பட்டால் தனது தம்பியாரின் அரசியல் மட்டுமல்ல பண்டாரநாயக்கா வம்சத்தின் அரசியல் எதிர்காலமே அஸ்த்தமனமாகி விடுமென ஆழமாகச் சிந்தித்தார் அம்மையார். அமைச்சர் அவர்கள் அமரரானார். அனுரா (வெளி விவகார) அமைச்சரானார்.

இவை தவிர கதிர்காமர் வீட்டிற்குத் துக்கம் விசாரிக்கச் சென்ற ஜே.வி.பி. மற்றும் சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்கள், கதிர்காமரின் கொலை தொடர்பாக ஜனாதிபதி தேசிய தொலைக்காட்சியில் ஆற்றிய உரையில் விடுதலைப்புலிகள் அமைப்பை கடுமையாக விமர்சிக்கவில்லையென சுகந்தி கதிர்காமருடன் உரையாடும் போது சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். இவ்விடயமும் ஜனாதிபதியின் காதுக்கு எட்டியமை தொடர்பாக கடந்த 14 ஆம் திகதிய ‘சண்டே லீடர்’ பத்திரிகையில் செய்தி ஒன்று வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது” என அது கூறுகிறது.

இப்போதோ அது சற்றுச் சுருதிகுறைந்து அடக்கிவாசிக்கப்படுகிறது. உள்ளக முரண்பாடுகள் தாராளமாக உலவுகின்ற பொதுஜன ஐக்கிய முன்னணியினுள்ளே பல தலைகள் கதிர்காமரின் வீழ்ச்சியை அத்தியாவசியமானதாகக் கருதுவதாகக் கதைகள் உலவுகின்றன. கதிர்காமரின் கொலையை யார் செய்தார்கள் என்ற ஆய்வினை நிபுணர்களுக்கு விட்டுவிட்டு

https://tamileelamarchive.com/

கதிர்காமர் என்ற மனிதரை, அவரது செயற்பாடுகளை, சிங்களப்பேரினவாதிகளால் அவர் 'தமிழ்' தியாகி ஆக்கப்பட்டதைக் குறித்துப் பார்ப்போம்.

தமிழர் தெய்வமான கதிர்காமக் கந்தனை சிங்களவர்கள் கதறகமத்தெய்யோ என மாற்றினார்கள். இன்று இலங்கையில் நிலவும் அரசியற்சூழலில் ஜாதிக ஹெல உறுமயவும் ஜனதாவிமுக்தி பெரமுனவும் கதிர்காமரைத் தெய்வமாக்கினாலும் அது அதிசயமில்லை. கதிர்காமரின் இறுதிக்கிரியைகளுக்குப் பின்னர் மஹிந்த ராஜபக்ஷ கூட்டிய மாநாட்டில் கதிர்காமர் ஒரு யுகபுருஷர், தேசியவீரர் என்று முழங்கினார். ஜாதிகஹெலமய உறுமயவும் சளைத்தது அல்ல. கதிர்காமரைக் கொலை செய்த புலிகளைத்தடை செய்ய வேண்டும் அதுதான் அவருக்கு நாம் செய்யும் நன்றிக் கடன் என்று நாடு நாடாகச் சென்று பரப்புரை நிகழ்த்திவருகிறது. இவர்களின் இந்த நன்றியுணர்வுக்கு கதிர்காமர் பாத்தியதை உடையவரா என்றால் 'அதையும் தாண்டி' என்றுதான் சொல்லவேண்டும். உப்பிட்டவரை உள்ளளவும் நினை சிறுநீரகம் தந்தவரை சிதையிற் போகும்வரை நினை என்பதற்கிணங்க கதிர்காமர் நடந்துகொண்டார்.

1994 இல் சமாதானத்தின் தேவதையாக பதவிக்கு வந்த சந்திரிகா அம்மையார் வெளிவிவகார அமைச்சிற்கு பொருத்தமான ஆள் தேடித்தருமாறு 'தீர்வுப்பொதி' புகழ் நீலன் திருச்செல்வத்தைக் கேட்டபோது அருமையான முட்டாள் கைவசம் இருப்பதாக அவர் கூறினாராம். அவர் வேறு யாருமல்ல சாட்சாத் கதிர்காமரே தான். ஹிட்லருக்கு கோயபல்ஸ் கிடைத்தது போன்றது சந்திரிகாவுக்குக் கதிர்காமர் கிடைத்தது. 94இல் வெளிவிவகார அமைச்சராகப் பொறுப்பேற்றதிலிருந்து எஜமான விசுவாசத்தோடு கதிர்காமர் தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு முட்டுக்கட்டை போடும் முயற்சிகளில் முழுமூச்சாக இறங்கினார். தான் தமிழன் என்ற ஒரு சான்றிதழையே துருப்புச்சீட்டாக வைத்துத் தனது அரசியல் சாணக்கியத்தையும் புலமையையும் கொண்டு சர்வதேச அரங்கில் விடுதலைப் புலிகளுக்கு நெருக்கடிகளைக் கொண்டு வரப்பாடுபட்டார். அதில் ஓரளவு வெற்றியும் கண்டார். குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் விடுதலைப் புலிகளைத் தடை செய்யவைத்தமை புலிகள் சிறுவர்களைப் படையிற் சேர்ப்பதாக ஐ.நா.விற்கு அழுத்தம் கொடுத்து ஐ.நா.சிறுவர் நிதியப் பிரதிநிதி ஒலாரா ஒட்டுனு அவர்களைச் சிறீலங்காவிற்கு வரவழைத்துக் காட்டமான அறிக்கைகளை வெளிவிடச் செய்தமை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

கதிர்காமரின் முக்கிய செயற்பாடு புலம் பெயர்ந்து தமிழர் வாழும் நாடுகளின் இலங்கைத் தூதரகங்களுக்கு புத்துணர்ச்சி ஊட்டியது. 'ரைம்ஸ்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் இது பற்றி அவர் சிலாகித்துக்கூறி உள்ளார், "நான் அமைச்சராக பொறுப்பேற்ற போது, கனடாவில் ஏராளமான தமிழர்கள் இருந்தார்கள். ஆனால் அவர்களின் பெயர் பட்டியலையோ அல்லது அவர்களுடனான எந்த தொடர்பையோ அங்குள்ள தூதரகம் கொண்டிருக்கவில்லை. இப்போதே படிப்படியாக அதனை உருவாக்கி வருகின்றோம் அதேபோல ஏனைய நாடுகளிலும் செய்து வருகின்றோம்." ஆம். கதிர்காமர் சிங்களத்தின் அடிவருடியாக எவ்வாறு பிரபல்யம் பெற்றார் என்பதற்கான அவரது நேரடி வாக்குமூலமே இது.

புலம்பெயர்ந்த தமிழர்களுள் விலைபோகக்கூடியவர்களை உள்ளடக்கிய வலைப்பின்னலை உருவாக்கிப் பலப்படுத்தியவர் கதிர்காமர். கனடாவில் குறிப்பிடத்தக்க வெற்றியும் பெற்றிருந்தார். கனடாவுக்கான இணைத் தூதுவராக சி.எஸ் பூலோகசிங்கம் என்ற 'தெமிழ'ரை நியமித்து அவருடாக இலங்கைக்கு அடுத்தபடியாக, அதிகளவு இலங்கைத்தமிழர் புலம்பெயர்ந்து வாழும் கனடாவிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு தமிழர்களுக்கிடையிலான உறவுவலையை விஸ்தரித்தார். கனடாவின் இலங்கைத் தூதரகம் அதன் பின்னர் எடுத்திருந்த நடவடிக்கைகள் சிலவற்றை இங்கு காண்போம். சென்ற வருடம் நிகழ்ந்த பொங்குதமிழ் விழாவுக்கு வருகை தரவிருந்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களின் விசாக்கள் மறுக்கப்பட்டதன் பின்னணியில் இலங்கைத்தூதரகம் இருந்திருக்கின்றது. இங்கிருந்து நடைபெறும் தமிழ் ஊடகங்களின் ஒற்றுமையை உடைப்பதற்கும் முயற்சி எடுத்திருக்கின்றது. சுனாமிப் பேரழிவின்போது கனேடியத் தமிழ்மக்கள் கொடுத்த அழுத்தத்தை மீறிய, எதிர் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதன் மூலம் கனேடிய பிரதமர் வட கிழக்குப்பகுதிகளுக்குச் செல்ல முடியாது போனமை, வொண்டலான்ட் எனப்படும் பொழுதுபோக்குப் பூங்காவில் வருடாவருடம் இலங்கையர் தினம் என ஒரு நாளில் கேளிக்கை களியாட்டங்களை நடாத்தி தமிழரைக்கவர எடுத்த முயற்சிகள், தமிழர் தரப்பினால் தமிழர் நாள் ஒழுங்கு செய்யப்பட்டு அது தமிழர் மத்தியில் அமோக வரவேற்பை பெற்றதில் பிசுபிசுத்துப்போயிருக்கிறது. பதவிக்கும், பவுசுக்கும் ஆகவேண்டி, இறங்க கூடாத ஆழங்களுக்கெல்லாம் இறங்கி முகத்தில் கரி பூசிக்கொண்ட நிகழ்வுகள் கதிர்காமர் வாழ்வில் நிறையவே உண்டு.போர்க் காலத்தில் புதுக்குடியிருப்பு குண்டு வீச்சினை ஐ.நா கண்டித்த போது "நுளம்புக்கு மருந்தடிப்பது போன்ற விடயங்களுடன் ஐ.நா நின்று கொள்ளவேண்டும்" என்று கூறியதன் மூலம் ஒரு பொறுப்பான அமைச்சர் என்ற உயரத்திலிருந்து தலைகுப்புற வீழ்ந்தவர். பொதுநலவாய அமைப்பின் தலைமைப் பதவிக்கான போட்டியில் இறங்கி பொய்யான தகவல் களைக்கூறி தோற்றுப்போய் மூக்குடைந்தவர். நோர்வேயை சமாதான முயற்சிகளில் இருந்து புறந்தள்ளி இந்தியாவை நுழைக்கும் திரைமறைவு முயற்சிகளில் தோல்வி கண்டவர். எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தது போல எந்த விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் என்று சர்வதேச அரங்கில் சித்தரிக்க முயன்றாரோ, அதே விடுதலைப் புலிகள் தர்மத்தின் பாதையில் பிறழாது எடுத்து வைத்த உறுதியான அடிகள் ஒவ்வொன்றாலும் இன்று சர்வதேச அரங்கில் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப்படுகின்றனர். இது ஒன்றே போதாதா கதிர்காமரின் பதவிக்காலப் பகீரதப்பிரயத்தனங்கள் அத்தனையையும் சுக்குநூறாக்கி விட. கதிர்காமர் காற்றிறங்கிய பலூன். அதைக் குத்தி உடைக்க வேண்டிய அவசியம் புலிகளுக்குக் கிடையாது.

இப்போது ஜேவிபியும், ஜாதிக ஹெல உறுமயவும் கதிர்காமரை தலையில் தூக்கி வைத்து கொண்டாடுகிறார்கள் - விட்டால் கெப்பிட்டிக் கொல்லாவவின் மறு ஜென்மம், துட்டகைமுனுவின் அவதாரம் என்றெல்லாம் கூறிவிடுவார்கள் போலுள்ளது. கதிர்காமர் இருக்கும் போதும் அவரை வைத்து அரசியல் செய்தார்கள் (இதோ பாருங்கள் பச்சைத்தமிழன் எம்பக்கம் என்று) இறந்த பிறகும் அவரை வைத்து அரசியல் செய்கிறார்கள். 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்' இன்னும் கதிர்காமர்கள் இலங்கையில் இருக்கிறார்கள்.

மேலைத்தேயக் கல்வி முறையின் அச்சுக்களில் வார்க்கப்பட்டு வெளித்தள்ளப்படும் இந்த மேதாவிகள் தமது புலமையையும் சாணக்கியத்தையும், வெறும் பதவிகளையையும் அது தரும் சுகபோகங்களையும் அதிகாரங்களையும் விரும்பி, ஆதிக்க அரசு தம்மை கருவியாக ஆட்டுவிக்க அனுமதிக்கின்றனர். தமது கல்வி வரம்புகளுக்குள் மட்டுமே நின்று கொள்கின்ற இவர்கள், அடித்தட்டு மக்களின் அபிலாஷைகளையோ, சுதந்திரமென்பதன் முழுமையான புரிதலையோ கொண்டிருக்காததுடன் தீர்க்கதரிசனமான பார்வையையும் இழந்து விடுகிறார்கள். அத்தகைய பரம்பரை ஒன்று இலங்கையின் அரசியல் வரலாற்றில் வழிவழியாக தொடர்ந்த வண்ணம் உள்ளது.

1978ம் ஆண்டின் ஜே.ஆரின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியல் யாப்பினை வடிவமைத்தவர் பேராசிரியர் ஏ.ஜே வில்சன். தந்தை செல்வாவின் மருமகன். இவரே 80 களின் தொடக்கத்திலேயே தமிழர் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் அடிப்படைகளை உணர்ந்து அதன் ஆதரவு சக்தியாக மாறினார்.

எனவே எஞ்சியுள்ள கதிர்காமர்கள் தூரநோக்குப் பார்வையோடும், விசாலமான உலக வரலாற்றுப் பார்வையோடும் தமிழர் தேசிய போராட்டத்தை நோக்கவேண்டும்.

https://tamileelamarchive.com/

நாதன்

# களிப்புறு கணத்திற்கான காத்திருப்பு!

**- பாலஸ்தீனம் போன்று தமிழர் தாயகத்திலிருந்தும் பலாத்கார குடியேற்றங்கள் அகற்றப்படுவது அவசரமான சமாதான பலப்படுத்தல் நடவடிக்கையாகும். இல்லையெனில் அதுவே சர்வதேச சமாதான முயற்சிகளின் தோல்விக்கு வழிகோலும் -**

பலஸ்தீனத்தின் காசாப் பிராந்தியத்தை (Gaza) பலாத்காரமாக ஆக்கிரமித்து நின்ற பல்லாயிரம் யூத குடியேற்றவாசிகள் இஸ்ரேலிய இராணுவத்தின் துணையுடன் அவ்விடங்களை விட்டு அகற்றப்பட்டுள்ளனர். அந்த மண்ணின் உரிமையாளர்களான பலஸ்தீனியர்கள் மீள தமது வாழிடங்களையும் - கிராமங்களையும் நிர்மாணிக்கும் பொறுப்பைப்பெற்றுள்ளனர். இதனை "மிகக் களிப்புறும் கணம்" என பலஸ்தீனிய அதிபர் மகமட் அப்பாஸ் வர்ணிக்கின்றார்.

இராணுவ வெற்றிகளின் மூலம் அல்லது ஒடுக்குமுறை மூலம் கைப்பற்றப்பட்ட பலஸ்தீன நிலப்பரப்புக்களில் யூதர்களைக் குடியேற்றுவது "நிலத்தில் புதிய உண்மையை" (create facts on the ground) உருவாக்கும் நடவடிக்கை என அன்றைய இராணுவத்தளபதியும் இன்றைய பிரதமருமான அரியல் சரோன் அன்று விபரித்தார். இவ்வாறு உருவாக்கப்பட்ட உண்மை எக்காலத்திலும் பலஸ்தீனியர்களிடம் இந்த நிலத்தினை மீளக் கொடுப்பதற்கு அனுமதிக்காது என இஸ்ரேலியத் தலைவர்கள் நம்பினர். இந்தக் குடியேற்றங்களை இன்று அதே அரியல் சரோனின் ஆட்சியின் கீழ், அதே இஸ்ரேலிய இராணுவம் அகற்ற முற்படுவது ஒரு நீண்ட விட்டுக்கொடுப்பற்ற பலஸ்தீன எழுச்சியின் விளைவென்றே நோக்கப்படும். இதனை இஸ்ரேல் பகிரங்கமாகவும் ஒப்புக் கொள்கின்றது. இந்த நிலப்பரப்புக்களைப் பராமரிப்பதும், பாதுகாப்பதும் இராணுவ, பொருளாதார, இராஜதந்திர மற்றும் அரசியல் சுமை என இப்போது அவர்கள் கூறுகின்றனர்.

மத்திய கிழக்கு முரண்பாட்டுத் தீர்வுக்கான பாதை வரைவின் (road map for peace) முக்கிய அம்சமாக பாலஸ்தீன நெருக்கடி இருப்பதால் இந்தக் குடியேற்றங்களை அகற்றும் நடவடிக்கையை அமெரிக்கா ஆதரிப்பதாக அதிபர் புஸ் கூறுகின்றார். எனினும், ஐரோப்பிய சமூகம் குறிப்பாக பிரான்ஸ் இந்த நடவடிக்கையினை மிக உச்சமான விட்டுக் கொடுப்பாகக் கருதாவிடினும், ஒரு நல்ல முன்னறிவிப்பாகக் கருதுகின்றது. இதன் மூலம், பலாத்காரக் குடியேற்றங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அப்புறப்படுத்துவது தீர்வுக்கான பாதையின் ஒரு தவிர்க்க முடியாத தேவையென்பதை உலக சமூகம் அங்கீகரித்துள்ளது.

காசாவின் தொடர்ச்சியாக மேற்குக் கரை பகுதிகளில் உள்ள சுமார் 200000 யூதக் குடியேற்றவாசிகளையும் அப்புறப்படுத்த வேண்டிய பொறுப்பும் இஸ்ரேலிய அரசுக்கு உள்ளது. தற்போது காசாப் பகுதியில் பலஸ்தீன நிர்வாகம் மேற்குலகை திருப்திப்படுத்தும் விதத்திலான அரசு உரு



https://tamileelamarchive.com/





வாக்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டு நீண்ட கால யுத்த நெருக்கடி தணிப்புக்கு உத்தரவாதம் அழித்திட வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது.


இந்த நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகவும், தவிர்க்க முடியாத விளைவாகவும் சுதந்திரமான பலஸ்தீனம் உருவாக்கப்படும். இதனை இன்றைய அமெரிக்க நிர்வாகம் உட்பட அனைத்து உலக நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. இரு நாடுகளும் நல்ல அயலவர்களாக வாழுவது என்பதே அமெரிக்காவின் நிலைப்பாடு என அதிபர் புஸ் நிர்வாகம் இதனை விபரிக்கின்றது.

பலாத்கார குடியேற்றங்களை அகற்றும் இந்த நடவடிக்கையினை அகன்ற இஸ்ரேல் எனும் கனவின் முடிவு என பிரான்சின் பிரபல பல்கலைக்கழகமான சேர்பன் பல்கலைக்கழக யூத வரலாற்றுப் பேராசியர் ஒருவர் வர்ணிக்கின்றார். நைல் நதிக்கரையிலிருந்து அகன்று விரிந்த யூதப் பேரரசை உருவாக்கும் எண்ணத்திற்கு ஏற்பட்ட பின்னடைவாக இதனை இவர் விபரிக்கின்றார். யுத்தத்தினால் பிடித்த மண்ணை குடியேற்றங்களால் ஆக்கிரமித்து காசா, மேற்குக் கரை உட்பட முழு பலஸ்தீனத்தினதும் தாயகக் கோட்பாட்டை கேள்விக்குள்ளாக்கும் இஸ்ரேலிய முயற்சி ஈற்றில் தோல்வியுறுகின்றது. அதுவே சமாதானத்திற்கான நம்பகமான திறவுகோலாகவும் அமைகின்றது.

* * * * *

பலாத்காரக் குடியேற்றம், நிலப்பறிப்பு என்பவை தமிழீழ தேசத்திற்கும் பரீட்சயமானதொரு முக்கிய அடக்குமுறை வடிவமாகும். ஒடுக்கப்பட்ட மக்கள் சமூகம் தமது பாரம்பரிய வாழிடங்களை விட்டு விரட்டப்படுவதும் அங்கு பலாத்கார குடியேற்றத் திட்டங்கள் இடம்பெறுவதும் பலஸ்தீனத்தைப் போன்றே தமிழர் தாயகத்திலும் இடம்பெற்று வந்துள்ளது. திருமலை, அம்பாறை ஆகிய இரு முக்கிய தமிழர் தாயக நிலப்பரப்புக்கள் இந்த நடவடிக்கைகளினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

சிங்கள தேசம் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாகவே தமிழர் தாயகத்தினை சிதைத்தழிக்கும் போரினை ஆரம்பித்து நடாத்திவருகின்றனர். அரியல் சரோனின் "நிலத்தின் உண்மையை உருவாக்கும்" முயற்சியினை அவரிற்கு முன்னரே சிங்கள தேசம் ஆரம்பித்துவிட்டது. விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் வாயிலாகவும், மீன்பிடி வாய்ப்புக்கள் வாயிலாகவும் பல்லாயிரம் சிங்களவர்களைத் தமிழர்களின் தாயகப் பகுதிகளில் சிறீலங்கா அரசு குடியேற்றியது. வடக்குக்கிழக்கு என்கின்ற தாயக பகுதிகளின் நிலத் தொடர்ச்சியினை இந்த பலாத்கார குடியேற்ற வழிமுறைகள் மூலம் உடைத்து துண்டாடி விடுவது தமிழர்களின் தேசிய உரிமைக் குரலை நசுக்குவதற்கான உறுதியான வழிமுறை என்பதைக் கணித்து இந்தக் குடியேற்றங்கள் இடம்பெற்றன.




அடிப்படையில் தமிழர் இருப்புக்கு எதிரான சிங்களத்தின் முதல் முக்கிய நடவடிக்கையாகவும் பலாத்கார குடியேற்றத்திட்டங்களைக் கொள்ளலாம்.

திருமலையிலும் அம்பாறையிலும் 3 வீதமாக இருந்த சிங்களவர்களின் எண்ணிக்கை 30 வீதத்திற்கும் மேலாக உயர்ந்தமை இந்த திட்டமிடப்பட்ட ஆக்கிர

https://tamileelamarchive.com/

> தமிழர் தாயகத்தில் புத்த சிலை நடுதல், குளங்களுக்கும் - அணைகளுக்கும் புதிய வரலாற்றைக் கற்பித்தல், சிங்கள குடியேற்றத்திட்டங்களை உருவாக்கல் - பாதுகாத்தல் போன்ற அருவருப்பான நடவடிக்கைகளை கைவிடுமாறு நிர்ப்பந்திக்க வேண்டிய தேவை சர்வதேச சமூகத்திற்குள்ளது.
>
> மாறாக, இந்த நாசகார திட்டங்களை மௌனமாக அனுமதிப்பது தமிழர்களை மீள ஆயுதம் தரித்த போரிற்குள் தள்ளும் நடவடிக்கையாகவே அமையும்.
>
> பாலஸ்தீனத்தை விட்டு இஸ்ரேல் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் தொடர்ச்சியான போராட்டம் மூலம் ஏற்படுத்தப்பட்டது போன்று தமிழர்களும் விட்டுக் கொடுப்பற்ற போராட்டம் ஒன்றின் மூலமே இந்த நிலப்பறிப்பை வெற்றி கொள்ளலாம் என்கின்ற நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

மிப்பின் வெளிப்பாடாகும். இதனால் இன்று திருமலை, அம்பாறை போன்ற தமிழர்களின் பாரம்பரிய தாயக தேசத்தைப் பல்லின மக்களின் வாழிடமாக சிறீலங்கா அரசு பரப்புரை செய்து வருகின்றது.

* * * * *

திருமலையில் பலாத்காரமாக வைக்கப்பட்டு இராணுவத்தினால் பாதுகாக்கப்படும் புத்தர் சிலை விவகாரம் இந்த பலாத்கார குடியேற்ற அரசியலின் நீட்சியேயாகும். இது இன்றைய தமிழ் சிங்கள உறவுகளின் ஒரு முக்கிய தெறிப்புப் புள்ளியாகவுமுள்ளது.

தமிழர் வாழிடங்களின் மையத்தே சிறீலங்கா கடற்படையின் உதவியுடன் சிங்கள தேசியவாத வெறியர்கள் முன்னின்று இந்த புத்தர் சிலையை நிர்மாணித்துள்ளனர். சிங்கள அரசு, கொழும்பு நீதித்துறை என்பன இந்த தர்ம விரோத நடவடிக்கையை வலுவாகத் தாங்கிப் பிடிக்கின்றன.

இந்தப் புத்தர் சிலை கிழக்கு மாகாண நிலப்பரப்பில் வைக்கப்பட்ட 12வது சிலை என்பதும், தொடர்ந்தும் அடுத்தடுத்து சிலைவைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதும் சிங்களம் தன் பலாத்கார ஆக்கிரமிப்புத் தன்மை மீது வைத்துள்ள விட்டுக் கொடுப்பற்ற ஈடுபாட்டை வெளிக்காட்டுகின்றது.

இந்தப் புத்தர் சிலைகள் சிறீலங்காவின் இறைமை மற்றும் அரசமைப்பு எல்லைகளின் நிலைகளுக்குள் எக்காலத்திலும் அகற்றப்படப் போவதில்லை. மாறாக, இந்தப் புத்தர்சிலை சார்ந்த குடியேற்றங்கள், வணிக நடவடிக்கைகள், வரலாற்றுத் திணிப்புக்கள் மூலம் தமிழர் தாயகம் இழக்கப்படும் அபாயமேயுள்ளது.

தமிழர்களின் பொதுசன சமூக அமைப்புக்கள் இந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளும் இன்றுவரை எதுவித காத்திரமான பலனையும் தரவில்லை. மாறாக, இராணுவக் குவிப்புக்கும், வன்முறைப் மயப்படுத்தும் சிறீலங்காவின் உத்திக்குமே இவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

* * * * *

அனைத்துலக சமூகத்தின் ஆதரவுடனும், அனுசரணையுடனும் இடம்பெறும் சமாதான நடவடிக்கைகளின் மத்தியிலேயே சிங்கள அடக்குமுறையாளர்கள் "புதிய சிங்கள உண்மைகளை" தமிழர் தாயகத்தில் ஏற்படுத்த முனைவது பலஸ்தீனத்தில் இடம்பெற்ற யூத குடியிருப்புக்கள் போன்று அனைத்துத் தரப்பினதும் கவனத்தையும் ஈர்க்க வேண்டிய நடவடிக்கைகள் ஆகும்.

இந்த நிலப்பறிப்பு நடவடிக்கைகளை சமாதான காலத்திலும் தொடர்வதன் அடிப்படை புரிதலுக்கு இலகுவானது. தமிழர்களின் தேசிய சுயநிர்ணய கோட்பாட்டின் அச்சு இந்தத் தாயகம் என்கின்ற தளத்திலேயே நிற்கின்றது. இந்த அச்சினை உடைக்கும் அரசியல் கணிப்பீடுகளுடன் சிங்களம் தொடர்ந்து விரைந்து செயற்பட முனைகின்றது. புத்தர் சிலைகள் நடப்படுவது இந்த ஆக்கிரமிப்பு எண்ணத்தின் குறியீடாகும்.

மறுபுறம், தமிழர்கள் இந்த நிலப்பறிப்பு நோக்கையும், இலக்கையும் எதிர்த்து போராடுபவர்கள். இந்த நிலத்தினை உள்ளடக்காத தீர்வு எதற்கும் அவர்கள் தயாராக இருக்கப் போவதில்லை. புத்தர் சிலைகள் அகற்றப்படுவது இந்த வேண்டுதலின் குறியீட்டுரீதியான வெற்றியாக அமையும்.

இது சர்வதேச இணக்க முயற்சிகளுக்கு பெரும் தடையாக இருக்கப் போவதுடன் அமைதி வழி மூலமான தீர்வுக்கான பாதையை முற்று முழுதாக மூடும் அபாயத்தை வெளிக்காட்டுகின்றது.

தமிழர் தாயகத்தில் புத்தர் சிலை நடுதல், குளங்களுக்கும் - அணைகளுக்கும் புதிய வரலாற்றைக் கற்பித்தல், சிங்கள குடியேற்றத்திட்டங்களை உருவாக்கல் - பாதுகாத்தல் போன்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை கைவிடுமாறு நிர்ப்பந்திக்க வேண்டிய தேவை சர்வதேச சமூகத்திற்குள்ளது.

மாறாக, இந்த நாசகார திட்டங்களை மௌனமாக அனுமதிப்பது தமிழர்களை மீள ஆயுதம் தரித்த போரிற்குள் தள்ளும் நடவடிக்கையாகவே அமையும்.

பலஸ்தீனத்தை விட்டு இஸ்ரேல் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் தொடர்ச்சியான போராட்டம் மூலம் ஏற்படுத்தப்பட்டது போன்று தமிழர்களும் விட்டுக் கொடுப்பற்ற போராட்டம் ஒன்றின் மூலமே இந்த நிலப்பறிப்பை வெற்றி கொள்ளலாம் என்கின்ற நிலை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

https://tamileelamarchive.com/



மீரா



# காசாவிலிருந்து யூதக் குடிகள் வெளியேற்றம்



இஸ்ரேல் வெற்றிகரமாக காசாவில் வாழ்ந்த யூதக் குடியேறிகளை வெளியேற்றியது. யூதக் குடியேறிகளின் வெளியேற்றம் முடிந்து விட்டது. இஸ்ரேல் சமூகமும், இராணுவமும் தங்கள் பலத்தையும், உறுதியையும் வெளிக் காட்டினர். குடியேற்றவாசிகள் இஸ்ரேல் அரசாங்கத்தின் உற்சாகத்திற்கு முன் பலமற்றிருந்தார்கள். காசாவில் இருக்கும் குஸ்கதிப் எனும் நகரத்திலுள்ள யூதக்குடியேறிகளின் வீடுகளை புல்டோசர்கள் இடித்துத் தூளாக்கிக்கொண்டு சென்றன.

அழகான வனப்பு நிறைந்த வீடுகளின் சிகப்பு நிறமான கூரையை சில நிமிடங்களில் அந்த புல்டோசரினுடைய பற்கள் அழித்தது. அங்கிருந்த ஒரு வீட்டுத் தோட்டத்தின் மரங்கள் மட்டும் நிற்க, தோட்டத்தின் புற்களையும், வாசலையும் அந்த மோசமான இயந்திரம் அழித்துவிட்டது. இந்த மக்களை வெளியேற்றின இராணுவ வீரர்களில் ஒருவர், "நான் மிகக் கவலையுடன் உங்களையும் இந்த வீட்டையும் விட்டு வெளியேற்றுகிறேன் என சுவரில் எழுதியிருந்தார்".

இயந்திரத்தை ஓட்டுபவர் இவற்றையெல்லாம் ஒன்றும் கணக்கிடுவதில்லை. வேகத்துடனும், பலத்துடனும் அந்த வீட்டின் கூரையை உடைத்து விழுத்துகிறார்கள். நிலம் நடுங்க வீடுகள் இடிந்து விழுகின்றன.

இஸ்ரேல் இராணுவமும் வீடுகளை உடனடியாக அழிக்கும் வேலையில் ஈடுபட்டனர்.

இராணுவத்தினருகே கொபி அதாத் என அழைக்கப்படும் ஒரு மனிதன் உடைந்து கிடக்கும் தனது வீட்டின் கற்களை அள்ளிக் கொண்டு அழுதபடி கூறுகின்றார் "இருபது வருடங்களாக இந்த வீட்டில் வாழ்ந்தேன், வீடு உடைந்த பின் நீங்கள் வந்து பார்க்கலாம் என்று இராணுவம் எனக்கு அனுமதி சீட்டொன்றை வழங்கியது. என் மனம் மிகவும் உடைந்திருக்கிறது ஆனால் என்ன செய்வதென்று தெரியாமல் இதுதான் நமக்கேற்பட்ட துன்பமும், முடிவும்" என கொபி அதாத் மேலும் கவலையுடன் சொன்னார்.

இஸ்ரேலியருக்கும், பலஸ்தீனியர்களுக்கும் உள்ள ஒப்பந்தத்தில் இடியுண்டதையெல்லாம் எகிப்த் நாட்டிற்கு கொண்டு செல்லப்படும். இதில் 80 வீதமான அழிவுகளை பலஸ்தீனியர்கள் மீண்டும் உபயோகிப்பார்கள் என்றும் மிகுதி 20 வீதமான அழிவுகளை எகிப்த் நாட்டிற்குக் கொண்டு செல்லப்பட்ட பின் அங்கு அதை அடக்கம் செய்வார்கள் என்றும் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன.

குஸ் கதிப் நகரத்தைப் போல பல்வேறு குடியேற்ற இடங்களில் இருக்கும் வீடுகளை அழிப்பதற்கான இயந்திரங்கள் அங்கு பேரிரைச்சலுடன் சென்று கொண்டிருந்தன. கனை தால் (Ganei Tal), மொறாக் (Morag), பீட் சடே (Peat Sadé), கதிப் (Katif), றபியா யாம் (Rafiah Yam ), நிசனித் (Nissanit) ஆகிய ஆறு குடியேற்றங்களில் இவ்வாறு வீடுகள் அழிக்கப்பட்டன.

குடியேற்ற வாசிகளில் பலரை இராணுவத்தினர் வலு கட்டாயமாக அந்த மண்ணிலிருந்து பிரித்தெடுத்துச்சென்றனர்.

அவர்கள் அழுகையுடனும், துயருடனும் அப்புறப்படுத்தப்பட்டனர். இஸ்ரேல் அரசு, வெளியேற வேண்டும் என்பதற்கான உத்தரவை கடிதம் மூலமும் அறிவித்திருந்தது. அதற்கோ யூத குடியேறிகள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். பின் மின்கம்பி வேலிகளைக் கூட அமைத்து இராணுவத்தினரின் நடவடிக்கைகளைத் தடுத்தனர். இதை அடுத்து இஸ்ரேல் இராணுவம் இந்த வெளியேற்ற நடவடிக்கையில் இறங்கியது. காசாப் பகுதியிலிருந்து வெளியேற மறுத்த இஸ்ரேலியர்களை வலு கட்டாயமாக வெளியேற்றும் பணி தொடர்ந்தது.

ஜெரூசலத்தில் ஏழு நாட்களுக்குள் இஸ்ரேல் இராணுவமும், பொலிசார்களும் தடங்களில்லாமல் ஒழுங்கான முறையில் காசா

https://tamileelamarchive.com/



வில் வசித்து வந்த குடியேற்ற வாசிகளையும் மற்றும் சீஜோர்தானியில் கைவிடப்பட்டிருந்த நான்கு குடியிருப்புக்களையும் முற்றாக அழித்தனர்.

இவை அனைத்தையும் அவதானித்துக் கொண்டு வந்திருந்த பலஸ்தீன மக்கள் இந்தக் கடைசி நாளில், நிலமை சீராகி வந்தால் அவர்களின் நிலங்களை அடைவார்கள் என பத்திரிகைகள் தெரிவித்திருந்தன.

அரியல் ஷரோன் கட்டளையிட்டவுடன் இஸ்ரேல் இராணுவம் சிரமேற்கொண்டு பணியைச் சிறப்புறச் செய்து முடித்தது என பத்திரிகைகள் பாராட்டுகின்றன. பெரும்பான்மையோர் அமைதியுடன் முதல் அமைச்சர் அரியல் ஷரோனையும், அரசு சொல்வதையும் செவிமடுத்தார்கள்.

ஆனால் சில பேர் தெருவில் நின்று இந்த வெளியேற்றத்திற்கெதிராக எதிர்ப்புத் தெரிவித்தார்கள். கோபமடைந்த நிலையில் போராடினார்கள். 150.000 பேர் தெல் அவில் எனும் நகரத்திலிருந்து ஊர்வலமொன்றைக் கூட நிகழ்த்தி "கட்டாயப்படுத்தி எம்மை இந் நிலங்களை விட்டு வெளியேற்றுகிறீர்கள்" எனும் கோசத்தை எழுப்பியபடி தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார்கள்.

பல நாடுகளிலிருந்து ஊடகவியலாளர்கள் அங்கு புறப்பட்டுச் சென்றனர். கடந்த காலங்களில் ஊடகவியலாளர்களை அவர்கள் வெறுப்புடனேயே பார்த்து வந்தனர். இத் தருணத்தில் இராணுவம் ஊடகவியலாளர்களையும் குடியேற்றவாசிகளையும் நன்றாகக் கவனித்துச் செயற்பட்டது.

இஸ்ரேல் அரசால் இராணுவத்திற்கு மிகத் தெளிவாகக் கொடுக்கப்பட்ட செய்தியை விளங்கிக் கொண்டு இராணுவம் செயற்பட்டது.

1967 ம் ஆண்டு இஸ்ரேலுக்கும் எகிப்து, ஜோர்டான், சீரியாவுக்கும் ஏற்பட்ட போராட்டம் தோல்வியில் முடிய இஸ்ரேல் காசாவை ஆக்கிரமித்துக்கொண்டது. அங்கு ஆக்கிரமிக்கப்பட்ட நிலப் பகுதிகளில் யூத மக்களைக் குடியேற்றியது. 38 வருடங்களாக துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்தபடி சுமார் 13 இலட்சத்திற்கும் அதிகமான பலஸ்தீனியர்கள் நாடோடிகளாய் அலைந்தனர்.

பலஸ்தீனிய மக்கள் அவர்களின் இருப்பிடங்களை விட்டுத் துரத்தப்பட்டார்கள். அவர்களுடைய சொத்துக்களை இழந்தார்கள். பின்பு அகதி முகாங்களுக்கும், அந்நிய நாடுகளுக்கும் துரத்தப்பட்டார்கள்.

இன்று அவர்களின் தாய் நிலத்திற்கு வந்து சேரத்தொடங்குகின்றார்கள். எனினும் இஸ்ரேல் அரசாங்கத்தினால் மேற்கொண்ட இந்த நடவடிக்கை சமாதானத்திற்கான ஒரு கதவைத் திறந்து விடுமா என கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

பலஸ்தீன தலைவர் மஹ்முத் அப்பாஸ் அரியல் ஷரோனுடன் தொடர்புகொண்டார். இந்த வெளியேற்றம் குறித்த தனது சந்தோசத்தை வெளிபடுத்தினார். மேலும் அவர் கூறுகையில் "இது ஒரு விடுதலைக்கான ஒரு நடைப் பயணம்"என்றும் "இறைவனின் ஆசி இருந்தால் இன்று காசா நாளை ஜெரூசேலம்" என்றும் கூறினார். "ஆக்கிரமிப்பாளர்கள் தமது மண்ணை விட்டு வெளியேறவேண்டும் தமது மக்கள் தமது தாய் நிலங்களில் மகிழ்வாக வாழும் நாளுக்கான தொடக்கமாக இந்நடவடிக்கை விளங்குகிறது எனவும் அவர் கருத்துத் தெரிவித்தார். பலஸ்தீனியர்களின் தலைநகராக ஜெரூசலமே விளங்கும்" என்றும் கூறுகிறார். "எங்களுக்கென ஒரு புதிய அரசு உருவாகுவதை உலகம் பார்க்க வேண்டும்" ஜோர்ஜ் புஷ் அவர்களும், அரியல் ஷரோன் அவர்களும் எடுத்த இந்த தைரியமான முடிவைப் பாராட்டினார். மேலும் காசாவில் வாழப்போகும் மக்களுக்காக ஒரு புதிய அரசொன்றை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும் வரையிலும் எனக்கு பலஸ்தீனக் கவிதைகளின் வரிகளே ஒலித்துக்கொண்டிருந்தன.

பலஸ்தீனக் கவிஞர்களில் ஒருவரான மொஹமத் தார்வீஷ் எனும் கவிஞன் எழுதிய கவிதைகளின் வரிகள் இவை .

நெருங்கிய தாய் தேசமே
எனது சங்கிலிகள் என்னுடன் பராமரித்தவை
கமுகின் கடினமும்
தன்னம்பிக்கையுள்ளவனின் இனிமையும்
என்னுடன் பராமரித்தவையே

தோலின் உட்புறம்
நமது தோலின் உட்புறம்
புயல் வீசும்
சிற்றாறுகள் ஓடும்
என்றெனக்குத் தெரியாது
அவர்கள் எனை இருண்ட அறையில்
பூட்டினார்கள்
என் இதயம் ஆயிரம் சூரிய விளக்காய்
ஒளிர்ந்தது
அவர்கள் என் எண்ணை சுவரில் எழுதினர்
சுவர் பசும் புல் நிறமாய் தன்னை மாற்றிக்
கொண்டது

அவர்கள் என் தண்டனையாளன் முகத்தை
வரைந்தனர்
பாயுமொளிப் பின்னல்களில் அம்முகம்
மறைந்து போனது

சுவர்களின் மீது
உனது தரைப்படத்தை
பற்களால் செதுக்குகிறேன்
என் நெருங்கிய தாய் தேசமே
விரைந்தோடும் இரவினது பாடல் எழுதுகிறேன்

ஒளிக்கற்றைகளை உள்ளங்கையில் அறைந்து
மறைபொருளின் மீது தோல்வியை
விட்டெறிகின்றேன்

ஒன்றுமில்லை அவர்கள் கைப்பற்றியது
ஒன்றுமேயில்லை
பூகம்பங்களே அவர்கள் தூண்டியவைகள்
உயர்ந்த நெற்றிகளே அவர்கள் கண்டவைகள்
நொறுங்கும் சங்கிலி ஓசைகளே
அவர்கள் கேட்டவைகள்

எனது இலக்கின் குறுக்கே விழுந்து
நான் இறந்து போனாலும்
நானோர் போராளி
நானோர் ரிஷி.

ஆக்கிரமிப்பு நிலங்களிலிருந்து ஆக்கிரமிப்பாளர்கள் வெளியேறவேண்டும். வெளியேறாத பட்சத்தில் நிலமைகள் அமைதியை ஒரு போதும் எட்ட முடியாத தொலைவில் சென்றடையச் செய்கின்றன. மிகப் பெரிய வரலாற்றுத் துயருடன் பலஸ்தீன மக்கள் இந்தப் பூமியில் வாழ நேரிட்டதை அவர்கள் உணர்ந்து செயற்பட்டிருப்பார்களே ஆனால் இந்தப் பூமிப்பந்தில் சமாதானமும் நம்பிக்கையும் பூத்து மலரத்தொடங்கும் நாளுக்கான சமிக்ஞை இது.

https://tamileelamarchive.com/



மொழிபெயர்ப்பு: மீரா

## “இந்த வெளியேற்றம் பலஸ்தீனத்தினுடைய வெற்றியுமல்ல, இஸ்ரேலினுடைய வெற்றியுமல்ல. இது ஒரு சமாதானத்திற்கான வெற்றி”

பிரான்சிலிருந்து வெளிவரும் 'Liberation' விடுதலை எனும் பத்திரிகை பலஸ்தீனியத் தலைவர் மஹ்முத் அப்பாஸ் அவர்களை நேர்கண்ட போது :



**காசாவிலிருந்து யூதக் குடியேற்ற வாசிகளை வெளியேற்றியது பலஸ்தீனத்தின் வெற்றியா அல்லது இஸ்ரேலின் வெற்றிகரமான நகர்வா?**

இந்த வெளியேற்றம் பலஸ்தீனத்தினுடைய வெற்றியுமல்ல, இஸ்ரேலினுடைய வெற்றியுமல்ல. இது ஒரு சமாதானத்திற்கான வெற்றி, எல்லோருக்குமான ஒரு வெற்றி. இஸ்ரேலுக்கும், பலஸ்தீனுக்கும் போல ஏனென்றால் நாங்கள் சமாதானத்திற்கான பாதையை திறந்தோம். இந்த வெளியேற்ற நடவடிக்கை ஒரு முதல் படி தான்.

**சில இஸ்ரேல் நாட்டுப் பொறுப்பாளர்கள் மக்கள் மத்தியில் நின்று பேசுகையில் காசாவின் குடியிருப்பை நாம் கைவிட்டதின் காரணம் சீஜோர்தானியில் உள்ள குடியிருப்புக்களை பாதுகாப்பதற்கே என்று கூறியிருக்கிறார்களே.**

அவர்கள் அப்படி நினைத்தால் பெரும் பிழை. இஸ்ரேலுக்கு சமாதானம் வேண்டும் என்றால் 1967 ஆம் ஆண்டு பலஸ்தீன மக்களினுடைய ஆக்கிரமித்த நிலங்களை கைவிடவேண்டும் என்பது அவர்களுக்கு விளங்கவேண்டும். ஜோர்ஜ் புஷ் அவர்கள் கூட குறிப்பிட்டிருந்தார் அதாவது 1967 ஆம் ஆண்டு ஆக்கிரமித்த நிலங்கள் ஒரு முடிவை எட்டவேண்டும். இஸ்ரேலை உறுதிப்படுத்த நாங்கள் அமெரிக்கர்களுடன் இணைந்து வேலைசெய்யவேண்டும்.

**பாதுகாப்புத் தடைகளை அமைப்பதற்காக புதிய நிலங்கள் எடுக்கப்படுள்ளன அதற்கு என்ன செய்ய உத்தேசித்துள்ளீர்கள்?**

இது எங்களின் முக்கியமான பிரச்சினைகளின் ஒன்றாகும். நாங்கள் வலுக்கட்டாயமாக சீஜோர்தானியின் வருங்காலத்தைக் குறித்து இஸ்ரேலியர்களோடு அமெரிக்காவின் மூலமாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும். நாங்கள் இஸ்ரேலோடு இதைக் குறித்து கதைக்கவேண்டும் ஆனால் இந்த அழுத்தம் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்தினால் ஏற்படவேண்டும்.

**எப்படி சமாதான ஒப்பந்தத்திற்குத் திரும்புவது?**

இஸ்ரேல் இராணுவம் போனவுடன் நாங்கள் திரும்ப சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கலாம். தற்பொழுது இன்னும் சில படைகள் இருக்கின்றன நான் நினைக்கின்றேன் ஒரு மாதம் இருப்பார்கள் என்று நினைக்கின்றேன். ஆனால் அவர்கள் விரைவில் போய் விடுவார்கள். எப்படியிருந்தாலும் சரி எங்களால் நிறைய செய்ய வேண்டி இருக்கிறது. அதாவது கூடுதலாக சீஜோர்தானியில் இருக்கும் குடியிருப்புக்களை வெளியேற்றுவதிலும் மற்றும் விடுதலை செய்ய வேண்டிய கைதிகளும் இருக்கின்றனர்.

**வெளியேற்றப்பட்ட நிலங்களை நீங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்க தயாரா, அத்தோடு அந்நிலங்களை என்ன செய்யப்போறீர்கள் ?**

நிச்சயமாக நாங்கள் தயாராக உள்ளோம். எங்களிடம் திட்டம் இருக்கின்றது, பொருளாதார திட்டம், விவசாய, கட்டிடங்கள் உருவாக்கும் திட்டங்கள் என பல இருக்கின்றன. அத்துடன் அன்றாடம் காய்ச்சிகளாய் திரியும் எம் பலஸ்தீன மக்களின் வாழ்வை வளப்படுத்துவதற்கு சர்வதேச சமூகத்தின் உதவி எங்களுக்கு தேவைப்படுகிறது.

**இன்னும் ஒரு மாதத்தில் நீங்கள் நியுயோர்க்கிலிருக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்னால் (New York) அரியல் ஷரோனுடன் பயணம் செய்ய இருக்கின்றீர்கள். அங்கு ஒரு சந்திப்பு உங்கள் இருவருக்குள்ளும் இருக்குமா?**

நாங்கள் கதைத்திருந்தோம் அரியல் ஷரோனால் முடிந்தால் எங்களாலும் அவரை சந்திக்க இயலும். அங்கு நாங்கள் சந்திக்கலாம் ஆனால் இங்கு நாங்கள் சந்தித்தால் உரையாடுவதற்கு நிறைய நேரம் இருக்கும்.

**யசீர் அரபாத்துடன் இணைந்து வேலை செய்வதை விட உங்களுடன் வேலை செய்வது மிக இலகுவானதென்று ஏன் அரியல் ஷரோன் நினைக்கின்றார்?**

எனக்குத் தெரியாது ஏன் என்னுடன் அவர் வேலை செய்கிறார் என்று. என்னுடன் வேலை செய்ய அவருக்கு விருப்பமாக இருக்கலாம். அவரிடம் கேளுங்கள்.

**உங்கள் அரசாங்கத்தை காசாவில் நிறுவ முயல்கிறீர்களா?**

இல்லை. எங்களின் இருப்பு தற்பொழுது வந்து போகும். நாங்கள் வெளியேற்றும் வரை இருப்போம். பிறகு நான் ரமலாவிற்குச் சென்றிடுவேன். சீஜோர்தானியாவில் நிறைய வேலை செய்ய வேண்டி இருக்கிறது. ஆனால் நாங்கள் சீஜோர்தானியாவிலிருந்து காசாவிற்கும் காசாவிலிருந்து சீஜோர்தானியாவிற்கும் பயணிப்போம்.



https://tamileelamarchive.com/



எங்கிருந்து வருகின்றன இந்த முரண்கள்?
நானறியேன் நானறியேன்
அப்பாவின் விளக்கை நானெங்கே மறைப்பேன்?
அம்மாவின் சொல்லை நானெங்கே புதைப்பேன்?
முன்னோரின் கனிமரங்கள் புளிக்கின்றனவா?
கடவுளே!

நேர்காணல்:

# கருணாகரன்

தொண்ணூறுகளில் சாளரம் சஞ்சிகை வாயிலாக இயக்கச்சி கருணாகரன் பற்றிய அறிமுகம் எங்களுக்கு முதலில் கிடைக்கிறது. அந்த அறிமுகமே எங்களை அவர்பால் ஈர்ப்புக்கொள்ள வைத்துவிட்டது. அதன் பிற்பாடு அவரது கவிதைகளினூடாகவும் நாம் அவருடனான உறவை மேலும் வளப்படுத்திக் கொண்டோம். அமைதியான தோற்றமும், எளிமையும் கொண்டவராக அவர் இருக்கிறார். வெளிச்சம் சஞ்சிகையினூடாகவும் அவரது ஆளுமையை நாம் புரிந்துகொண்டோம். சுதந்திர விடுதலைப் போராட்ட இயக்கத்தில் கலை இலக்கியத் துறைகளிலும் இயங்கி போராட்டத்திற்கு வலுச்சேர்த்தவர்.

இதழியலிலும் அவர் ஒரு முன்னோடியாக திகழ்ந்தார். பல கவிஞர்களுடனும், வரலாற்று ஆய்வாளர்களுடனும், இலக்கிய கர்த்தாக்களுடனும், போராளிகளுடனும் அவர் கலந்து உரையாடினார். புதிய மறு மலர்ச்சிக்கான பாதைகளை திறப்பதில் கணிசமான பங்காற்றிருக்கிறார்.

சமூக விடுதலைக்காகவும், பெண் விடுதலைக்காகவும் அவர் பல கருத்துக்களை முன்வைத்து இயங்கி வருபவர். கருணாகரன் அவர்களுடனான உரையாடலை எரிமலை சஞ்சிகைக்காக நிகழ்த்த வேண்டும் என்று நாம் ஆர்வமும், அக்கறையும் கொண்டிருந்தோம். தமிழில் புதிய போக்குகளைக் காண்பிப்பதிலும், மீறல்களை நிகழ்த்துவதிலும் புதிய இலக்கிய வடிவங்களைக் கண்டடைவதிலும் சதா ஈடுபட்டு வருகிறார். அதே போன்று ஏனைய படைப்பாளிகளுக்கும் உற்சாகமும், ஊக்கமும் கொடுப்பவராக நிற்கிறார். இலக்கிய சந்திப்புக்கள், இலக்கிய மாநாடுகள், நூல் வெளியீடுகள், உரையாடல்கள், விமர்சனங்கள், கருத்தாடல்கள் எனப் பல களங்கள் ஊடாக தமிழ் இலக்கியத்தை வளப்படுத்துவதற்கான ஒருஉழைப்பாளியாக அவர் இடை விடாது பணிபுரிகிறார். 'ஒரு பொழுதுக்குக் காத்திருத்தல்,' 'ஒரு பயணியின் நிகழ் காலக் குறிப்புகள்' எனும் கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டிருக்கிறார். 'சினிமா பற்றிய கட்டுரைகளும், விமர்சனங்களும்' எனும் நூலையும் எழுதியுள்ளார். சிறு கதைகள், சமூக விடயங்கள் தொடர்பான பத்தி எழுத்துக்கள், இலக்கிய விமர்சனங்கள் மற்றும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். தற்போது தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியின் இயக்குனராகவும் இருந்து வருகிறார். அவர் பல்வேறு பணிகளுக்கு மத்தியிலும் எரிமலை சஞ்சிகைக்காக அவர் ஒரு நேர்காணலை தர முன்வந்தார் என்பதை நாங்கள் நன்றி அறிதலுடன் நினைவுகொள்கிறோம். இவருடனான உரையாடல் மூலம் நாம் பல செய்திகளை அறிந்துகொள்ளக் கூடியதாகவும் இருந்ததோடு ஒரு வித்தியாசமான அனுபவத்தையும் எமக்குத் தந்தது. எனினும் எதிர்காலத்தில் அவர் எம்முடன் நிறைய விடயங்களை பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புக்கள் நிறையவே உண்டு.

நீங்கள் கவிஞராகவும், வெளியீட்டாளராகவும், சஞ்சிகை ஆசிரியராகவும், தமிழ்த் தேசியத் தொலைக்காட்சி இயக்குனராகவும் இருந்துவருகிறீர்கள்; நீங்கள் கலை சம்மந்தப்பட்ட பல்வேறு முயற்சிகளில் நீண்ட காலமாக ஈடுபட்டுவருகிறீர்கள்; இவ்வாறான கலைமுயற்சிகளுடாக அரசியல், சமூகம், இலக்கியம் ஆகியவற்றை எவ்வாறு வெளிக்காட்ட முயல்கிறீர்கள்; எல்லாவற்றுக்கும் விடைகாண முயல்கிறீர்களா ?

அரசியல், சமூகம், இலக்கியம், தத்துவம், வரலாறு, அறிவியல் எல்லாவற்றையும் ஆழமாக உணர்த்தக்கூடிய ஒருவடிவம் கலை. கலையினூடாக எல்லாவற்றையும் வெளிப்படுத்தலாம். அப்படி வெளிப்படுத்துவதற்குரிய அறிவையும் சிந்தனையையும் வளர்த்துக்கொள்வதுதான் கலைத்துறையாளருக்குரிய சவால். கலைக்கு முகங்கள் அதிகம். விழிகளும் அதிகம். அது பேசும் மொழியும் அதிகம். அதன் எல்லைகளும் அதிகம். அதனுடைய காலமுமதிகம். நான் ஒரு கருவியாக மட்டுமேயிருக்கிறேன். அவ்வளவுதான். அறிதலும் உணர்தலும் கொள்கிறேன். பிறகதை அறியவும் உணரவும் செய்கிறேன். அடிப்படையில் எல்லா வெளிப்பாடுகளும் ஒன்றோடொன்று தொடர்புபட்டவையே. கவிதை ஒரு வகையென்றால், இதழ் வெளியீடு இன்னொரு வகை. இது போலவே ஒவ்வொன்றும். ஆனால் நீங்கள் கேட்பதுபோல இவை எல்லாவற்றுக்கும் முழுமையாக விடைகாணமுடியாது. வாழ்வு புதிரானது. காலமும் புதிரானது. வாழ்வையும் காலத்தையும் இணைத்து உருவாகுவதே கலையென்பதால் அதுவும் புதிரானதே. இந்தப்புதிரை அறியும் போராட்டமே வாழ்க்கை. அதொரு முயற்சி. இடையறாத முயற்சி. கலை வாழ்க்கையைப் பேசுகிறது. அதனால் அதனை விரும்புகிறேன். முகமும் மொழியும் விழியுமுள்ள ஒருவராக இருக்க முயல்கிறேன்.

வன்னி மாண்மியம் குறித்து ( நிலாந்தனின் ).... இது ஒரு நல்ல அம்சமே; தமிழுக்கு ஒரு புது வாய்ப்பே; எனினும் சட்டகங்களுக்குள் நின்று எழுதப்படும் படைப்புகள் படைப்பாளிகளுக்குப் பெரும் சவால்களை எழுப்புவன, நெருக்கடியைத் தருவன.... என தாங்கள் வன்னி மாண்மியத்தின் எழுத்துரையில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். புதியவை வருகிற பொழுது அவை ஒரு அசௌகரியத்தை ஏற்படுத்தும் என்பதாகவும் இதை விளங்கிக் கொள்ளலாம். நீங்கள் இந்தச் சட்டகங்களைத் தாண்டி எழுதும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறீர்களா? மீறல்களை நிகழ்த்தி வருகிறீர்களா ?

படைப்பென்பதே புதியமீறல்தான். ஒன்றைப்போலச்செய்தல் அல்லது ஒன்றைமாதிரிச் செய்தல் என்பது படைப்பல்ல. பொருள் வடிவம், வெளிப்பாடு எனச்சகலதுக்கும் இது பொருந்தும். மீறல் பற்

https://tamileelamarchive.com/



சோதனை என்பதெல்லாம் படைப்பின் அடிப்படைகளில் பிரதானமானவை. எல்லாவற்றிலும் மீறல்களுண்டு. அதொரு வளர்ச்சி விதி. மீறல்கள் அதிர்வுகளை ஏற்படுத்துவன. மீறலும் ஒருவகைப்போராட்டமே. உள்ள நிலைமைகளிலிருந்து புதிதொன்றுக்குச் செல்லும் வழியாகவே மீறல்களைப்பார்க்கலாம். மீறல்களில் அளவு வேறுபாடுகள் தன்மை வேறுபாடுகளுண்டு. அவற்றைப்பொறுத்தே அவற்றுக்குரிய அதிர்வுகளும் கவனங்களுமிருக்கும். வளர்ச்சிவிதி குறைந்த சமூகங்களில் மீறல்கள் பரிசோதனைகள் எல்லாம் பெரிதும் சவாலுக்குரியவையாகி விடுகின்றன. சுயமாக இயங்கும் படைப்பாளியால் சட்டங்களுக்குள் நின்று இயங்க முடியாது. அவன் ஒரு போராளி. அவனுக்கு விடுதலை அவசியம். அதற்காகத்தான் அவன் படைக்கிறான். எத்தனை மகத்தானதாக இருந்தாலும் அத்தனை இலகுவாகவும் இனிதாகவும் விடுதலை கிடைத்துவிடுவதில்லை. அது சவால்கள் நிறைந்த பாதை. சட்டகங்களைத்தாண்டிவிடவே எப்போதும் முயல்கிறேன். என்னுடைய கவனமும் படைப்பும் அத்திசை நோக்கியனவே. எனக்குமுன்னே நவீன தமிழில் பலர் நல்லபங்களிப்புகளைச் செய்திருக்கிறார்கள். மு.தளையசிங்கம் மெய்யுள் என்ற புதியதொரு கோட்பாட்டை அறிமுகப்படுத்தினார். மெய்யுள் பொருளிலும் வடிவத்திலும் புதிய அதிர்வுகளை ஏற்படுத்தியது. நாகராயன், சு.ரா, கோணங்கி, தமிழவன், கி.ராயநாராயணன், சாருநிவேதிதா, அம்பை, டானியல், காசி.ஆனந்தன், சண்முகம் சிவலிங்கம், நிலாந்தன், வேலு.பிரபாகரன், ரதிதரன், க.சிதம்பரநாதன், ஆதிமுலம் முதல் அம்ரிதா ஏயெம், யோ.கர்ணன், பா.ராகவன் வரை ஏராளமானோர் நீண்ட பட்டியலில் உண்டு. ஞாபகப்பரப்பில் அத்தனை பேரின் சுவடுகளுமிருக்கின்றன. பரிசோதனைகள் எப்போதும் மகிழ்ச்சியைத்தருவன.

கலைக்கு முகங்கள் அதிகம்.
விழிகளும் அதிகம். அது பேசும் மொழியும் அதிகம்.
அதன் எல்லைகளும் அதிகம். அதனுடைய காலமுமதிகம்.
நான் ஒரு கருவியாக மட்டுமேயிருக்கிறேன்.
அவ்வளவுதான்.

அறிதலும் உணர்தலும் கொள்கிறேன். பிறகதை அறியவும் உணரவும் செய்கிறேன். அடிப்படையில் எல்லா வெளிப்பாடுகளும் ஒன்றோடொன்று தொடர்புபட்டவையே. கவிதை ஒரு வகையென்றால் இதழ் வெளியீடு இன்னொரு வகை. இதுபோலவே ஒவ்வொன்றும். ஆனால் நீங்கள் கேட்பதுபோல இவை எல்லாவற்றுக்கும் முழுமையாக விடைகாணமுடியாது. வாழ்வு புதிரானது. காலமும் புதிரானது. வாழ்வையும் காலத்தையும் இணைத்து உருவாகுவதே கலையென்பதால் அதுவும் புதிரானதே. இந்தப்புதிரை அறியும் போராட்டமே வாழ்க்கை. அதொரு முயற்சி. இடைபறாத முயற்சி. கலை வாழ்க்கையைப் பேசுகிறது. அதனால் அதனை விரும்புகிறேன். முகமும் மொழியும் விழியுமுள்ள ஒருவராக இருக்க முயல்கிறேன்.



புத்தக வெளியீட்டுத் துறையில் நீங்கள் கவனம் செலுத்தி வருகிறீர்கள் நீங்கள் தமிழுக்கு மிக நவீனமான நூல்களை தந்திருக்கிறீர்கள். இத்துறையில் புரியாதவர்களும் ஈடுபட்டு வருகிறார்கள். இவற்றை நீங்கள் கவனத்தில் கொண்டுவருகிறீர்களா? இத்துறையை வலுவாக்கவும், ஆழமாக்கவும் எவ்வாறான முயற்சிகளை முன்னெடுத்து வருகிறீர்கள்?

முதலில் தமிழ்ச்சூழலில் புத்தக வெளியீட்டு முயற்சிகள், நிலைமைகள் பற்றிப் பார்க்கவேண்டும். தமிழில் அதிகமாக வெளிவந்திருப்பவையும் இலக்கியம், மொழி, வரலாறு சம்மந்தப்பட்டவையே. குறைந்தளவில் தத்துவம், அரசியல், சமூகவியல் என வந்திருக்கின்றன. விஞ்ஞானம், தொழில்நுட்பம் என வந்திருப்பவை மிகமிகக்குறைவே. அத்தகைய நூல்களை எழுதுவோரும் குறைவு. வெளியிடுவோரும் குறைவு. என்னுடைய கவனம் இப்போது தமிழின் அறிவுத்துறையை மேம்படுத்தக்கூடிய புத்தகங்களை வெளிக்கொண்டு வரவேண்டுமென்பதே. ஆனாலும் இதுவரையிலும் வெளியிட்டது இலக்கியம் சம்மந்தப்பட்டவையையே. பொதுவாகத் தமிழில் நல்லபல புத்தகங்கள் (இலக்கியத்தில்) வெளியிடப்பட்டிருக்கின்றன. பலர் புத்தகவெளியீட்டுத்துறைக்கு நிறையப் பங்களித்திருக்கிறார்கள். ஈழத்தில் ஆறுமுகநாவலரிலிருந்து இதனைக்காணலாம். புல அமைப்புகளும் பதிப்புத்துறையில் நிறையப் பங்காற்றியிருக்கின்றன. அதேவேளையில் நீங்கள் சொல்வதுபோல ஏனோதானோ என்கிற மாதிரி இந்தத்துறையில் புரியாதவர்களும் ஈடுபடுவது உண்மையில் வருத்தத்துக்குரியதே. இன்னும் சொல்லப்போனால் தமிழுக்கு இவை நிச்சயம் பின்னடைவையே தரும். எதிலும் தரமற்றவையை உற்பத்தி செய்யும் ஒரு சமூகம் பின்தங்கியே போகும். ஆக தரமானவற்றைக் கொண்டுவர நிறையச்சிரமப்பட வேண்டியிருக்கிறது. நூல் வெளியீட்டுத்துறையை மேம்படுத்துவதற்கு பலமான பின்புலங்கள் வேண்டும். புத்தகமென்பது அறிவைப்பரப்புகின்ற திறன்மிக்க சாதனமென்ற அறிவு எங்களின் சமூகத்துக்கு இல்லையென்பதே கவலைக்குரியதும் வருத்தத்துக்குரியது மாகும். ஆனாலும் முயல்வோம்.

https://tamileelamarchive.com/

விழிக்கும் ஒரு சமூகம் விடுதலையை நோக்கி நகரத் தொடங்கிவிடும். விழிப்புத்தான் விடுதலையின் முதற்படி என்று தலைவர் பிரபாகரன் அவர்கள் சொல்வது இங்கே கவனிக் கத்தக்கது. எங்களுடைய போராட்டம் பெண்களின் ஆற்றல் ஆளுமை திறன் எல்லாவற் றையும் வெளிக்காட்டவும் நிரூபிக்கவும் செய்திருக்கிறது. பெண்களிடையேயும் சமூகத் திலும் விழிப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது. இதுபோல சாதி, மதம், பிரதேசம் போன்ற வற்றிலும் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கினறன. அதற்காக எல்லாமே ஒரேயடியாக ஒரேநாளில் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்ப்பது கொஞ்சம் கூடுதலான மனவிருப்பமே. அது யதார்த்தத்துக்கு அப்பாலானது. வேண்டுமானால் சினிமாவில் அப்படியொன்றைப் பார்த்து ரசிக்கலாம்.

தமிழ் இலக்கிய விமர்சனப் போக்குகள் வளர்ந்து செல்கின்றனவா?

தமிழ் இலக்கிய விமர்சனப்போக்குகள் பன்முகங்கொண்டு வளர்ந்திருக்கின்றனதான். ஆனால் போதாது. பொதுவாக தமிழில் விமர்சனம் என்பதைப் பலரும் தவறாகவே புரிந்து வைத்திருக்கி றார்கள். சிலர் விமர்சனத்தைப் பாராட்டு என்றும் சிலர் அதனைக் கண்டனமென்றும் கோணலாக எடுத்துக்கொள்கிறார்கள். இது சுத்த அபத்தமல்லவா. விமர்சனமென்பது அறிவியல். அதொரு பண்பாடு. ஆனால் விமர்சனத்தை யாராவது தவறாகப் பயன்படுத்தினால் அதொரு ஒடுக்குமுறைக்கருவி. அதேமாதிரி அதனை வெறுமனே பாராட்டும் வழிமுறையாகப் பாவித்தால் அதொரு பிற்போக்குக் கோட்டை. விமர்சனமென்ற அறிவியலை அறிவுபூர்வமாக வெளிப் படுத்தவும் வேண்டும். அதேபோல அறிவுபூர்வமாக விளங்கவும் வேண்டும். தமிழ் விமர்சனப்போக்கில் நன்மையும் நிகழ்ந்திருக்கி றது. தீமையும் நிகழ்ந்திருக்கிறது. ஒப்பீட்டளவில் தீமைதான் நேர்ந் திருக்கிறது. அதனாற்றான் விமர்சனம் இன்னும் தவறாகப்புரிந்து கொள்ளப்படுகின்றது. “நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே” என்று சொன்ன தமிழ்ச்சாதி இன்று சாதாரண கண்ணுக்கே தெரி கின்ற சிறு தவறைக்கூட சுட்டிக்காட்ட திராணியற்றிருக்கிறது. ஒரு பக்கம் நமது விமர்சன நிலைகுறித்து வெட்கப்படுகின்ற நிலை மறுபக்கத்தில் நாம் பெருமைப்படுகின்ற மாதிரியான காரியங் களும் நடக்கின்றன.

ஆய்வுக்கட்டுரைகள், அறிவியற் கட்டுரைகள், தொன்மம் சார்ந்த கட்டுரைகள் எழுதுபவர்கள் பற்றி தாங்கள் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?

ஆய்வு, அறிவியல், தொன்மம் மூன்றுமே அறிவியலோடு தொடர்பு பட்டவை. தமிழில் இந்தமாதிரியான காரியங்களில் ஈடுபாட்டோடு பாடுபடுகிறவர்கள் மிகக்குறைவே. என்றபடியாற்றான் சுஜாதா அறி வியல் விடயங்களைப் பேசும் முக்கியமானவராக தமிழர்களுக்குப் படுகிறார். சுஜாதாவுக்கு நிறைய விடயங்கள் தெரிந்திருக்கலாம். ஆனால் சுஜாதா செய்வது மிகச்சாதாரணமானது. வேறு ஆட்கள் சீரியசாக அறிவியலைப் பேசத்தொடங்கினால் இந்தமாதிரி யாரும் வாய்பிளக்கத் தேவையில்லை. மற்றும்படி இலக்கியம், வரலாறு பண்பாடு, மொழி, அரசியல் போன்றவை ஓரளவுக்கு வந்திருக்கின்றன. இந்த முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறவர்கள் கவனத்துக்குரியவர்களே. ஆனால் மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமுடைய ஒரு இனத்துக்கு இது போதாது.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் நீண்ட நெடிய பயணத்தை நிகழ்த்திச் சென்றிருக்கிறது. இந்நிலையிலும் சமூகத்தில் ஆழமாக, பிரதேச, சாதிய வேறுபாடுகள், பெண் ஒடுக்கமுறைச் சிந்தனைகள் நிலவி வருகின்றனவா?

சாதி, மதம், பிரதேசம், பால் வேறுபாடுகள் எல்லாம் உடனடி யாகத்தீர்ந்து விடுபவையல்ல. இவை மிக ஆழமாக வேரூன்றிய ஒடுக்குமுறை வடிவங்கள். பல நுட்பமான வலைவடிவங்கள் கொண்ட அரசியல் இவை ஒவ்வொன்றுக்கும் பின்னாலுண்டு. இவற்றுக்கு எதிரான போராட்டமென்பது தொடர்ச்சியானது. எமது தேசிய விடு தலைப்போராட்டம் பலவற்றில் அதிர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. எல்லாவற்றையும் அறிவுபூர்வமாக நோக்கவேண்டும் என்ற பார்வை யைக் கொடுத்திருக்கிறது. விழிக்கும் ஒரு சமூகம் விடுதலையை நோக்கி நகரத் தொடங்கிவிடும். “விழிப்புத்தான் விடுதலையின் முதற் படி” என்று தலைவர் பிரபாகரன் அவர்கள் சொல்வது இங்கே கவனிக் கத்தக்கது. எங்களுடைய போராட்டம் பெண்களின் ஆற்றல் ஆளுமை திறன் எல்லாவற்றையும் வெளிக்காட்டவும் நிரூபிக்கவும் செய்திருக் கிறது. பெண்களிடையேயும் சமூகத்திலும் விழிப்பையும் ஏற்படுத்தி யிருக்கிறது. இதுபோல சாதி, மதம், பிரதேசம் போன்றவற்றிலும் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்காக எல்லாமே ஒரேய டியாக ஒரேநாளில் தீர்ந்துவிடும் என்று எதிர்பார்ப்பது கொஞ்சம் கூடுதலான மனவிருப்பமே. அது யதார்த்தத்துக்கு அப்பாலானது. வேண்டுமானால் சினிமாவில் அப்படியொன்றைப் பார்த்து ரசிக்கலாம். நடைமுறையைப்புரிந்து கொள்ளவேண்டும்.

போராளிக் கவிஞர்களை இனம் காணவும் அவர்களின் கவிதா ஆற்றல்களை இனம் கண்டும் அவர்களுடைய கவிதைகளை பிரசுரிப்பதற்கான களங்களும் திறக்கப்பட்டுள்ளனவா? ஒரு திறமை வாய்ந்த குழுவொன்று இதற்காக இயங்கி வருகிறதா?

போராளிக்கவிஞர்கள் பலர் அறியப்பட்டிருக்கிறார்கள். போராளிப் படைப்பாளர்களுக்கான களங்களும் உண்டு. அதற்கான களங்களை - ஊடகங்களை எமது விடுதலைப்போராட்டத்தில் தலைவர் பிரபரகரன் அவர்கள் உருவாக்கியிருக்கிறார். போராளிக்கவிஞர்களுக்கு மட்டு மல்ல போராளிப்படைப்பாளர்கள் சகலருக்குமான அறிதலுக்கும் ஆற்றல் மேம்பாட்டுக்குமான முயற்சிகளும் வசதிகளும் செய்யப் பட்டிருக்கின்றன. அவரவர்களுடைய படைப்பாற்றலைப் பொறுத்து அடையாளங்கள் துலங்கும்.

இன்று கலை இலக்கியத்தில் பெண்கள் ஆற்றி வரும் சமூகப் பங்களிப்பு எத்தகையதாக இருக்கிறது.

கலையிலக்கியத்தில் மட்டுமல்ல சகலதுறைகளிலும் இன்று பெண்களாற்றிவரும் சமூகப்பங்களிப்புகள் கூடிவருகின்றன. இது உலகெங்கும் ஏற்பட்டிருக்கின்ற ஊடாட்டங்களோடிணைந்த வளர்ச்சி. பெண்ணின் அறிதலும் அனுபவமும் வெளியாகப் பகிரக்கூடிய சூழல் உருவாகியிருக்கிறது. அதேவேளையில் பெண் வீட்டிலும் உழைக்கி றாள். வெளியிலும் உழைக்கிறாள். இந்த இரண்டு வாழ்கள அனு பவமும் அறிவும் பெண்ணுக்கே கிடைக்கின்றன. இதெல்லாம் பெண

https://tamileelamarchive.com/



ணைப் புதிய மையத்தில் வைக்கின்றன. உழைப்பிலும் பெண் இருமடங்கிற்கு உரியவளாகிறாள். அறிவு மற்றும் அனுபவத்திலும் அவள் முதனிலைப் பாத்திரம் வகிக்கிறாள். இதேவேளை பெண் ஒடுக்குமுறைக்குள்ளானவள். அதன் காரணத்தால் ஒடுக்குமுறைக் கெதிராகப் போராட வேண்டியவளாகிறாள். ஒரேநேரத்தில் பெண் முகம்கொடுக்க வேண்டியுள்ள எதிர்முனைகள் பல. பாலியல் (செக்ஸ்) ரீதியான ஒடுக்குமுறை ஒருபுறமென்றால் பண்பாட்டு நெருக்கடி இன்னொரு புறமானது. தவிர, இன மதப் போரோ போராட்டமோ நடந்தால் அதில் கூடுதலாகப் பாதிக்கப்படுவது பெண்தான். இதெல்லாம் பெண்ணனுபவத்தை விரிவாக்கியிருக்கிறது. பெண் மொழி இன்று கூராகிவிட்டது. பெண் படைப்புகள் இன்று கூடுதல் கவனம் பெறுவதற்கு இதெல்லாம் காரணங்கள். பெண்களின் சமூகப்பங்களிப்புகள் ஆணுக்கு நிகராக மட்டுமல்ல அதற்கப்பாலும் நிகழப்போகிறது.

வெளிநாடுகளில் பசுமைப் புரட்சிக்கான அமைப்புக்கள் தோற்றம் பெற்று வளர்ந்து வருகின்றன. சுற்றுச் சூழல் மாசடைதல் தொடர்பான விழிப்புணர்வு வளர்ந்து வருகிறது. கலை இலக்கிய செயற்பாட்டில் சூழலியல் பற்றிய பார்வை எத்தகைய கவனத்தை ஈர்த்திருக்கிறது?

சுற்றுச்சூழல் பற்றிய கவனத்தையுடையவர்கள் என்றால் மற்றெல்லோரையும் விட படைப்பாளிகளே அதிகம். இயற்கை, அமைதி இரண்டையும் கூடுதலாக விரும்புவது படைப்பாளிகளின் இயல்பு. சூழலியல் ஆர்வம் சூழலியல் பாதுகாப்பைக் கோருகிறது. சூழலியல் பாதிக்கப்படும்போது படைப்பாளி அதனைப் பாதுகாக்க போராடுகின்றார். இன்று அணுக்குண்டும், சூழலியலுமே அதிகமாகக் கதைக்கப்படும் கருப்பொருளாகியிருக்கிறது. நமது சூழலில் இன்னும் சூழலியல் குறித்த சரியான விளக்கம் இல்லையெனலாம். இந்தத்துறையில் மிகக்குறைவானவர்களே ஈடுபட்டுவருகிறார்கள். அவர்களிடமும் செயற்பாட்டறிவு குறைவு. எங்களின் சூழலில் உள்ள பறவைகள், விலங்குகள், தாவரங்களைப்பற்றிய சரியான அறிவில்லாதவரெல்லாம் சூழலியல் அமைப்புகளின் முக்கியத்தர்களாகவும் தீர்மானிகளாகவுமிருக்கிறார்கள். மற்றப்படி சூழலியல் ஆர்வமும், வெளிப்பாடும் கலை இலக்கியத்தில் எப்போதுமேயுண்டு. இப்போது அது இன்னும் கொஞ்சம் வளர்ந்து வருகிறது. இயற்கை வருணனை எதனைக்குறிக்கிறது? இயந்திரமயமாதல், நகர நெருக்கடி பற்றிய வெளிப்பாடுகளின் சேதிகள் சொல்வதெல்லாம் சூழலியல் சிதைவன்றி வேறென்ன?

புலம் பெயர்ந்தோர் இலக்கியங்கள் குறித்த பரீட்ச்சயத்தை தாங்கள் கணிசமான அளவு பெற்றிருப்பீர்கள் என நம்புகிறேன். எமது தமிழ் இலக்கியப் பரப்புக்கு அது வளம் சேர்ப்பதற்கான பாதைகளைக் காட்டியிருக்கின்றனவா?

புலம்பெயர் படைப்புகள் தமிழின் இன்னொரு முகம். இன்னொரு ஆன்மா. இன்னொரு பிரதேசம். இன்னொரு பாதை. ஈழத்தமிழரின் எழுத்துகள் ஒருவகை. இத்தகைய தமிழரின் புலம்பெயர் எழுத்து இன்னொரு வகை. எங்களுடைய அந்தரிப்பும் தவிப்பும் வேறு. அவர்களுடைய தவிப்பும் அந்தரிப்பும் வேறு. ஆனால் எப்படியோ புலம்பெயரிலக்கியம் புதிய வளத்தையே தருகின்றது. இதில் சிதைவுமுண்டு. ஒருங்கிணைவு முண்டு. எல்லாம் ஒவ்வொருவரினதும் அல்லது ஒவ்வொரு தரப்பினரதும் மனவிரிவையும் மன அழகையும் பொறுத்தது.

சமூக பண்பாட்டு மாற்றத்துக்கான தீவிர நாடக அரங்குகள் எவ்வாறு இயங்கி வருகின்றன. இன்று இத்தகையச் செயற்பாடுகள் உலகளாவி விரிவதற்கான புதிய பாதைகள் திறக்கப்படுகின்றன. அவை எத்தகைய மாற்றங்களை நிகழ்த்தும்?

பிற சூழல் பற்றி சரியாகச் சொல்லமுடியவில்லை. ஆனால் எங்களின் சூழலில் நாடகம் என்பது வரண்டே போய்விட்டது. அரங்கின் வடிவமும் மாறிவிட்டது. அதன் பிரயோகமும் மாறிவிட்டது. இப்போது

https://tamileelamarchive.com/



புலம்பெயர் படைப்புகள் தமிழின் இன்னொரு முகம். இன்னொரு ஆன்மா. இன்னொரு பிரதேசம். இன்னொரு பாதை. ஈழத்தமிழரின் எழுத்துகள் ஒருவகை. இத்தகைய தமிழரின் புலம்பெயர் எழுத்து இன்னொரு வகை. எங்களுடைய அந்தரிப்பும் தவிப்பும் வேறு. அவர்களுடைய தவிப்பும் அந்தரிப்பும் வேறு. ஆனால் எப்படியோ புலம் பெயரிலக்கியம் புதிய வளத்தையே தருகின்றது.

அரங்கவியலாளரின் பிரதான அக்கறையென்பது வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களுக்கு எப்படி அரங்கை வடிவமைப்பது என்பதுதான். அரங்கு ஒடுங்கிவிட்டது. போர் நெருக்கடி உச்சம் பெற்றிருந்த அந்த நாட்களின் வெளிப்பாடாக தெருவெளி அரங்கிருந்தது. இன்று அதொரு இனிய நினைவு போலாகி வருகிறது. அத்தோடு தமிழ்ச்சினிமா தொலைக்காட்சித் தொடர்கள் என்பதெல்லாம் நாடகத்தை திசைமாற்றி விடுகின்றன. நாடகம் ஒரு மக்கள் கலையென்பதை விட்டு வேறெங்கோ போய்விட்டது.

நாவல்கள் அநேகம் வெளிவராமைக்கான காரணங்கள் எவையாக இருக்கின்றன?
இப்போக்கு உடைந்து புதிய போக்குகள், எழுச்சிகள் உருவாகுவதற்கான அகப்புறச் சூழல் உருவாகி வருகிறதா?

ஈழத்தில் நாவல்கள் வெளிவராததற்குப் பல காரணங்களிருக்கலாம். சிறீலங்கா அரச இராணுவ ஒடுக்குமுறையும் அதன் விளைவான தமிழ்மக்களின் அகதி அலைச்சல் வாழ்வும் அகப்புற நெருக்கடியைப் படைப்பாளிகளுக்குக் கொடுத்திருந்தது. தவிர, கடந்த இரு பதாண்டுகால ஈழத்தமிழரின் வாழ்நிலைமைகள் சாதாரணமானதல்ல. முழுமையான நாவலொன்றுக்கான காலகட்ட அரசியல் மிகவும் சிக்கலானவையும் அபாயம் நிறைந்தவையும். நல்ல நாவலுக்கான காத்திருப்பு இன்னும் தொடரத்தான் போகிறது.

விடுதலைச் சினிமாவுக்கான பாதைகள் அகலித்து வருகின்றனவா?

விடுதலைச் சினிமாவுக்கான சாத்தியங்கள் மெல்லமெல்ல கூடிவருகின்றன. நிதர்சனம் நிறுவனம் இந்த முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. இது ரசனையாளர் மட்டத்திலும் ஏற்பட்டுவர வேண்டும். சினிமாத்துறையில் குறிப்பிடக் கூடியளவுக்குச் சாதனை நிகழ்த்தியவர்களே சொல்கிறார்கள் ஈழத்தில்தான் நல்லபடமே எடுக்கக்கூடிய அரசியற் பண்பாடிருக்குதென்று.

அவலங்களையும், இழப்புக்களையும், அழிவுகளையும் பேசும் நிலை தகர்ந்து - அதாவது வீர அபிமன்யு எதிரியின் வியூகத்தை உடைக்கச் சென்று அந்த வியூகத்துக்குள்ளேயே மாண்டு விடுகிறான். பால்ராஜ் போன்ற புதிய வீர அபிமன்யுக்கள் அவ்வாறில்லாமல் வியூகத்தை உடைத்துக் கொண்டு வெளிவந்தனர். அது போன்ற வேகமும், புதுமையும், உடைப்பும் போரிலக்கியத்திலும் நிகழ்த்தப்பட்டு வருகிறதா?

நிச்சயமாக அப்படியான புதுமை இலக்கியங்கள் வந்திருக்கின்றன. அஸ்வகோஷின் வனத்தின் அழைப்பு, மலரவனின் போர் உலா, மலைமகளின் புதிய கதைகள், கலாவின் கோணேஸ்வரிகள், திசேரா, அம்ரிதா ஏயெம் ஆகியோரின் கதைகள் நிலாந்தனின் வன்னி மான்னியம், யாழ்ப்பாணமே ஓ எனது யாழ்ப்பாணமே! இப்படிப்பலவுண்டு. காசி. ஆனந்தன் தொடக்கம் கலைப்பருதி வரையான இசைப்பாடல்கள் தனிக்கவனத்துக்குரியவை. இந்த வெளிப்பாடுகள் பல வகையானவை. இதற்குப் பெருந்தொகையானோரின் பங்களிப்புகளுண்டு.

இப்போது கவிதைகளின் தரம் தமிழர் தாயகத்தில் நீர்த்துப்போயிருக்கிறதா?

தரமான கவிதைகள் குறைந்திருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் கவிதை நீர்த்துப் போய்விட்டதென்று சொல்வது எந்தளவுக்குப் பொருத்தமென்று தெரியவில்லை. ஆனால் இப்போது அறிமுகமாகியிருக்கும் புத்தகம் போடுதல் என்ற திருவிழாவில் கவிதை என்ற பெயரில்..... ஏராளமாகக் கொட்டப்படுகின்றன. இது நிச்சயம் கவிதையைப்பாதித்தே தீரும். நல்ல கவிதைகள் வடிவம், உள்ளடக்கம், வெளிப்பாடு எனச்சகலவற்றையும் கொண்டது. இதற்கு தெளிவுடன் கூடிய முயற்சி தேவை.

எதிர்காலத்தில் ஈழத்தமிழ்க்கவிதைதான் தமிழ்கவிதை உலகில் முன்னிற்கும் என்று கூறப்படும் எதிர்வுகூறுகைக்கேற்ப கவிதை இயங்குகிறதா?

ஈழக்கவிதைக்கிருக்கும் அனுபவத்தளம் பிற தமிழ்க்கவிதையாளருக்கில்லாதது. அதுதான் முதலாவது. அடுத்தது ஈழக்கவிதைகளின் பொதுவான அம்சம் அவற்றின் வெளிப்பாட்டு முறையும் மொழியும்தான். ஆனால் தமிழ்க்கவிதைக்கு ஈழக்கவிதைதான் தலைமை வழிகாட்டி என்றால் அதற்கு இன்னும் நல்லகவிதைகள் வேண்டும். தமிழ்த் தேசிய அக்கறையோடும் உணர்வோடும் எழுதிய எழுதி வருகின்ற படைப்பாளிகளின் படைப்புகள் தமிழ்த்தேசியத்தில் நீடித்து நிற்கும். இதில் நிறையப்பேரின் பங்களிப்புகளுண்டு. இங்கே எல்லோருடைய பெயரையும் குறிப்பிடுவது சாத்தியமில்லை.

எமது மண்ணில் கோலோச்சிய பழைய நிலை தகர்ந்து புதிய அகப்பண்பாட்டை அழுத்தும் மெய்முதல் போக்குகள் உயர்ந்து செல்லுமா?

நாம் விரும்பினாலென்ன, விரும்பாவிட்டாலென்ன புதியபோக்குகள் வந்தே தீரும். அதுவும் விடுதலைக்காகப் போராடுகின்ற ஒரு சமூகத்தின் அகப்பண்பாடு நிச்சயம் மாற்றமடைந்தே தீரும். அந்த மாற்றத்தில் மு.த. சொன்னது போல மெய்முதல்வாதமோ அல்லது அதனைவிட மேலானதொன்றோ சித்திக்கக்கூடும்.

https://tamileelamarchive.com/

ஜெயசீலன்



## உயிர் ஐந்தொகை

உள்ளே உயிரோடு தான்
மண்பிரித்து கைகாட்டும்
புதைத்த விதைகள்

ஓவியங்கள் பத்திரம்
கோடிப்புறச் சுவரில்
பிள்ளைக் கிறுக்கல்கள்

தெருவிலே வாங்கிய
கச்சான் சுருளிலும்
வீரவணக்கங்கள்

உறவுசொல்லி அழுகைகள்
வித்துடல் முன்
ஒருமனசு ஓரமாய்

நட்பில் உயிர்க்கும் இதயங்கள்
சிதைந்த காவலரணுக்குள்
செயற்கைச் சுவாசங்கள்



## சுவாசம் ஐந்தொகை

கண்முன்னே பிரிவு
இமைகளுக்கே தெரியாமல்
கண்ணீர்துளிகள்

நிலவு நாட்களில்
அவளும் வருகிறாள்
சோறூட்டிய ஞாபகங்களாய்

மாணவர் விடுதி
அப்பா அனுப்பிய பணத்தில்
வேர்வை வாசம்

விடுமுறையில் மாணவன்
கைது ஆகிறான்
வீட்டுப் பாடங்களிடம்

சிறுவன் முதன் முதலாய்
பள்ளிக்கு வந்திருந்தான்
புதிதாய் இடம்பெயர்ந்து

## வலி ஐந்தொகை

வியர்வைகள் கொட்டி
உயர்த்தினார்கள்
கோயில்களை மட்டும்

அப்பிள் பழம் நியூட்டன்
ஈர்ப்புவிசை - மாம்பழம்
தமிழன் பஞ்சாமிர்தம்

வெய்யிலுக்கு நிழல்தேடி
ஒதுங்கினான் தமிழன்
எச்சமிட்டன காகங்கள்

படுக்கவே இடமில்லை
பாயிலே
யுனிசெவ்

அப்பன் குடிகாறன்
அம்மாவும் குடித்தாள்
அரளி விதை அரைத்து

## காயம் ஐந்தொகை

அடக்கிக்கொள் எல்லாவற்றையும்
மலவாசலில் இறுகும்
'எஸ்லோன்' குழாய்

எங்களின் விளைநிலங்கள்
அவர்கள் போட்ட விதைகள்
மூன்றுகால் பசுக்கள்

இராணுவ வேலிகளில்
கிழிந்து போகிறது
வீடுபோகும் கனவுகள்

காற்சலங்கைகள் ஒலிப்பதில்லை
வீதிகளில்
சப்பாத்து கால்கள்

இடுப்பைத் துளாவும்
கைகளால் எரிகிறான்
'செக்பொயின்ட்' இல் தமிழன்

https://tamileelamarchive.com/



ஒளிப்படம்: இ.ஜீவகுமார்

## காதல் ஐந்தொகை

எல்லைவேண்டும்
நாட்டுக்கு
அதுவரையும் நமக்கு

மனசைப் போலவே
உள்ளங்கைக்குள் சிக்குண்ட
கைக்குட்டை

ஒழித்து விளையாடுகையில்
காணாமல் போகிறது
ஒரு சோடி

அங்கீகரித்தாய்
ஒரு கவிதையால்
கவிஞனை

பேசவந்த இதயங்கள்
கோயிலில் திணறுகின்றன
ஒலிபெருக்கி அலறுகிறதே.

## மருந்து ஐந்தொகை

ஆறிய காயங்கள் யாவற்றிலும்
ஞாபகங்கள்
மருத்துவ மாவீரர்.

மருத்துவ விடுதி விட்டு
பிரியும் போது மட்டும்
ஆறாத காயங்கள்

அம்மாவென்று அழையடா
ஆசையாய் இருக்கிறது
இசைகேட்க

திட்டி
அடங்கிப் போகிறான்
மயக்க மருந்தோடு

மருந்து மருந்தென்று தான்
பழக்கப்பட்டது அப்புவால்
பனை மர நிழலின் கீழ்

https://tamileelamarchive.com/

## மௌனம் ஐந்தொகை

மொழி மறந்தன சருகுகள்
போய் வருகின்றார்கள்
வேவு மனிதர்கள்

வேவுப் பயணங்களின் போது
தாகம் தீர்க்கும்
யானைப் பாதங்கள்

தடங்கள் மறைந்துவிட
கூடவே வருகிறது
வேவுகால மழை

இருளைத் தடவி
வெளிச்சத்திற்கு வருகிறது
வெற்றிகள்

## ஈரம் ஐந்தொகை

உலகமே நனைந்தாலும்
தமக்கு மட்டும் குடைபிடிக்கும்
காளான்கள்

மாரிகாலத் தவளைகள்
தாத்தாசொன்ன உம்மாண்டி
சிரிப்பைத் தருகிறது இப்போது

கல்லெறிந்த கரைக்கு
அலையெறிந்தது
மௌனமாய் கிடந்த குளம்

தாவர இரங்கலில்
வான் தந்த வரம்
பசியற்ற பூமி

மணிக்கட்டு களவு போனபோது
காலை அரித்தது செருப்பு
கோயிலில் யாரதோ

## கறுப்பு ஐந்தொகை

எப்பிடித் தேடுவாள்
சிதைந்த முகத்துள்
அவளது குழந்தையை

ஆயுதங்கள் சிதறும் இனி
உயிர்கள் வருகிறது
உயிராயுதங்களாய்.

அதிகம் நேரமில்லை
கரும்புலி எழுதிச் சென்றான்
ஒருவரிப் புன்னகையில்.

விடத்தல் அழகையும்
அணுவணுவாய் ரசித்தான்
அவனே போய் வெடித்தான்.

சிரிப்போடு போகிறான் அவன்
தூறுகிறது வானம்
நம் விழிகளைப் போல



## பசி ஐந்தொகை

மறைக்க முயன்று
வெளிப்பட்டு விட்டது
காற்சட்டை ஓட்டை

ஒரு ரூபாய் கூட
அவமானப் படுத்தலாம்
காற்றுப் போய்விட்டால்

விரதத்தில் நீயும் நானும்
படையல்களோடு
கடவுள்கள்

தாளக்கட்டில் மட்டும்
தவறுவிடுவதில்லை
ஒழுக்குச்சட்டி

இரைப்பைக்கு வெளியே
பசி பசி
விடுதலை விடுதலை

## தெய்வம் ஐந்தொகை

ஆழங்களும் அற்புதங்களும்
கிறுக்கு தனங்களோடு
சித்தர் பாடல்கள்

கண்மூடி அருந்த அருந்த
திருவாசகத் தமிழுக்குள்
இலக்கியப்போதை

தமிழறிவு மனத்திற்கல்ல
வாழவேண்டும்
திருக்குறள்

பெரியார் கண்களால்
படிக்கப் புரியும்
'சமய நெறிகள்'

முருகன் வரலாறு
திருப்புகழ் அழகு
தெய்வம் புழுகு

https://tamileelamarchive.com/

# ‘என்றுமே மீள முடியாத மயானபூமி’

என சிங்களப் படைஞன் ஒருவன் இடிந்த சுவரில் கரித்துண்டினால் எழுதிச்சென்றான்.



பிரமதீஸ்வரி

இரண்டாம் கட்ட ஈழப்போரின் ஆரம்ப காலம். தமிழீழத்தை ஆக்கிரமித்திருந்த ஸ்ரீலங்கா படை முகாங்கள் பல விடுதலைப் புலிகளினால் அழிக்கப்பட்டும், சில முகாம்கள் அவர்களினால் முற்றுகைக்குள்ளாகியும் இருந்த போது தான் யாழ் டச்சுக் கோட்டையை ஆக்கிரமித்திருந்த ஸ்ரீலங்காப்படையும் புலிகளின் முற்றுகைக்குள் முடங்கிக் கிடந்தது.

இந்த முற்றுகையை முறியடிக்க சிங்கள அரசு மிக்க பகீரதப் பிரயத்தனங்களை நாளொரு வண்ணமாகச் செய்து கொண்டிருந்தது. யாழ் நகரையும், கோட்டையை அண்டிய ஏனைய சுற்றுப் புறங்களையும் ஷெல் அடிகளாலும், விமானக்குண்டு வீச்சுக்களாலும் சின்னாபின்னமாக்கிய சிங்களப்படை அவ்வழிகளில் கோட்டை முற்றுகையை முறியடிக்க முடியாமல் போகவே இறுதியில் கடல் மார்க்கமாக வந்து தீவகத்தின் மேற்குப் பகுதியான ஊர்காவற்றுறையில் தரை இறங்கியது.

1990 ம் ஆண்டு ஓகஸ்ட் 23ஆம் திகதி இது நிகழ்ந்தது. பெருந்தொகையான இராணுவம், மிதமிஞ்சிய ஆயுத தளபாடங்கள் உடன் கடற்படை விமானப்படையின் மேலதிக உதவியோடு மேற்கொள்ளப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கைக்கு ‘ஒப்ரேஷன் போர்ட்’ என்று பெயர் சூட்டப்பட்டிருந்தது.

https://tamileelamarchive.com/

ஊர்காவற்றுறையில் தரையிறங்கி *தீவகத்தின் பிரதான வீதி ஊடாக* முன்னேறி மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, கிராமங்களை ஆக்கிரமித்து பண்ணைக் கடல் மார்க்கமாய்ச் சென்று யாழ் டச்சுக் கோட்டையை மீட்டு பின்னர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதே இந்த 'ஒப்ரேஷன் போர்ட்' இராணுவ நடவடிக்கையின் போர் வியூகமாக இருந்தது.

இந்நடவடிக்கையின் போர்த்தந்திரோபாயத்திற்கு தீவக மண்ணிலேயே வைத்துக் கொல்லப்பட்ட சிங்கள இராணுவ உயர் அதிகாரி டென்சில் கொப்பேகடுவ முக்கிய சூத்திரதாரியாகவும், தலைமை தாங்கி நெறிப்படுத்தும் பொறுப்பதிகாரியாகவும் திகழ்ந்தார்.

ஸ்ரீலங்காவின் அன்றைய ஜனாதிபதி பிரேமதாச, பாதுகாப்பு பிரதி அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தின ஆகியோர் தூபம் இட்டிருக்க மேலதிக யமகிங்கிரப் பணிகளுக்கும், கொள்ளைகளுக்கும் சிங்கள அடிவருடி தேசத் துரோகி டக்ளஸ் தேவானந்தாவின் தலையாட்டிகள் துணையாக வர கோட்டை இராணுவ நடவடிக்கை ஆரம்பமானது.

ஊர்காவற்றுறையிலிருந்து தீவகத்தின் வடக்கு வீதி வழியாக சிங்களப்படை நகர்ந்த போது கண்ணில் பட்டவர்களை சுட்டுக்கொன்று, வீடுவாசல்களையும் சொத்துக்களையும் தீமூட்டியும், சூறையாடியும் வரும் வழியெல்லாம் கோரத் தாண்டவமாடி தரை இறக்கப்பட்டதன் மறுநாள் இரவு மண்கும்பான் சாட்டி வீதியை வந்தடைந்தது.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் மக்கள் வேலணை மற்றும் ஏனைய இடங்களுக்குத் தப்பிச் செல்ல முடியாதபடி இராணுவம் மண்கும்பான் சாட்டி வீதிப்பகுதியில் அன்றிரவு ஓர் இராணுவ வேலியை அமைந்திருந்தது.

இம்மூன்று ஊர்களும் உள்ளடங்கிய பிரதேசத்தின் மேற்குப்புறம் இராணுவம் இருக்க ஏனைய புறங்களில் கடல்கள் அமைந்திருப்பது மக்களை மடக்கிக் கொள்ள இராணுவத்திற்கு ஏற்றதாய் இருந்தது. 1990 ம் ஆண்டு ஓகஸ்ட் 25ந் திகதி. அதாவது இற்றைக்கு 15 வருடங்களுக்கு முன்னான அதிகாலை நேரம். மண்கும்பான், சாட்டிப்பகுதியிகளிலிருந்து மண்டைதீவு, அல்லைப்பிட்டி நோக்கிய படைநகர்வு ஆரம்பமானது.

விமானப்படையின் குண்டு வீச்சுக்கள், கடற்படையின் பீரங்கித் தாக்குதல்கள், ஹெலிகளின் *கலிபர் வேட்டுக்கள் உடன்* முன்னேறி வரும் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கள். மக்கள் செய்வதறியாது பீதியினால் அல்லோல கல்லோலப்பட்டனர். தத்தம் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஓடி அலைந்தனர். ஈற்றில் தம் வாழ்விடங்களுக்கு அண்டிய ஆலயங்களை நாடிச் சென்று மக்கள் பெரும்பாலானோர் அங்கேயே தஞ்சம் அடைந்தனர்.

மக்கள் அவ்வாறு தஞ்சம் அடைந்த ஆலயங்களில் ஒன்றின் அருகே புக்காரா விமானம் குண்டு வீசியதனால் சிதறி ஓடியவர்களை ஹெலி துரத்திச் சுட்டதில் இறந்தவர்கள் பலர்.

இவற்றிற்கும் மேலாக தரைமார்க்கமாக வந்த இராணுவம் செய்த கொலைகளோ ஏராளம். ஏராளம். ஒவ் வொன்றும் வித்தியாசமான கோரச் சம்பவங்கள்.

ஒரு பகுதியாக முன்னேறி வந்த படையினரின் பிடிக்குள் இளைஞன் ஒருவன் அகப்பட்டு விட்டான். அவனைக் கொண்டு அருகிலுள்ள கிணற்றில் தண்ணீர் அள்ளச் சொல்லி அவன் மூலம் பெருந்தொகையான படையினர் நீர் அருந்திய பின் அவ்விளைஞனை அங்கேயே சுட்டுக் கொன்ற சம்பவம்.

இன்னொருவரை தென்னை மரங்கள் பலவற்றில் ஏற்றி இளநீர் பறிப்பித்து அவரைக் கொண்டே வெட்டுவித்து குடித்த பின் அந்த இடத்திலேயே சுட்டுக் கொன்று விட்டு தாம் அங்கேயே நிலை கொள்ள வேண்டுமென்பதற்காக ரயர் போட்டு எரித்த சம்பவம். மண்டைதீவில் குடும்பஸ்தர் ஒருவரின் தலைமீது அம்மியை தூக்கிப் போட்டு கொன்ற பரிதாபம்.

ஏற்கனவே ஒரு வருடத்திற்கு முன் இராணுவத்திடம் மூத்தமகனைப் பறிகொடுத்த தாய் ஒருத்தி தன் இளைய மகனையும் இராணுவம் கொண்டு செல்வதைக் கண்டு கிணற்றில் குதித்து உயிர் துறந்த சம்பவம்.

இராணுவத்திற்கு அஞ்சிஓடி சென்று பற்றைக்குள் மறைந்திருந்து விட்டு அவர்களைக் கண்டதும் கைகளை உயர்த்தி அபயம் அளிக்குமாறு இரந்தபோது சுட்டுக் கொல்லப்பட்ட அப்பாவிகளின் சம்பவம்

பதுங்குகுழிக்குள் இருந்தவர்களை வெளியே வரச்சொல்லி பின்னர் நிரையாக வைத்து துடிதுடிக்க சுட்டுக் கொல்லப்பட்ட மனைவி, மக்களை, நேரே நின்று கண்டு மனம் பொறுக்க முடியாமல் நஞ்சருந்தி *இறந்த குடும்பத் தலைவரின் சம்பவம்.*

என்று இன்னுமின்னும் பலவித கோரச் சம்பவங்களை மண்டைதீவுப் படுகொலைகளில் சொல்லிக் கொண்டே போகலாம். இது ஒருபுறமிருக்க, தாம் காலங்காலமாக வாழ்ந்து வந்த அந்த மண்ணிலேயே சொற்ப நேரங்களுக்குள் ஏதிலிகளாக்கப்பட்டு உயிர் ஒன்றுக்காக மட்டும் ஆலயங்களில் தஞ்சம் அடைந்திருந்த மக்கள் பல ஆயிரம் பேர். இவர்களுக்கும் இங்கு நடந்த கதை வேறு. அவ்வாறு மக்கள் அபயம் அடைந்திருந்த ஆலயங்களில் ஒன்றான அல்லைப்பட்டி சென் பிலிப்பு நேரியார் தேவாலயத்தில் வந்த படையினரின் நடவடிக்கைகளை மட்டும் இங்கே வருமாறு.

ஆலயத்தை அண்டி படையினர் துப்பாக்கி வேட்டுக்களுடன் வந்து கொண்டிருந்த போது தேவாலயத்தின் அருட்தந்தையும், பெரியவர்கள் சிலரும் ஆலயத்தின் வாயிலில் கைகளை உயர்த்தியபடி முழந்தாளிட்டு இராணுவத்தின் வரவை எதிர்நோக்கி அமர்த்தினர். இறைவன் திருவுரு முன் மண்டியிட்டு மக்களுக்காக இறைஞ்சுகின்ற அருட் தந்தையானவர் அன்று அவ்வாலயத்தில் தஞ்சம் அடைந்திருந்த மக்களுக்காக இனவெறி இராணுவத்தின் முன் மண்டியிட்டு இருந்தார்.

அவர் அருகே வந்த இராணுவத்தினரில் அதிகாரி ஒருவன் அருட்தந்தையின் குருத்துவ நிலை பற்றிய ஆவணங்கள் வாங்கிப் பார்த்து விட்டு "உம்முடைய பெயர் இந்திய விடுதலை வீரர் ஒருவருடைய பெயராக இருக்கின்றது. ஏன் நீரும் ஒரு LTTE ஆக இருக்க முடியாது" என்று வினாவினான்.

அருட் தந்தை தனக்கே உரிய அடக்கத்தில் சாந்தமாகப் பதிலளித்த போது அவர் மண்டியிட்ட நிலையிலேயே அமர்ந்திருந்தார்.

இராணுவ அதிகாரி அருட்தந்தையின் வேண்டுதல் எதையும் பொருட்படுத்தாமல் அங்கு குழுமியிருந்த மக்களிலிருந்து சிறுவர்கள், இளைஞர்கள், யுவதிகள், 35 வயதிற்கு மேற்பட்டோார் எனப் பாகுபடுத்தி சிறுவர்களில் துடிப்பானவர்களையும்,

https://tamileelamarchive.com/

இன்று தீவகத்தினை ஆக்கிரமித்துள்ள சிங்களப்படை தீவகவாயிலை 'அழகிய தீவுகளின் நுழைவாயில்' என்று எழுதி விட்டு தீவின் தலைதீவான மண்டைதீவினை 'அபாயகரமான பகுதி' என்று எச்சரிக்கை செய்துவிட்டு அதன் குரல் வளையை இரும்புச் சப்பாத்துக்களால் மிதித்து நசுக்கி வைத்திருப்பது. 15 வருடங்களிற்கு முன் அங்கு நிகழ்ந்த கொடூரங்களை உலகிற்கு மறைத்துவிட்டது போல இப்போது நிகழ்த்தப்படுவனவற்றையும் மறைத்துக் கொள்ளவே.

இளைஞர்களையும், ஏனையவர்களில் (யுவதிகள் தவிர்ந்த) இளமையானவர்களையும் கைது செய்து அங்கு அவனுடன் வந்த படையினரின் உதவியோடு கொண்டு சென்றான். இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் வரை அங்கிருந்த சிறுவர்கள் "தமிழீழம் வேண்டாம்" என உரத்துச் சொல்லுமாறு பணிக்கப்பட்டிருந்தனர்.

தங்கள் கண்முன்னே பிள்ளைகளை , கணவன்மாரை கொண்டு சென்ற போது விட்டுவிடுமாறு கெஞ்சியவர்கள், கும்பிட்டவர்கள் அழுது கத்தியவர்கள் எல்லாம் அவர்களின் அடிவதைக்கு ஆளாகினர்.

இதேபோல் ஏனைய ஆலயங்களில் இருந்தும் ஏராளமான இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர்.

மறுநாள் கைது செய்யப்பட்டவர்களை ஒன்றாக்கி தம்முடன் வந்து சேர்ந்த தலையாட்டிகளின் முன் ஒவ் வொருவராக நிறுத்தப்பட்டனர்.

அங்கு அப்பாவிகளான ஆறு தமிழ் இளைஞர்கள் தேசத்துரோகிகளால் விடுதலைப் புலிகள் எனத் தலையாட்டப்பட்டு சிங்கள இராணுவத்தின் கொலைவெறிக்கு தீனியாக்கப்பட்டனர்.

அதன்பின் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட இளைஞர் குழாமை பார்த்து இராணுவ அதிகாரி ஒருவன் "எங்களுக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் வேணும். வேலை செய்ய வருபவர்களை நாளை விட்டுவிடுவோம். விருப்பமானவர்கள் கைகளை உயர்த்தலாம்" என்ற போது அநேகமான இளைஞர்கள் வேலை செய்தால் தங்களை விட்டுவிடுவார்கள் என்ற ஆவலில் கைகளை உயர்த்தினார்கள்.

கைகளை உயர்த்தியவர்களில் தெரிந்து எடுத்து 25 இற்கு மேற்பட்டவர்களை இராணுவம் அவ்விடத்திலிருந்து வேறு இடத்திற்கு அழைத்துச் சென்றது.

ஏனையோர் மறுநாள் விடுதலையாகினர். ஆசைகாட்டி ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்டவர்கள் இன்று வரை வீடு வந்து சேரவில்லை.

இவர்களை விட, அகதிகளாக மக்கள் தஞ்சம் அடைந்திருந்த ஆலயங்களை விட்டு "'சொற்ப நிமிடங்களுக்குள் மக்கள் வெளியேறி சென்றுவிட வேண்டும்" என்று இராணுவம் பணித்த போது பட்டி திறந்து விட்டால் முண்டியடித்துச் செல்லும் மந்தைகள் போன்று மக்கள் வெளியேறினர்கள்.

அச்சமயம் குறுகிய வீதியின் இருமருங்கிலும் நின்ற இராணுவத்தினரால் பிடித்து இழுத்துச் செல்லப்பட்ட இளைஞர்கள், விரட்டப்பட்ட மக்கள் மண்கும்பான் அ.த.க.பாடசாலை, பள்ளிவாசலை அண்மித்த இடங்களில் மீண்டும் அகதிகளாக இருந்த போது திரும்பவும் அங்கு வந்து 2 தடவைகளாக கைது செய்யப்பட்டவர்கள்,

வீடு பார்க்கச் சென்ற போது திரும்பி வராதவர்கள், என இப்பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்கள் தொகை எழுபதிற்கும் மேலாகவுள்ளது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர், இருவர், ஒரேயொரு பிள்ளையைப் பெற்று அதையும் பறிகொடுத்தவர்கள் பன்னிரண்டு வயதுச் சிறுவன் என்று இவர்களின் அப்பாவிப் பட்டியல் நீளுகின்றது.

15 வருடங்களாகி விட்ட இவர்களின் கைது நடவடிக்கை நேற்றுப் போல, இன்றுபோல, நாளையும் மர்மம் தான். இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு ஒரு மாத காலம் தடுத்து வைத்திருந்து தெய்வாதீனமாக உயிர்தப்பி வந்த சிலர் இங்கு நடந்து முடிந்த விடயங்கள் பற்றிக் கூறிய தகவல்கள் புல்லரிக்க வைப்பனவாக உள்ளன.

ஒரு மாத காலம்வரை மண்டைதீவுப் பகுதியை ஆக்கிரமித்திருந்த சிங்கள படை அந்த மண்ணை விட்டுச் சென்ற பின் பரவலாக அங்கே காணப்பட்ட எரிந்தவர்களின் எச்சங்கள், மூன்று கிணறுகளில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட 55 இற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களின் எலும்புக் கூடுகள் மலசல கூடங்களில் இருந்து தோண்டப்பட்ட எலும்புக் கூடுகள், என்பன மண்டைதீவில் சிங்களப்படை செய்த 2ஆவது கோரக் கொலைகளுக்கு சான்றாகின்றன.

'என்றுமே மீள முடியாத மயானபூமி' என சிங்களப் படைஞன் ஒருவன் இடிந்த சுவரில் கரித்துண்டினால் எழுதிவிட்டு சென்ற சாப வரிகள் இந்தக் கொடூரத்தின் மன வெளிப்பாடாகும்.

கோட்டை முற்றுகையை முறியடித்து வெற்றி காண முடியாமல் போனதோடு, விடுதலைப்புலிகளினால் கோட்டை முகாம் வெற்றி கொள்ளப்படவே ஆவேசமும், மூர்க்கத்தனமும் கொண்ட சிங்களப்படை அப்படை எடுப்பின் ஊழித்தாண்டவத்தை மண்டைதீவை விட்டு வந்த வழியே திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்ட போது ஆடி முடிந்தது.

மண்டைதீவில் அன்று நடந்த கொடூரங்களை ஈராக்கிய அபுகிராப் சித்திரவதைக் கூடத்தின் இன்னொரு வடிவம் மண்டைதீவிலே இடம் பெற்றுள்ளது என்றே சொல்ல வைக்கும்.

அங்கு நிகழ்ந்த சித்தரவதைகளை வடிப்பது வார்த்தைகளுக்குள் அடக்கிக் கொள்ள முடியாதது. மனித குலம் நாணித்தலைகுனிய வேண்டிய ஈனத்தனங்களாகும்.

இன்று தீவகத்தினை ஆக்கிரமித்துள்ள சிங்களப்படை தீவகவாயிலை 'அழகிய தீவுகளின் நுழைவாயில்' என்று எழுதி விட்டு தீவின் தலைதீவான மண்டைதீவினை 'அபாயகரமான பகுதி' என்று எச்சரிக்கை செய்துவிட்டு அதன் குரல் வளையை இரும்புச் சப்பாத்துக்களால் மிதித்து நசுக்கி வைத்திருப்பது. 15 வருடங்களிற்கு முன் அங்கு நிகழ்ந்த கொடூரங்களை உலகிற்கு மறைத்துவிட்டது போல இப்போது நிகழ்த்தப்படுவனவற்றையும் மறைத்துக் கொள்ளவே. கொல்லப்பட்டும், காணாமற் போயும் தம் உறவுகளை சிங்கள இராணுவத்தின் இனவெறிக்குப் பலிகொத்துவிட்டு தவிக்கும் உறவினரின் மனவடு நோய்க்கு இனி மருந்தும் உளதோ.

https://tamileelamarchive.com/



கேணல் ராயூ அவர்களின் 3ம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வில் தேசியத் தலைவர் பங்கேற்பு



26 ஓகஸ்ட் 2005

கேணல் கிட்டு பீரங்கிப்படையணியின் முன்னாள் சிறப்புத் தளபதியான மாவீரர் கேணல் ராயூ அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு நாளையொட்டி வன்னியில் பிரத்தியேகமான இடமொன்றில் நடைபெற்ற நினைவு வணக்க நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு கேணல் ராயூவின் திருவுருவப்படத்திற்கு ஈகைச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தியுள்ளார்.

இந் நினைவு நிகழ்வில் கட்டளைத் தளபதிகள், தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள் போராளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.




லெப். கேணல் ராஜன் கல்விப்பிரிவின் களமுனை ஆசிரியர்களின் பயிற்சிநெறி நிறைவு நிகழ்வில் தேசியத் தலைவர் பங்கு கொண்டு சிறப்பித்துள்ளார்.

22 ஓகஸ்ட் 2005

தமிழீழ விடுதலைப் புலிகளின் லெப். கேணல் ராஜன் கல்விப் பிரிவின் களமுனை ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி நிறைவு நிகழ்வில் தேசியத் தலைவர் பங்கு கொண்டு சிறப்பித்துள்ளார். ராஜன் கல்விப் பிரிவின் மகளிர் பொறுப்பாளர் ஜெயந்தி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பயிற்சி நெறியை நிறைவு செய்த போராளிகளுக்கான சான்றிதழ்களும், பல்வேறு துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களுக்கான பரிசில்களும் தேசியத் தலைவரால் வழங்கப்பட்டது.

அத்துடன் இப்பிரிவில் தொடர்ந்து பணியாற்றிய ஆசிரியர்கள், மற்றும் கற்பித்த ஆசிரியர்கள் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் கருத்துரையாற்றிய தேசியத் தலைவர் அவர்கள், களமுனை ஆசிரியர்களின் பணியின் முக்கியத்துவம் பற்றியும், குறித்த ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட வேண்டிய ஏனைய பணிகள் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

நிகழ்வில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், வடமுனைக் கட்டளைத்தளபதி கேணல் தீபன், படையத் தொடக்கப் பயிற்சிக் கல்லூரியின் சிறப்புத் தளபதி கேணல் ஆதவன், மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுசா, சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா, விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் கா. வே. பாலகுமாரன், மற்றும் சிறப்புத் தளபதிகள், துறைசார் பொறுப்பாளர்கள் போன்றோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

https://tamileelamarchive.com/

# இன்னும் என் மனதில்

சித்திரா சுதாகரன்

புவானியார் கோயில் கொடியேறியிருந்தது. எலியாசரின் மாமியின் உடல் அலங்கரிக்கப்பட்டு வளர்த்தப்பட்டிருந்தது. புனிதம் அக்கா வீடு சாம்பிராணி போட்டது போல புகைந்து கொண்டிருந்தது. இராக்கியேல் மாமி இரண்டு கைகளையும் உயரே தூக்கியபடி பிலப்புனேரியார் கோயில் அடுத்தாருக்குள் முழங்காலில் இருந்தா. அல்லைப்பிட்டியின் பெரிய பணக்காரி ஒரு சீலைப் பொட்டளிக்கு மட்டும் சொந்தக்காரியாய் நின்றா. பயம், கலவரம், கலக்கம் எல்லாவற்றையும் தனக்குள் புதைத்துக் கொண்டு அமைதியான முகத்துடனும் வெள்ளைக் கொடியுடனும் பலிக்குத் தயாரான செம்மறி போல நீக்கிலஸ் குருஸ் சுவாமி ஆமியை எதிர்ப்பார்த்து நின்றார். மனோன்மணி வீட்டு முற்றத்தில் பினாட்டுப் பாய் காய்ந்து கொண்டிருந்தது. சட்டிப் பனங்காய் காய்க்கும் அந்த ஒற்றைப் பனையடியில் ஆச்சி மீன் நோண்டிக் கொண்டிருந்தா.

பதினைந்து ஆண்டுகள் கடந்த பின்னும் என் கிராமம் பற்றி எனக்குள் எஞ்சியிருக்கும் நினைவுகள் இவைதான். தொண்ணூறாம் ஆண்டின் ஆவணி மாதத்தில்தான் யாழ்ப்பாணத்திலிருந்து ஐந்து கிலோமீற்றர் தொலைவில் லைடன்தீவு என்கிற தமுததீவின் கிழக்குக்கரைக் கிராமமான அல்லைப்பிட்டி எனும் என் அழகிய கிராமம் அலங்கோலப்பட்டுபோனது.

சில நாட்களாய் அடிக்கடி அடிக்கும் கெலிக்குப் பயந்து வீட்டில் வெட்டிய பங்கருக்கு பனங்குற்றி போட்டு மூடிக்கொண்டிருந்தேன். அடுத்த முறை கெலி அடிச்சால் பனைக்குப் பின்னால் பதுங்கத் தேவையில்லை பங்கருக்குள் இறங்கலாம் என நினைத்தேன். தவிர, புது பங்கருக்குள் இறங்காமலேயே இடம் பெயர்வோம் என நான் நினைக்கவில்லை.

மேற்குத்திசையாய் கெலி அகோரமாய் அடித்துகொண்டுதான் இருந்தது.

ஊறாத்துறையாலோ அராலியாலோ இராணுவம் இறங்கி பண்ணைக் கோட்டையைப் பிடிக்கப்போகுது என்று ஊரில் பரவியிருந்த ஊகம் அன்று மாலை உறுதியானது.

பெட்டியும், படுக்கையுமாய், சட்டியும் பானையுமாய் மண்கும்பான சனங்கள் தெற்கு றோட்டால் போவது வீட் முற்றத்தில் நின்று பாக்கத் தெரிந்தது. மண்கும்பானுக்கு வந்திற்றாங்களாம். கோழி புடிக்கிறாங்களாம். சாட்டியில ஆரையோ வெட்டிப் போட்டிருக்குதாம். ஏரம்பற்ற மருகனப் பிடிச்சிற்றாங்களாம். வேலிவேலியாய் செய்தி மாறிமாறி வீட்டுக்கு வந்தது. கோட்டயப் பிடிக்கப் போற ஆமி அப்பிடியே வடக்கு றோட்டால போயிருவான் நாங்க தெற்கால இருக்கிற பிலிப்புனேரியார் கோயிலில்போய் இருப்பம் ஆரோ ஒரு அரசியல் அவதானியின் அயலட்டையெல்லாம் பிலிப்புனேரியார் கோயிலுக்குப் படையெடுத்தது. ஏற்கனவே அகதியாய் இருந்த மண்டைதீவுச் சனம், மண்கும்பான் சனம், அல்லைப்பிட்டிச் சனம் என்று கோயில் நிறைந்திருந்தது. மண்டைத்தீவு அல்லைப்பிட்டி பங்குச் சுவாமியும் அங்கதான் அநேக மக்களுக்கு சுவாமி இருக்கிறோ் ஆமி ஒண்டுஞ்செய்யாது என்ற நம்பிக்கைதான். இரவு முழுவதும் இராணுவ வருகையை எதிர்பார்த்திருந்தோம். துவக்குச் சூட்டுச் சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. விடியும் வரை காத்திருந்தும் இராணுவம் வரவில்லை.

விடிந்ததும் ஊரைச்சுற்றிக் கெலியடிக்க, விமானம் திசைக்கொன்றாய் நான்கு பெரிய குண்டுகளை வீசியது.விலாசக் கதை கதைச்சுக்கொண்டு வீடுவளிய படுத்துக்கிடந்து கொஞ்ச நெஞ்சப் பேரும் குடல்தெறிக்க ஓடிக் கோயிலடிக்கு வந்திச்சினம். எல்லாற்ற முகத்திலயும் மரண பயம். இது வரைக்கும் இலங்கை ராணுவம் எங்கட ஊரைத் தொட்டதில்லை. இந்தியன் ஆமியாலயும் பெரிய இழப்புக்கள் இல்லை. எண்டாலும் குமுதினிப் படகு, மண்டடைதீவுப் படுகொலை எண்டு கேள்விப் பட்டதுகள் எல்லாரையும் பயப்பிடுத்திச்சுது. இந்தப் பயத்துக்கு மருந்தாய் ராசேஸ்வரி மாமி செபமாலை சொல்லத் தொடங்கினா. ஊரே திரண்டு மாதாவைப்பாத்து செபமாலை சொல்லிக் கொண்டிருந்தது. இவ்வளவு பக்தியாய் சின்னனுகள், பெரிசுகள், இளந்தாரியள் கண்மூடிச் செபஞ் சொல்லுறத இப்பதான் நான் பாக்கிறன். துவக்குச் சத்தம் கிட்டக் கிட்டக் கேக்க செபமாலை குழம்புது. பொம்பிளையள் குளறத் தொடங்க கோயில் ஜன்னலுக்குள்ளால் பச்சை உடுப்பும் சட்டித்தலைகளும் கோயிலை நோக்கி வருவது தெரிஞ்சுது.

அம்மாவுக்கும் தங்கச்சிக்கும் நடுவில் ஆற்றயோ குழந்தையை மடியில் வச்சுக் கொண்டு கோயில் வாசலடியப் பாக்கின்றன. நிக்கிலஸ் குருஸ் சுவாமி வெள்ளைக் கொடியுடன் முழங்காலில் இருக்கிறார். அவருக்குப் பின்னால கொஞ்சம் மொட்டந்தலையளும் நரைச்ச தலையளும் கையத்தூக்கிக்கொண்டு இருக்கினம். ஆமிக்காரன் எங்களைச் சுற்றி வளச்சிற்றான். எல்லாச்சனமும் கைதயத் தூக்கிக்கொண்டு முழங்காலில் இருக்குதுகள். எனக்குப் பக்கத்திலிருந்த இராக்கியேல் மாமி வலு சின்சியராய் ரெண்டு கைகளையும் உயரத் தூக்கிக்கொண்டு ஆமியின் அடுத்த கட்டளையை எதிபாத்துக்கொண்டிருக்கிறா.

சுவாமியின்ர பணிவும், அணுகுமுறையும் ஆமிக் கொமாண்டர அமைதியாய் கதைக்க வச்சது. நாப்பத்தஞ்சுக்குக் கீழ என மூன்று பிரிவாய் எல்லா ஆண்களும் பிரிக்கப்பட்டு நாப்பத்தஞ்சுக்கும் பதினஞ்சுக்கும் இடைப்பட்ட ஆண்கள் எல்லாரையும் தங்களுக்குப் பாதுகாப்பாக முன்னால் போகவிட்டு மண்டைதீவைப் பிடிக்க ஆமி வெளிக்கிட்டிச்சுது. அப்பதான் எங்களுக்கு அவன் கோட்டையைப் பிடிக்க வரயில்ல தீவுப்பகுதியப் புடிக்க வந்திருக்கிறான் எண்டு விளங்கிச்சுது. பல நூறு இளைஞர்கள் அஞ்சு வரிசையாய் அணிவகுத்து நிக்க முதல் வரிசையில் முதல் ஆளாய் நான் நின்றேன். கோயிலடியிலிருந்து வடக்கு நோக்கிப் படை நகர கிழக்குத் தெருப்பொம்பிளையள் வைச்ச ஒப்பாரி கேட்டுக்கொண்டேயிருந்தது. புனிதம் வீடு எரியுது பாருங்க ஒரு ஆமிக்காரன் தமிழில சொன்னான். புனிதமக்கா தமிழில சொன்னான். புனிதமக்கா வீடு சாம்பிராணி போட்டதுபோல புகைச்சுக்கொண்டிருந்தது.

https://tamileelamarchive.com/



இப்ப எங்கட ஊர்வலம் கிழக்க முன்னாத் திரும்பி தோட்டங்களுக்குள்ளால தென்கிழக்குத் திசையாய் கடற்கரையை நோக்கி நகர்ந்தது. ஒட்டகம் ஒட்டகம் எண்டு அவற்ற உயரத்துக்காய்ப் பட்டந் தெளிக்கிற சிங்காரவேலனை ஆமிக்காரன் ஆழம் பாக்கிறதுக்காக பரவக் கடலுக்குள்ளால நடக்க விட்டான். அவரைப் பின்தொடர்ந்து கீரிக்கரை தாண்டி மண்டைதீவை நோக்கி எங்கள் ஊர்வலம் தொடர்ந்தது.

மறுநாள் மண்டைத்தீவைப் பிடிச்ச ஆமி பணயக்கைதிகளான எங்களை அல்லைப்பிட்டிக்கே திருப்பி அழைத்துவந்தது. இப்ப அல்லைப்பிட்டி - மண்டைதீவு றோட்டால நடந்து அல்லைப்பிட்டிக்கு வந்துசேர்ந்தோம். பழையவிதானையாற்ற வீட்டு வளவுக்குள்ள எல்லாரையும் இருக்கச் சொல்லியிற்று தங்களுக்கு உதவிசெய்ய இருபத்தஞ்சு பெடியளைத் தங்களோட நிக்கச் சொல்லியும் மற்ற ஆக்கள் பிலிப்புனேரியார் கோயிலடிக்குப் போகச் சொல்லியும் ஆமிக் கொமாண்டர் சொன்னான். ஆர் ஆமியோட நிக்கிறது? எண்ட கேள்வி எழும்பாமலே மிகச் சில நிடமிடங்களில் தங்கள் உயிருக்கு உத்திரவாதம் இல்லா நிலையிலும் பலநூறு இளைஞர்களுக்கு மத்தியிலிருந்து இருபத்தஞ்சு பெடியள் எழும்பி ஆமியின் பக்கம் செல்ல மற்றவையள் கோயிலடி நோக்கி நடந்தம். ரெண்டு நாள் பசியுடனும் மண்டைதீவில் அரிதாய்க் கிடைத்த நல்ல தண்ணியில் தீராத தாகத்துடனும் நடந்த எங்களுக்கு மனோன்மணியக்கா வீட்டு முத்தத்தில் பினாட்டுப்பாய் காய்வது கண்ணில் பட வேலியைப் பிரிச்சுக் கொண்டு தேன்கூட்டில் தேனி மொய்க்குமாப்போல எல்லாரும் பினாட்டுப் பாயில பாஞ்சம். பினாட்டுப்பாயின் ஒரு ஓலைத்துண்டும் அதில கொஞ்சப் பினாட்டும்தான் என்ர கையில கிடைச்சது.

தேவாமிர்தத்தை அப்போது சுவைத்தேன்.கோயிலடிக்குவர தப்பிவந்த பெடியளத் தாய்மார் கட்டிப் பிடிச்சுக் கண்ணீர் வடிச்சு ஆமிக்காரன் குடுத்த பாசல் சாப்பாட்டை சாப்பிடத் தந்தினம். இரவு திடீரெண்டு மழைபெஞ்சுது. காவாசிச் சனம்தான் கோயிலுக்குள்ள முக்காவாசிப்பேர் மரத்துக்குக் கீழயும் பனையளுக்குக் கீழயும் நனைஞ்சுகொண்டிருந்திச்சினம். இந்த அமளிக்குள்ள கோயிலுக்குப் பக்கத்துவீட்டில எலியாசரின் மாமி இயற்கையாய் மரணமடைந்தா. அலங்கரித்துக கிடத்தப் பட்ட உடலுக்குப் பக்கத்தில் மகள் இருந்து அழுதுகொண்டிருந்தா.


மறுநாள் காலை எட்டுமணியளவில் இராணுவத்தின் திடீர் உத்தரவு இன்னும் ஒரு மணி நேரத்துக்குள் ஊரைவிட்டுக் கடைசி மனிதனும் வெளியேற வேண்டும் சனமெல்லாம் கையில வைத்திருந்த உடைமைகளோடு தெற்குறோட்டால் மண்கும்பான் நோக்கி நடக்கத் தொடங்கிச்சுது. எலியாசரின் மாமியின் உடல் அப்படியே இருந்தது. அந்த நீண்ட வீதியில் முன்னால் கண்ணுக்கெட்டிய தூரம்வரை திரும்பிப் பார்த்தால் பின்னால கண்ணுக்கெட்டிய தூரம்வரை திரும்பிப் பார்த்தால் பின்னால் கண்ணுக்கெட்டிய தூரம்வரை மக்கள் நடந்துகொண்டேயிருந்தனர். யுவானியார் கோயில் கொடி காற்றில் பறந்துகொண்டிருந்தது. அல்லைப்பிட்டியின் பெரிய பணக்காரக்குடும்பமும் எங்களுடன் நடந்து கொண்டிருக்க அதன் குடும்பத் தலைவி தங்களின் ஒரே சொத்தாய் ஒரு சீலைப் பொட்டளியை மட்டும் ரெண்டு கையாலும் அணைத்தபடி நடந்துகொண்டிருந்தா. எங்கள் வீட்டடி தாண்டிப் போகையில் மற்ற வீடுகள் எங்கள் வீட்டை மறைத்தாலும் ஆச்சி எப்பவும் இருந்து மீன் நோண்டும் அந்த சட்டிப் பனங்காய் காய்க்கும் ஒற்றைப் பனைமரம் கண்ணில்பட எங்கள் வீட்டைக் கடந்து போனேன்.

மண்கும்பான் பள்ளிக்கூடத்தில் ஒரு கிழமை அகதியாய் இருந்து அப்பாவின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவுக்கு வெளிக்கிட்டு அகதியாய் அலைந்து ஐரோப்பா வந்து சேர்ந்து பதினைஞ்சு வருடங்கள் ஆகிவிட்டது. ஏலியாசரின் மாமியின் உடலை ஆமியே குழிவெட்டி மரியாதையாயப் புதைத்தானாம்.

ஆமிக்காரன் தறிச்ச எல்லாப் பனையோடையும் எங்கட சட்டிப் பனங்காய் காய்க்கிற அந்த ஒற்றைப் பனைமரமும் தறிபட்டுப் போச்சுதாம். இராணுவம் சனத்தை மீண்டும் ஊருக்குள் அனுமதித்தபோது யுவானியாருக்குப் பெருநாள் செய்து, கொடியிறக்கினார்களாம். பனாட்டுப் போட்ட மனோன்மணியக்கா இப்ப ஜேர்மனியிலயாம். புனிதமக்காட பிள்ளையெல்லாம் பரிஸிலையாம். இடிச்ச பள்ளிக்கூடத்த ஜேர்மனி கட்டிக் குடுத்திருக்குதாம். கோயில்கள் திருத்தி திருவிழாக்கள் நடக்குதாம். இப்பிடிப் பல கதையளைக் கேட்டாலும் , ஊருக்குப் போய் வாற சனம் போட்டோக்கள் வீடியோக்கள் காட்டினாலும். அழகிய கிராமம் ஆனால் வசிப்பதற்கு மக்கள் இல்லை என்று லண்டன் தொலைக்காட்சியொன்று விவரணப் படம் ஒளிப்பரப்பினாலும் என் ஊர் பற்றிய அந்தப் பழைய ஞாபகங்களை என்னால் அழிக்க முடியவில்லை. என் ஊரை நினைக்கையில் இன்னும் என் மனதில்

யுவானியார் கோயிலில் கொடியேறியிருக்கிறது. ஏலியாசரின் மாமியின் உடல் அலங்கரிக்கப்பட்டு வளர்த்தப்பட்டிருக்கிறது. புனிதமக்கா வீடு சாம்பிராணி போட்டதுபோல புகைந்துகொண்டிருக்கிறது. இராக்கியேல் மாமி ரெண்டு கைகளையும் உயரே தூக்கியபடி முழங்காலில் இருக்கிறா. மனோன்மணியக்கா வீட்டு முற்றத்தில் பனாட்டுப் பாய் காய்ந்துகொண்டிருக்கிறது. நீக்கிலஸ் குருஸ் சுவாமி வெள்ளைக் கொடியுடன் கோயில் வாசலில் நிக்கிறார். சட்டிப் பனங்காய் காய்க்கும் ஒற்றைப் பனையடியில் ஆச்சி மீன் நோண்டிக்கொண்டிருக்கிறா.

https://tamileelamarchive.com/



# ஆன்மக் கனவு

பால் நிலவு காய்கின்ற நிசப்தமான
அந்த அர்த்த ராத்திரிப் பொழுதுகளில்
வானம் கண்ணீர் வடிப்பதளவு
மனக்குமுறல்கள் எமக்குள் இருந்தன
கல்லறை தினங்களுக்காய்
காத்திருந்த வேளைகளில்
எம் காயங்கள் ஆசீர்வதிக்கப்பட்டன

அண்டசராசரம் எல்லாவற்றையும்
வார்த்தைகளில் அடக்கிவிடலாம்
அவர்களின் நினைவலைகள்
அலைகடல் தாலாட்டாய்
அடிக்கடி ஞாபகங்களாய்
வந்து போகும் போதெல்லாம்
வானம் பின்னணி இசைகளில்
கண்ணீரைப் பொழிகிறது

அவர்கள் உன்னதமான சக்திகள்

இரத்தக்களரிகளால் செதுக்கப்பட்ட
புத்தம் புதுப்பூமி ஒய்யாரமாய்
விழுதாகிப் போனவரின் சாட்சிகளாய்
நிமிர்ந்து நிற்கும் போதெல்லாம்
ஒவ்வொரு கல்லறையின்
கருவறைக்குள்ளும் அவர்கள்

கல்லறைச்சுவர்களில் செதுக்கல்களாய்
அவர்களின் வீர வரலாறுகள்
பொறிக்கப்பட்டிருக்கிறது

நினைவினில் சில்லிட்டுப் போகிறது
நெஞ்சங்கள் ஒவ்வொன்றும்

நிமிர்ந்த நெஞ்சங்களோடு
அவர்கள் அனைவரும்
வரிச்சீருடையில் எழுந்து வந்து
புன்னகைப்பது போலவும்
தென்றலை அரவணைத்து
சேதி சொல்வது போலவும்
முழு நிலவும் நட்சத்திரங்களும்
ஆதவனும் வாழ்த்திசைப்பதாகவும் தோன்றுகிறது

இருள் சூழ்ந்த காலம் மாறுவதாகவும்
நினைத்து சந்தோசிக்கிறேன்
எங்கள் மனங்களின் தளிர்கள்
பிடுங்கியெறியப்பட்டபோது
நாங்கள் துடித்த துடிப்பையும்
வேதனையையும் போக்கிய பெருமை அவர்களுக்கே

அவர்கள் உன்னதமான சக்திகள்

அனைத்தையும் இழந்த ஒரு வானத்தின்
வெறுமையாய்
இருந்த என் ஆன்மா
குழையும் ஸ்நேகமாய்
பல்லாங்குழித் தனிமையை விரும்புகிறது

அவர்களின் ஞாபகங்களில்

https://tamileelamarchive.com/



# அஞ்சலி

என்னை சங்கமிக்க வைத்து
எல்லையற்ற வானுக்குள்ளும்
கரையில்லா அலைகடலுக்குள்ளும்
நான் ஒழிந்திருக்கவேண்டும்
அவர்களுடன் உறவாடுவதற்காய்

அவர்கள் எல்லோருடனும்
நாம் கலந்து விட்டதால் ஏற்பட்ட
ஆத்ம உணர்வாய் பிணைப்பாய்
பேனாப் பூக்களைப் பார்க்கிறேன்


என் பேனாக்கள் எப்போதும்
அவர்களைப்பற்றி
பிரசவித்துக் கொண்டே இருக்க வேண்டும்
எங்கள் துயரங்கள் துடைத்திட்ட
வரலாற்றுக் கவிதைகளைப்பற்றி எழுதிட
என் பேனா முனைகிறது

கட்டுக்கடங்காமல் பேனாவில்
உணர்வுகள் சங்கமிக்கின்றன
அவர்கள் மண்ணின் மைந்தர்கள்
அடக்குமுறைகளுக்குள் பீறிட்டுக்கிளம்பிய
வீரத்தின் சின்னங்கள்

மாவீரர்கள்
அவர்களின் அன்பு தொலைதூர
வானுக்கும் அப்பால்
ஆழ் மனதில்
அவர்களுக்கு மட்டுமே
புரியும் படியாய் உயிர்த்துக் கொண்டிருக்கிறது

எங்களை நேசித்ததால்
ஒரு பிறையின் பாடலுடனும்
தென்றலின் சிரிப்புடனும்
இயற்கையின் உயிர்ப்புகளுடனும்
வண்ணத்துப் பூச்சிகளின் அசைவுடனும்
வானத்தூறல்களின் வாழ்த்துகளுடனும்
ஒரு மேகக் கூட்டம் ஊர்வலம் போகிறது

அவர்கள் உன்னதமான சக்திகள்
காயங்கள்
மழைக்கால நீராய் உருகிக் கரைந்து போகிறது
பால் நிலவு காய்கின்ற நிசப்தமான
அந்த அர்த்த ராத்திரிப் பொழுதுகளில்.



https://tamileelamarchive.com/

தி.தவபாலன்



யாழ்ப்பாணத்தின் நெடுந்தொலைவில் உள்ள தரை வழிப்பாதைத் தொடர்பற்ற தீவு நெடுந்தீவு யாழ்ப்பாணத்தில் ஆழ்கடலில் இருக்கும் ஒரே தீவு

# நெடுந்தீவு



ஒளிப்படங்கள்: தி.தவபாலன்

யாழ்ப்பாணத்தில் ஆரம்ப குடியேற்ற தொல் மையங்களில் ஒன்றாக நெடுந்தீவின் மேற்குக்கரை உள்ளது. நெடுந்தீவில் நன் நீரை கொண்ட ஒரே பகுதியாக அதன் மேற் குக்கரை உள்ளது. இதன் காரணத் தால் அத்தீவில் அங்கு மட்டுமே விவசாயம் செய்யப்படுகின்றது. அங்கு செய்யப்படும் விவசாயம் - இன்றுவரை நெல் கிடையாது சாமை, வரகு உட்பட தானிய வகைகளே அங்கு பாரம்பரியமாக பயிர் செய்யப்படு கின்றன. கடற்பகுதி திரவியமாக மீன்களும் இந்த தானியங்களும் பனையுமே நெடுந் தீவின் அடிப்படை உணவு ஆதாரம். 1950 களின் வரை நெடுந்தீவு அடிப்படை போக்கு வரவு படகு வசதிகளைக் கொண்டிருக்க வில்லை. கட்டுமரங்களே போக்குவரவில் அதிகம் பயன்பட்டன. அவை கூட வாடை, சோளகம் ஆகிய காற்றுகளைப் பயன்படுத் தியே மேற்கொள்ளப்பட்டன. ஒரு காற்றில் தீவில் இருந்து புறப்பட்டு ஒரு காற்றில் திரும்புவதாகவே இவர்களின் பயணம் இருந் தது. ஆகவே வெளிப்புற வரவுகளில் தங்கி யிராமல் தானியம் - கடலுணவு - பனை ஆகியவற்றுடன் அவர்கள் தன்னிறைவை பெற்று வாழ்ந்தனர் என்பது உறுதியாகிறது.

நெடுந்தீவு - பசுந்தீவு எனப்படுகிறது. பசுக்கள் நிறைந்ததால் இப்பெயர் வந்தது. அங்கிருந்து தமிழகம் இராமேஸ்வரத்துக்கு பசுக்கள் கொண்டு செல்லப்பட்டதாக ஐதீகங் கள் பல நெடுந்தீவுக்கு உள்ளன. ஆனால் இங்கு நெடுந்தீவின் தொல் மையம் பற்றியே இங்கு பார்ப்போம்.

நெடுந்தீவு கோட்டைக்காடு என்ற மேற் குப்புறத்தில் இப்பொழுது இரு வட்டக்கட்டு

https://tamileelamarchive.com/





வெடியரசன் கோட்டை எனப்படும் இந்த தொல்லியல் மைய வட்டக்கட்டுமானங்கள் (இப்போது காணப்படுபவை) இலங்கை தொல்லியற் திணைக்களத்தினால் கட்டப்பட்டவையாகும். (கந்தரோடை போல) இந்தப் பகுதி முழுமையும் பவளப்பாறைகளால் (முருகைக்கல்) நிறைந்தகாணப்படுகின்றது. இந்தத் தொல்மையத்தின் சான்றுகள் பவளப்பாறைகளால் ஆனவையாகக் காணப்படுகின்றது தூண்களை நடும் குழி கற்கள் கூட பவளப்பாறைகளாகவே உள்ளன இங்கு இலங்கைத் தொல்லியற் திணைக்களம் ஆய்வு எதனையும் மேற்கொள்ளாது இதனை ஒரு பௌத்த மையமாகக் காட்ட விகாரையின் அடித்தளம் போல வட்டக்கட்டுமானங்களை கட்டி விட்டது.

மானங்களைக் காணலாம். ஒன்று பெரிய தொரு வட்டக்கட்டுமானம் மற்றையது சிறிய வட்டக்கட்டுமானம். இதனை வெடியரசன் கோட்டை என மக்கள் கூறினர். நெடுந்தீவை வெடியரசன் என்பவன் ஆண்டதாகவும் அவ னது கோட்டையாக இவை இருந்தன என் பதும் ஐதீகமாக உள்ள கதை. வெடியரசனின் கதை சிலப்பதிகாரத்தில் கண்ணகி பொற் சிலம்புக்கு அவளின் தந்தை வரங்களை பெறுவதான விடயத்துடன் தொடர்புபடுத்தப் படுகின்றது. வரங்களைப்பறிப்பதற்கான போ ரில் வெடியரசன் கொல்லப்பட்டதாக ஐதீகக் கதை கூறுகிறது.


வெடியரசன் கோட்டை எனப்படும் இந்த தொல்லியல் மைய வட்டக்கட்டுமானங்களே இப்போது காணப்படுபவை. இலங்கை தொல்லியற் திணைக்களத்தினால் கட்டப் பட்டவையாகும். கந்தரோடை போல இந்தப் பகுதி முழுமையும் பவளப்பாறைகளால் (முருகைக்கல்) நிறைந்து காணப்படுகின்றது. இந்தத் தொல்மையத்தின் சான்றுகள் பவளப் பாறைகளால் ஆனவையாகக் காணப்படு கின்றது. தூண்களை நடும் குழிகற்கள் கூட பவளப்பாறைகளாகவே உள்ளன. இங்கு இலங்கைத் தொல்லியற் திணைக்களம் ஆய்வு எதனையும் மேற்கொள்ளாது இதனை ஒரு பௌத்த மையமாகக் காட்ட விகாரை யின் அடித்தளம் போல வட்டக்கட்டுமானங் களை கட்டி விட்டது.

ஆனால், இப்பகுதியில் பெரும் அளவில் சிவப்பு - கறுப்பு (பெரும் கற்காலம் 2000-3000ஆண்டுகள் வரை) மட்பாண்டங்கள் சிதறி சிதைந்து காணப்படுகின்றது. குழிகற் கள் தொன்மையானவை நெடுந்தீவில் 1980 களில் மேலாய்வு செய்த கலாநிதி பொ.ரகு பதி இப்பகுதியில் காணப்படும் மட்பாண் டத்துண்டுகள் இப்பகுதியில் கி.மு பல நூற் றாண்டுகளின் முன்பதாகவே மக்கள் வாழ்ந்ததை உறுதி செய்வதாகக் குறிப்பிடு கிறார். தமிழரின் வரலாற்றின் பெரும் கற்காலத்துக்குரிய சிவப்பு - கறுப்பு மட் பாண்டத் துண்டுகளை இன்றும் அங்கு காணலாம். ஓரங்குல தடிப்புடைய ஈமத் தாழிக்குரிய அல்லது கிணறுகளுக்கான மண் வளையங்களுக்குரிய மட்பாண் டத்துண்டுகளையும் இங்கு காணலாம். முறையான அறிவியல் பூர்வமான தொல்லி யல் அகழாய்வு நெடுந்தீவின் மேற்குப் பகுதியில் மேற்கொள்ளப்படுகையில் அங்கு புதைந்துகிடக்கும் எமது முது மக்களின் வாழ்வு வெளிச்சத்திற்கு வரும். இலங்கை - இந்தியப் பிராந்தியத்தில் தொலைதூர தனித்த தீவு ஒன்றில் இருக் கும் 2000ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒரே யொரு தொல்லியல் மையம் நெடுந்தீவு வெடியரசன் கோட்டை ஆகும்.

https://tamileelamarchive.com/



https://tamileelamarchive.com/




கடற்புலிகளின்
துணைப்படை வீரர்கள்

ஒளிப்படம்: தி.தவபாலன்

https://tamileelamarchive.com/

முத்து. இராதாகிருஷ்ணன்



# கூட்டுப்பானை

சில நேரங்களில் நடக்கவே முடியாது என்று நினைக்கும் விடயங்கள் நடந்துவிடும்போது ஏற்படும் மலைப்புத்தான் வசந்தனுக்கு ஏற்பட்டது அந்தச் செய்தியைக் கேட்டு.

சுதாகரித்துக்கொண்டு மீண்டும் வினாவினான்.

என்ன சொன்னாய்?....

சேர் சங்கரலிங்கம் அண்ணர் ஆக்கள் வந்திருக்கினம்..... படலத்திறப்பை வாங்கட்டுமாம். சிவனருள் சைக்கிளில் நின்றபடி இரைந்தான்.

..... வசந்தன் திடுக்கிட்டான்.....

சங்கரலிங்கத்தார் எப்ப வந்தவயள் என வினாவினான்.

அவயள் பதினொருமணி லோஞ்சில வெளிக்கிட்டு வந்திட்டினம்.... ஜெற்றியில இருந்து லான் மாஸ்டரில (சிறிய ட்ரக்கர்) வருகினம். என்னப் போய் திறப்ப வேண்டி வீட்டைத் திறக்கச் சொன்னவயள்.... சிவனருள் விலா வாரியாகச் சொன்னான்.

வசந்துக்கு இருண்டுபோனது

இரண்டு நாளுக்கு முதல் கூழ் குடிக்க வேணும் என்று கணேசலிங்கம் ஆசைப்பட்டு கதைச்சதுதான் இப்ப எல்லா வில்லங்கத்துக்கும் காரணமாப் போச்சு. ரெண்டு நாளுக்கு முதல் தோன்றின எண்ணம் நிறைவேறினது என்னவோ முதல் நாள் இரவுதான்.

மச்சான் ஒடியல் கூழ் காய்ச்சிக் குடிப்பமே.....

மாலையில் ஒன்றாக இருந்து கதைத்தவேளை கணேசலிங்கத்திற்குத் தோன்றின ஆசை இது.

ஓமடா கொஞ்சம் மீனும், இறாலும், நண்டும் எடுத்தா அலுவல் முடிஞ்சுடும். ஆமோதித்தான் சுகராஜ்.....

அந்தத் தீவில் இதெல்லாம் பெரிய பிரச்சனையே இல்லை. ஆளைக் கூட்டிக்கொண்டுபோயே மீன்பிடிக்கலாம். அவ்வளவு பெடியளும் அவரது மாணவர்கள்தான். தீவின் மத்தியில் இருந்த பெரிய பள்ளிக்கூடத்தின் ஆசிரியர்களாக அவர்கள் கடமை புரிந்தனர். நியமனம் கிடைத்தபோது இந்தத் தீவிற்குத்தான் என்று எழுதிக்கொடுத்துவிட்டார்கள். வசந்தன், சுகராஜ், கணேசலிங்கம், தேவர் அதிபருடன் சேர்ந்து ஐந்துபேர்.... அதிபரும் முப்பது வயதுக்குட்பட்டவர்தான். இரண்டு வரிசம் சீனியர். எல்லோரும் சங்கரலிங்கத்தார் வீட்டிலேயே குடியிருந்தனர். சங்கரலிங்கத்தார் குடும்பத்துடன் நகரத்துக்குப்போய் செட்டிலாகி விட்டார். ஆனாலும், இடையிடையே ஏதாவது கோயில் விஷேசங்களைச் சாட்டாக வைத்து வந்திறங்குவார். அந்த வீட்டின் தாய் அறையையும் சமையலறையும் அவர்கள் அவ் வேளைகளில் பயன் படுத்துவர்.

https://tamileelamarchive.com/

மற்றைய நேரங்களில் அவையிரண்டும் பூட்டப்பட்டு திறப்பு அவர்களுடனேயே நகரத்துக்குச் சென்றுவிடும். தட்டுமுட்டுச் சாமான்கள் முதல் பெறுமதியான சாமான்கள் வரை அவர்களின் தேட்டம் முழுவதும் அந்த அறைகளிலேயே.

ஒரு படுக்கை அறையையும், விறாந்தையையும், முற்றத்தில் இருந்த நீண்ட மாலயும், (கொட்டில்) சிறிய வெளிப்புற சமையல் பகுதியையும் வாடகைக்கு விட்டிருந்தனர்.

தேவர் சமையல் செய்வதில் கில்லாடி. பெரிய அடுக்குகள் எல்லாம் செய்து சமையலைத் தொடங்குவார். ஆனால் சாப்பிடும்போது உப்புடன்தான் எல்லோரும் இருக்கவேண்டும். மாலையில் பெடியன் நண்டும் மீனும் கொண்டுவந்தபிறகுதான் கூழுக்கான அடுக்குகள் நடந்தன. நண்டுக்கும் இறாலுக்கும் கைகால் முறித்து கழுவி வைத்தாயிற்று. உப்புப்போட்டு முதலில் அவியவிட்டு பிறகு மீனைப் போடுவம்.

மீனை அவிச்சு முள் எடுக்க வேணும். பரபரப்பாகத் தேவர் சமையலில் இறங்கிவிட்டார். பிறகு ஆரும் சும்மா நிக்கேலாது.

எல்லாம் சரி கமலனும் வருவானாம். நமசியும் வாறான். கிட்டத்தட்ட எட்டுப்பேருக்கு உந்தச் சின்னப்பானையில காணுமே? வசந்தன் கேட்டபிறகுதான். எல்லோரும் ஆளையாள் பாத்து ஆமோதிச்சினம்.

கறியப்போடவே உது காணாது. பிறகு தண்ணிவிட்டுக் கூழை எங்க காய்ச்சிறது.... சுவராஜ் சிரித்தான். எல்லோருக்குமே சிரிப்பு வந்துவிட்டது.

பக்கத்துவீட்டு சிவசு மாமியிட்ட பானை ஏதும் கிடக்கோ எண்டு கேள்.

தேவர் சுகாவைப் பணித்தார். மச்சான் அந்த மனிசி விடுப்பு விடுப்பாகக் கேட்டுக்கொண்டிருக்கும் எல்லோருக்கும் கூழ் கிடைச்சமாதிரிதான். சுவராஜ் மறுத்தான்.

ஏன் அங்கை இங்கையெண்டு அலையிறியள் நான் ஐடியாத்தாறன். எங்கட வீட்டுக்காரரின்ர குசினிக்குள்ள பெரிய கூழ்ப பானை கிடக்கு. போற நேரத்தில ஆச்சியம்மாளுக்கு ஏதோ காய்ச்சி வைச்சவயள். மூச்சு விடாமல் சொல்லி நிறுத்தினான்.

சரி அதுகள் குசினியைப் பூட்டிப்போட்டு போட்டுதுகள். பிறகு ஏன் பிரயோசனம் இல்லாமல் கதைக்கிறியள். சொன்ன தேவர் ஒரு வழியும் இல்ல.... ரெண்டு முறை காச்சுவம் என்றார் முடிவாக. இல்ல தேவர் கொஞ்சம் பொறுங்கோ என்ற வசந்தன் சுக ராசனை அழைத்துக்கொண்டு படுக்கையறைக்குள் சென்றான். படுக்கையறைக்குப் பக்கத்திலேயே சமையலறை உள்ளது.

மச்சான் சுகா இந்தப் பெட்டியில கால்வச்சு உள் சுவரில் ஏறிப்பார் அங்கால் பூட்டின, சமையலறைக்குள்ள பானைகிடக்கோ என்று.... வசந்தன் வரிஞ்சு கட்டிக்கொண்டு காரியத்தில் இறங்கிவிட்டான்.

ஓமடா கணக்கான சைசில பானை ஒன்று கிடக்குது. ஆனா மேலயிருந்து பார்க்கத் தலை சுத்துது. என்னாலை இறங்கேலாது. நீ இறங்கி எடு.

சுகராஜ் மெல்ல இறங்கினான். விறுவிறுவென்று பெட்டியில் ஏறி அறைச்சுவருக்குத் தாவின வசந்தன் சமையலறைக்குள் இறங்க முதல் சுகாவைப் பார்த்தான். மச்சான் நாங்கள் களவுதான் செய்யிறம் அலுவல் முடிச்சவுடனேயே கழுவித் திரும்ப வச்சுப் போடவேணும். வசந்தனின் கருத்தை ஆமோதித்த சுகராஜ் நீ ஏன் யோசிக்கிறாய். அதுகள் நாளைக்கு வரவா போகுதுகள்..... வசந்தன் மெதுவாக இறங்கினான். குப்பென்று புளுதி மணத்தது. இருட்டில் கைகள் பரபரத்து அந்தப் பெரிய பானையைத் தடவிப் பற்றின.

* * *

சேர்..... சிவனருள் உறுக்கினான். சுதாகரித்துக்கொண்ட வசந்தன் சட்டென்று சுகராஜைக் கூப்பிட்டான். மச்சான் வரவா போயினமென்று நேற்றுக்கேட்டது அதுகளுக்கு கேட்டிட்டுது போல. வந்து இறங்கிவிட்டுதுகளாம். புரியாமல் முழித்த சுகாவிற்கு கூழ்பானை கழுவுப்படாமல் கிணற்றடியில் கிடக்கும் விஷயத்தை ஞாபகமூட்டினான். சுகாவிற்கு உறைத்தது. பள்ளிக் கூடத்தில் போட்டது போட்டபடி இருக்க துரிதமாக வீடுநோக்கிச் சென்றனர்.

கூழ்ப்பானை விஷயம் வீட்டுக்காரருக்குத் தெரிஞ்சு போச்சென்டால் எங்களை மனிசராய் மதிப்பினமே... செய்யிறது களவு பாக்கிறது வாத்தியார் வேலை என்று காறித்துப்பிப்போட்டுப் போடுங்கள். வீட்டாலையும் எழுப்பி விட்டுடுங்கள்.

சுகா வேகமாகச் சைக்கிளை மிதித்தான். பின்னாலேயே சிவனருள் வந்துகொண்டிருக்கிறான். டேய் சிவா நீ போ நாங்கள் வீட்டிலபோய் நிக்கிறம் அவையள் வரட்டும் சரியா...... கூறிய வசந்தன் அவையள் எங்கினேக்க வருகினம் எனக்கேட்டான். சைக்கிளைத் திருப்பிய சிவனருள் சரசுவளவுப் பக்கமாக லான்ட்மாஸ்ரர் தாண்டியிருக்கும் எனக் கூறிவிட்டுச் சென்றான்.

சரசுவளவெண்டால் இன்னும் ஏழு எட்டு நிமிசத்தில வந்திடுங்கள். வசந்தன் பரபரத்தான். படலையைத் திறந்து வளவுக்குள் ஓடினான். சுகராஜ் பின்னால் சைக்கிளை உருட்டியபடி....

மச்சான் சுகா படலையடியில நிண்டுபார். வீட்டுக்காரர் வந்தா உடன உள்ளுக்குள்ள வரவிடாத.... சரியா.

சொல்லிக்கொண்டே வசந்தன் கிணற்றடிக்குச் சென்றான். அங்க அந்தப் பெரிய கூழ்ப்பானை கசகசவென்று கிடந்தது. தண்ணீர் ஊற்றிவைத்திருந்தபடியால் கழுவ இலகுவாக இருக்கும். தென்னந்தும்பை எடுத்துப் பானையைத் தேய்த்துக் கழுவினான் கிணற்றில் தண்ணீர் மொண்டு ஊற்றினான். பானை பளிச்சென்று இருந்தது. திருப்பி வந்தது. ஐயனாரே வீட்டுக்காரரைக் கொஞ்சம் தாமதிக்கவை. பானை கழுவுவது ஒன்றும் கடினமாகப் படவில்லை. கழுவிய பானையைத் தூக்கியபடி மாலுக்குள் (கொட்டில்) ஓடினான். பானையை ஈரம்போகத் துடைக்க வேணும். அவையள் வாறதுக்குள்ள வைக்கவேணும்.

பானையில் ஈரமும் இருக்கக் கூடாதே அவசரத்துக்குத் துணி ஒன்றும் அகப்படவில்லை.

கொடியில் கிடந்த ஒரு பெனியனை இழுத்தான். விறுவிறுவென்று துடைத்தான். படலையில் சத்தம் கேட்டது. பாய்ந்து எட்டிப்பார்த்தான்.

தேவர் வந்துகொண்டிருந்தார். ஓ அவரும் கூழ் குடிச்சவர்தானே. சுகராஜ் தேவரைப் படலையில் மறித்துவிட்டு தான் மாலுக்குள் ஓடிவந்தான்.

தேவர் கதைவிடக்கூடிய ஆள் வீட்டுக்காரரைக் கொஞ்சம் மடக்கிக் கதைகுடுத்து மினக்கெடுத்தக்கூடியவர்தான். சுகராஜ் உள்ளுக்குள் ஓடிவந்தான். வசந்தன் பானையை நன்றாகத் துடைத்துவிட்டான். இனிப் பானையைக் கொண்டுபோய் பூட்டின சமையலறைக்குள்ள வைக்கவேணும். படுக்கையறைக்குள்ளால ஏறி அங்கால பூட்டின சமையலறைக்குள்ள இறங்க

https://tamileelamarchive.com/

வேணும். மச்சான் நான் இறங்கிறன் நீ பானையைத் தா. பெட்டியில் ஏறி சுவருக்குப் போனான் வசந்தன். படலையடியில் லாண்ட்மாஸ்ரர் சத்தமும் ஆட்கள் இறங்கிற சத்தமும் கேட்டது. தேவர் ஏதோ கதைப்பதுவும் கேட்டுக்கொண்டிருந்தது.

வசந்தன் பானையைக் கையில் பிடித்தபடி சமையலறைக்குள் இறங்கினான். கைநடுங்கியது. எடுத்த இடத்தில் பானையை வைத்தான். அப்பா விஷயம் முடிஞ்சுது. மனதில் ஒரு நிம்மதி தோன்றியது. பெரிதாக வாய்விட்டுச் சிரிக்கவேண்டும் போல் தோன்றியது.

அப்ப பள்ளியில் இன்டர்வெல் விட்டுப்போட்டுது போல எல்லோரும் இஞ்ச நிக்கிறியள் எங்கட பிரச்சனையில யுத்தநிறுத்தம் ஏற்பட்ட மாதிரி ஹா.....ஹா.... சங்கரலிங்கத்தாரின் தடித்தகுரலும், சிரிப்பும் மாலுக்கு வெளியில முற்றத்தில் மிக அருகில் கேட்டது. வசந்தன் பரபரவென்று மீண்டும் தொங்கி படுக்கையறைப் பக்கம் சென்று பெட்டியால் இறங்கினார். தேவர் ஏதோ மினக்கெடுத்துவதற்காக இனப்பிரச்சனை பற்றி ஒரு கதையைத் தொடக்கிவிட்டிருப்பார். சங்கரலிங்கத்தார் பிரச்சனையைத் தேவரோட சேர்த்துக்கொண்டுவந்திட்டார். வசந்தன் படுக்கையறைக்க வெளியால வர சங்கரலிங்கத்தார் விறாந்தையில ஏறினார்.

சுகராஜு தேவரும் வசந்தை நோக்கினர். வசந்தன் கண்களால் சரி என்றான்.

ஓ எல்லாம் சரி பானையைத் திருப்பி வச்சாச்சு என்ற நிம்மதி எல்லோர் முகத்திலும் தோன்றியது. ஒ கொஞ்சநேரம் பட்ட பாட்டை எண்ணிப்பார்க்க மனம் கூசியது.

சங்கரலிங்கத்தார் விறாந்தையால் சென்று சமையலறை வாசலுக்கு வந்தார். மாஸ்ரர் நான் உங்களுக்கு ஒண்டு சொல்ல மறந்துபோட்டன். நான் போனமுறை வந்துபோனபோது இந்த சமையல்கட்டு அறையைப் பூட்டமறந்திட்டுப் போயிட்டன். அதனால என்ன? நீங்கள் இருக்கிறியள்தானே எண்டு விட்டுட்டுப்போட்டன். எனச் சொல்லியபடி சமையல் அறைக்கதவைத் தள்ளித் திறந்தார்.

நன்றி: வெளிச்சம்

# வசந்தம் துளிர்க்கும்

சுகிர்தா

காலம் எம்மை வதைக்கிறது
கடல் எம்மை வஞ்சிக்கிறது

பிரிந்த உறவுகளும்
தொலைந்த உறவுகளும்
உடைந்த மனங்களும்
உறைந்த உணர்வுகளும்

கட்டிய வீடுகளும்
சேர்த்துவைத்த செல்வங்களும்
இராட்சத அலையால் இல்லாது அழிந்ததுவே.

போர்தந்த அவலங்கள்
போய் முடியும் முன்னே அலையே
நீ தந்த காயங்களால் மனங்கள் ஆறாதிங்கே

காலம் எம்மை வதைக்கிறது
கடல் எம்மை வஞ்சிக்கிறது

நாம்பட்ட துயரங்கள்
நாம்பட்ட அவலங்கள்
என்றுமே வரலாறாய்
தமிழர் வாழ்வின் கல்வெட்டுகளில்

புண்ணுண்ட மனங்களிற்கு
புத்துயிர் ஊட்டிடுவோம் - என்றும்
உற்ற உறவுகளாய்
உறுதுணையாய் விளங்கிடுவோம்.

எத்துயர் வரினும்
எத்தடை வரினும் — தளராது
தலை நிமிர்வோம் தடை தகர்த்து



ஒளிப்படம்: இ.ஜீவகுமார்

https://tamileelamarchive.com/

# தியாகி திலீபன், கேணல் சங்கர் நினைவாக...

நினைவு நாள் : செப்ரெம்பர் – 26



தியாகி லெப் கேணல் திலீபன்



கேணல் சங்கர்

நாமூன்று நாட்களாய்
நாவினிலே ஏதுமில்லை
நாவரண்டு போனபின்பும் — உன்
நாவில் சொல் வரவில்லை
ஒட்டிய வயிறும்
ஓய்ந்து தான் போகவில்லை
புலியாய் நீ எழுந்ததினால்
அசோகச் சக்கரமும்
அரசமரக்கிளைக் கிளைகளும்
புரண்டது புழுதியிலே
கொன்றவர்களையே
வென்றவன் நீ

அன்று நீ உரசிவிட்ட சிறுநெருப்பு
எம்மக்கள் காட்டுத்தீயாகி
கயவர்களைக் கலைக்கிறது - நீ
காத்திருந்த தமிழீழம்
கனவாகிப் போகாது
விழித்திரு தாரகையாய்
விடிவு நாளை நிச்சயமே!

கங்குல் ஏறி விளையாடும்
கனவோடு காத்திருந்தோம்
கண்ட கனா நனவாகி
கண்முன்னே நிழலாட
கறுப்புப் பெட்டி ஒன்றை
கை தவற விட்டோமே.
கப்பல் கரை சேரும் போது
கை - துடுப்பிழந்து போனாலும்
கை இரண்டு உண்டென்று
கலங்காது உன் வழி நடப்போம்
கற்பகதருவாகி - நீ
வளர்த்துவிட்ட வடலிகள் - நாளை
வானளாவி முகில் தட்டி
உன்வீரம் உரைத்து நிற்கும்
அண்ணா நீ, வித்தாக வீழ்ந்தாலும் - எம்
வேர்களுக்கு பலமாகி
விடுதலைக்கு துணைநிற்பீர்.

பே.சுகந்தன்

https://tamileelamarchive.com/

எல்லைக்கோடுகளின் உள்ளே
திக்கித்திணறும் சிறுபான்மையினரின்
தேசம் எது புதைகுழி மையமா
சூரியகந்தை, செம்மணிகளென
தேசமெல்லாம் புதைகுழிகள்
புதைகுழிக்கப்பட்டவை ஒட்டுமொத்த
மனிதவிடுதலையும் விழுமியங்களும்
மகத்துவமிக்க மானுடத்தளிர்களும் தான்- சு.வி



# ஸ்றெபிறெனிஸா – புதைகுழிகளின் மேலொரு நகரம்

■ தாவித்

சிறீலங்கா அரசுக்கு இனவெறித்தினவு எடுக்கும்போதெல்லாம் நடத்திமுடித்த படுகொலைகளின் வரிசையிலே நவாலிப் படுகொலையின் பத்தாண்டு நினைவுதினம் யூலை 9. செப்ரெம்பர் மாதம் நாகர்கோவில் படுகொலையின் பத்தாண்டு நினைவு தினம். இவை விழுத்தும் வெளிச்சத்தின் பின்புலத்தில் பொஸ்னியா- ஹேர்ஸிகோவினாவின் ஸ்றெபிறெனிஸா படுகொலையைப் பார்க்கமுடியும். ஸ்றெபிறெனிஸா ஐரோப்பாவின் சபிக்கப்பட்ட நகரம். அதன் அழகிய பசுமையான பள்ளத்தாக்குகளெங்கும் மரணத்தின் இருண்ட நிழல் படர்ந்திருக்கின்றது. காவு கொடுத்த கணவன்மார்களதும் புதல்வர்களதும் முறையான இறுதிச்சடங்குகளை நடத்தத் தேவையான ஓர் எலும்புத்துண்டேனும் கிடைக்க பத்தாண்டுகளாக காத்திருக்கின்ற உறவுகளின் துயரம் விழிகளில் அணைகட்டி நிற்கிறது. இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் அதுவும் ஐரோப்பாவில் 8000 மக்கள் படுகொலை செய்யப்படுவதை பார்த்துக்கொண்டு நிற்க வேண்டியிருந்த பரிதாபநிலை குறித்து ஐரோப்பாவும் உலகமும் வெட்கித் தலைகுனிகின்றன.

வெள்ளிச்சுரங்கங்கள் சூழ்ந்த, அதன் பெயரால் வெள்ளிநகரம் எனப்பொருள்பட அழைக்கப்படும் ஸ்றெபிறெனிஸா பொஸ்னியாவின் எல்லைப்புற நகரமாகும். பொஸ்னியாவின் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் துரத்தப்பட்ட முஸ்லிம் மக்களின் இறுதிப்போக்கிடமாக இந்நகரமே இருந்தது. பொஸ்னிய முஸ்லிம்களின் இந்தத் துயரநிலையைப் புரிந்துகொள்ள நாம் வரலாற்றை நோக்க வேண்டும். ஐரோப்பாவின் பால்கன் பிரதேசம் காலாதிகாலமாக இரத்தத்தில் குளித்து வந்திருக்கிறது. சேர்பியருக்கும், முஸ்லிம்களுக்கும், சேர்பியருக்கும், குறோசியருக்கும் - குறோசியருக்கும், முஸ்லிம்களுக்கும் என வழிவழியான பகைமையுணர்வு கனன்று கொண்டே இருந்திருக்கிறது. அவ்வப்போது ஆட்சிக்கு வரநினைக்கும் அரசியல்வாதிகள் இனவாதத்தை ஆயுதமாக்கி அரியணையேற, இப்பிரதேசம் அமைதியிழந்துபோவது வரலாறு. சேர்பியருக்கும் முஸ்லிம்களுக்குமான பகையுணர்வின் ஆணிவேர் 600 ஆண்டுகளுக்கு முன்னே ஆழப்பதிந்த ஒன்று. துருக்கியின் ஒட்டோமான் பேரரசு தனது ஆதிக்கத்தை பால்கன் பிரதேசத்திற்குள்ளும் விரிவுபடுத்துகின்ற காலம் சேர்பியர்கள் ஒட்டோமான் இஸ்லாமியர்களின் விரிவாக்கலை மிகத்தீவிரமாக எதிர்த்தார்கள். 1389 இல் பொஸ்னியாவின் கொசோவோவில் இடம்பெற்ற முக்கியமான இறுதிச்சமரில் சேர்பியர்கள் தோல்வியுற்றனர். அன்றிலிருந்து கொசோவோவில் முஸ்லிம்கள் பல்கிப் பெருக ஆரம்பித்தனர். அத்தோல்வி சேர்பியர்களின் தேசியஆன்மாவில் ஆழமான வடுவாக மாறியது. இச்சமரிலேற்பட்ட தோல்வியை இன்றுவரை அவர்கள் நினைவுகூருகின்றார்கள். 90களில் இத்தகைய நினைவுதினமொன்றில் தான் அகண்ட சேர்பியா என்ற கனவை அப்போதைய யூகோஸ்லாவியத் தலைவரும் பொஸ்னியமுஸ்லிம் படுகொலைகளுக்கு முக்கிய காரணகர்த்தாவுமான ஸ்லோபொடான் மிலோசெவிச் உருவாக்கினார். விளைவு, ஐரோப்பிய மண்ணில் மீண்டும் ஒஸ்விற்சுகள் முளைக்க ஆரம்பித்தன. முஸ்லிம்கள் பேரூந்துகளிலும் ரயில்களிலும் திணிக்கப்பட்டு வதைமுகாங்களில் வதைக்கப்பட்டனர். படுகொலை செய்யப்பட்டனர்.

https://tamileelamarchive.com/

இதன் உச்சக்கட்டம் யூலை 11, 1995 இல் ஸ்றெபிறெனிஸாவில் படுகொலை வாரமாக விடிந்தது. மிலோசெவிச்சின் ஆசி பெற்ற பொஸ்னிய மாநில முதல்வர் றடோவன் கிறட்ஷிக்கும் சேர்பிய ராணுவ ஜெனரல் மிலாடிக்கும் இப்பணியை செவ்வனே செய்து முடித்தனர். ராணுவ ஜெனரல் மிலாடிக் பற்றி சில வரிகள் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். மேற்குலகப் பத்திரிகையாளரொருவர் முஸ்லிம்களை ஏன் இவ்வளவு வெறுக்கிறீர்கள் என்று கேட்டதற்கு மிலாடிக் சொன்ன பதில்: "அவர்களில் ஒருவனுக்கு பாவம் என்று இடமளித்தால் கையோடு ஐந்து மனைவிகளையும் கூட்டிவருவான். கண்மூடித்திறப்பதற்குள் ஒரு கிராமத்தையே உருவாக்கிவிடுவான்" முஸ்லிம்களை அழிப்பதில் ஒரு வெறியுடனும் அதைச் செவ்வனே செய்து முடித்த தன்னைப்பற்றிய மமதையுடனும் பொஸ்னியக் களங்களெங்கும் உலா வந்தான்.

முஸ்லிம்களை அழித்தொழிக்கும் பணி தங்குதடையின்றி நிகழ்வதற்கு ஐ.நா. அமைதி காக்கும் படையும் ஒரு முக்கிய காரணம் என்று சொன்னால் வாசகர்கள் பலர் அதிர்ச்சியுறக்கூடும். ஆனால் உண்மை. உலகிலே அமைதியைப் பேணவேண்டும் என்ற நன்னோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் இன்றுவரை உலகின் பல இடங்களில் அமைதி பேணல் மற்றும் மகத்தான பல சேவைகளை வழங்கிவருகின்ற அமைப்பை எழுந்தமானமாகக் குற்றஞ்சாட்டுவது இங்கு நோக்கமல்ல. இப்போது பரவலாக விவாதிக்கப்படுகின்ற ஐ.நா. சபை மறுசீரமைப்பிற்கான வாதப்பிரதிவாதங்கள் எழுந்ததற்கான தோற்றுவாயே ருவாண்டா பொஸ்னியா போன்ற இடங்களில் அதன் கொள்கைக்கும் செயற்றிறனுக்கும் ஏற்பட்ட தோல்விகளால் உருவானது.

92 காலப்பகுதியில் யூகோஸ்லாவியா உடைந்து பிரதேசவாரியாக போர் வெடித்த போது அங்கு அமைதி பேணவென ஐ.நா.வின் அமைதிப்படை சென்றது. அதில் ஐரோப்பிய நாடுகளின் படைவீரர்களே அதிகம் இருந்தனர். அமைதிப்படையினர் எந்தவொரு பக்கமும் சாரக்கூடாது. ஒரு பக்கத்தினருக்கு சார்பாக நிலைஎடுக்கக்கூடாது படையினருக்கு ஆபத்து நேரும்வேளை தவிர வேறு எந்த வேளையிலும் திருப்பித்தாக்கக்கூடாது. என்று ஐ.நா. மேலதிகாரிகளின் கட்டளைகளுக்கும் கள யதார்த்தங்களுக்கும் இடையே சாதாரண படைவீரர்கள் கிழிபட்டனர். அடுத்ததாக, அமெரிக்கா தரைவழிப்படைகளை அனுப்பப்பிடிவாதமாக மறுத்துவிட்டது. சோமாலியாவில் சமகாலத்திலேற்பட்ட கசப்பான அனுபவங்களால் அமெரிக்கா அந்த முடிவை எடுத்தது. ஐரோப்பியநாடுகளோ தரைவழியாகப் படைகளை பொஸ்னியாவுக்கு அனுப்புவதை வலியுறுத்தின. அமெரிக்காவோ உயர்தொழிநுட்பங் கொண்ட தன் வான்பலத்தைப் பிரயோகிப்பதை வலியுறுத்தியது. ஐரோப்பிய நாடுகளோ வான்தாக்குதலால் அந்தப்பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் தங்கள் படைவீரர்கள் மீது சேர்பியரின் ஆத்திரம் திசை திரும்பும் எனக் கூறிமறுத்தன.

இவ்வாறான இழுபறிநிலையால் ஐ.நா. மேல்மட்டத்திலும் நேட்டோ மேல்மட்டத்திலும் தீர்க்கமான முடிவுகளெடுப்பது தாமதப்பட்ட ஒவ்வொரு கணப்பொழுதும் சேர்பியர்களின் அழிப்பு நடவடிக்கைகள் துரிதமடைந்தன. ஐ.நா. படைகளின் களப் பொறுப்பதிகாரியான பிரான்ஸ் நாட்டின் ஜெனரல் ஃபிலிப் மோறியோன் ஸ்றெபிறெனிஸாவில் தஞ்சமடைந்திருந்த மக்களுக்கு இறுதிவரை நிறைவேற்றப்படாத வாக்குறுதியொன்றை வழங்கியதால் (ஐ.நா. தலைமையகத்திலும் நேட்டோவிலும் வைத்த நம்பிக்கையால் வழங்கியிருக்கலாம்) அம்மக்களின் தலைவிதியை நிர்ணயித்த துரதிர்ஸ்ட நிலை ஐ.நா.விற்கும் நேட்டோவிற்கும் ஏற்பட்டது. "ஐ.நா. அமைதிப்படையின் பாதுகாப்பில் நீங்கள் இருக்கிறீர்கள். உங்களுக்கு எந்தவித ஆபத்தும் நேர நாங்கள் விடமாட்டோம்" என்பதே அந்த வாக்குறுதி. வாக்குறுதி வழங்கப்பட்ட சில நாட்களுக்குள்ளாகவே ஐ.நா. படைகளின் கண்காணிப்பு நிலைகளைத் தகர்த்து 30 டச்சுப்படைவீரரைச் சிறைப்படுத்தி நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிய ஜெனரல் மிலாடிக், ஐ.நா. பாதுகாப்புவலயமாக இருந்த ஸ்றெபிறெனிஸாவுக்குள் தங்குதடையின்றி உள் நுழைந்து, அங்கு முகாம்களுக்கு அனுப்பப்படவிருந்த மக்களிடம் ஐ.நா.வும் உங்களுக்கு உதவமுடியாது. அமெரிக்காவும் உதவமுடியாது நான் தான் உங்களுக்குக் கடவுள் என்று அவனால் முழங்கமுடிந்தது.

சேர்பியப்படைகள் ஸ்றெபிறெனிஸாவுள் நுழைவதை ரகசியமாக நிகழ்த்தவில்லை. மிக வெளிப்படையாக, ஆரவாரமாக, ஒரு விழா போல நுழைந்தனர் ஜெனரல் மிலாடிக் டிவி கமராக்கள் முன்னின்று பொட்டோகாறி நோக்கி முன்னேறுங்கள் என்று பெருமிதம் பொங்கப் படைகளுக்குக் கட்டளையிட்டான். அந்தப் பொட்டோகாறி தான் டச்சுப்படை வீரர்கள் நிலைகொண்டிருந்த படைத்தலைமையகம். அங்கு தான் ஸ்றெபிறெனிஸாவிலிருந்து தப்பி ஒட்டிய அகதிகள் தஞ்சம் புகுந்திருந்தனர். கடைசியாக டஹ்யாஸ் புரட்சிக்குப்பின்னர் இந்தப்பகுதியின் துருக்கியரைப் பழிவாங்கும் நேரம் வந்துவிட்டது என அங்கு மிலாடிக் கூறினான். இந்தக்குறிப்பு 191 வருடங்களுக்கு முன்பு 1804 இல் ஒட்டோமான் பேரரசின் துருக்கியர்களுக்கு எதிராக எழுந்த சேர்பியப்புரட்சி பயங்கரவன்முறை கொண்டு அடக்கப்பட்டதைக் குறித்துநிற்கிறது. ஆம், பொஸ்னியாவில் காலம் நகராது நின்றுவிட்டது. 191 வருடங்கள் சேர்த்துவைத்திருந்த வஞ்சம் வடிகால் தேடியிருக்கிறது.

இன்று போர்க்குற்றங்களுக்கான சர்வதேச நீதிமன்றத்தினால் குற்றவாளிகளாகக் காணப்பட்டும்கூட மிலாடிக்கும் றடோவன் கிறட்ஷிக்கும் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பி உலா வருகிறார்கள். முஸ்லிம் மக்களைப் படுகொலை செய்த உண்மையைப் பிடிவாதமாக மறுத்துவந்த சேர்பியர்கள் தற்போது படுகொலைகளின் அழியாத சாட்சியாக ஒளியிழைப்பேழை ஒன்று வெளியான பின்பு அரைமனதுடன் ஒத்துக்கொள்கிறார்கள். வரலாற்றை மறைப்பதால் உண்மைகள் மக்கிப்போவதில்லை என்பதை அவர்கள் உணர்ந்து பகிரங்கமாக மன்னிப்புக் கேட்பதன் மூலம் தங்கள் மீது படிந்த வரலாற்றுக்கறையை ஓரளவுக்கேனும் போக்கிக் கொள்ளமுடியும். அந்தவகையில் முதன்முறையாக இப்படுகொலைகளின் பத்தாண்டு நினைவுதினநிகழ்வில் சேர்பியத் தலைவர் போறிஸ் ராடிக் சேர்பியக் கடும்போக்காளர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது கலந்துகொண்டது அதன் முதற் படியாகக் கொள்ளலாம்.

ஐ.நா.வும் உலக சமூகமும் இப்படுகொலைகளுக்குத் தார்மீகப் பொறுப்பேற்றுத் தலைகுனிந்து நிற்கின்றன. நேட்டோவின், மேற்குலகின், ஐ.நா.வின் மிகப்பெரிய தோல்வி ஸ்றெபிறெனிஸா என்கிறார்கள். பால்கன்பிரதேசத்திற்கான முன்னாள் அமெரிக்க விசேடத் தூதுவர் றிச்சட் ஹோல்புறுக். இந்த மக்கள் சர்வதேசப் பாதுகாப்பிலே முழுநம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆனால் சர்வதேச சமூகமாகிய நாங்கள் அவர்களைக் கைவிட்டுவிட்டோம். என்கிறார் ஐரோப்பிய ஆணைக்குழுவின் வெளிவிவகாரத் தலைமைச் செயலர் ஜாவியர் சொலானா. சர்வதேச விஞ்ஞானிகள் களஞ்சியங்களில் கூரை முட்டும்வரை அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் பிரேதப்பொதிகளை ஒவ்வொன்றாய் அடையாளம் காணும் பகீரதப் பணியில் பகலிரவாய் ஈடுபடுகிறார்கள். ஏற்கனவே தோண்டப்பட்ட 60 புதைகுழிகளை விட இன்னும் இனம் காணப்பட்டுள்ள 20 பாரிய புதைகுழிகள் தோண்டப்படக் காத்துக்கொண்டிருக்கின்றன.

மெல்ல மெல்ல ஸ்றெபிறெனிஸாவில் மீளக்குடியேறும் முஸ்லிம் மக்களோ தங்கள் உறவுகளின் ஆவிகள் அமைதியற்று அலைவதாய் உணருகிறார்கள். வேண்டப்படாதவர்களை வெறிப்பது போன்று சேர்பிய அயலவர்களின் பார்வை இருப்பதாய் உணருகிறார்கள். தங்கள் உறவுகளைச் சுட்டுத் தள்ளிய கொலைகாரர்கள் சுதந்திரமாக நடமாடும் வீதியிலேயே தாங்களும் நடமாட வேண்டிய கொடுமையை எண்ணிக் குமுறுகிறார்கள். ஒஸ்விற்ஸ் வதைமுகாம் போன்ற வரலாற்றின் மறக்கப்பட்ட பயங்கரக் கனவுகளாக இருக்கவேண்டிய நிகழ்வுகள் மீண்டும் மீண்டும் ஸ்றெபிறெனிஸாவாக, ருவாண்டாவாக, நவாலியாக, நாகர்கோவிலாக நனவாகும் அவலம் தவிர்க்கப்பட உறுதியான செயற்பாடுகளை மானிடம் கோரி நிற்கிறது. ■

https://tamileelamarchive.com/

■ மீரா

# ஸ்றெபிறெனிகாவில்..........
# நீதி தேவதையின் கண்களை கட்டப்பட்டிருக்கிறது

பொஸ்னியாவில் வாழும் எண்ணாயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் கொன்றொழிக்கப்பட்டு பத்து வருடங்கள் உருண்டோடி விட்டன. அவர்களின் சிதைகளின் மேல் குர்ஆன் எரிக்கப்பட்டது. அவர்களது வாழ்க்கை எரிக்கப்பட்டது. பேய்களின் நகரம் என வர்ணிக்கப்படும் ஸ்றெபிறெனிகாவில் முஸ்லிம்ககளின் தொழுகுரல்களும் அழு குரல்களும் ஒலித்தபடி இருக்கின்றன.

ஸ்றெபிறேனிக்கா ஐ.நா.வின் கைகளிலிருந்து விடுபட்டு போய்விடுகிற பொழுது பிரச்சினை பூதாகரமாகி விடுகிறது. பின்னர் பொஸ்னோ - சேர்பின் அதிகாரத்துக்குள் அகப்படுகிறது. எக்ஸ் - யூகோஸ்லாவியா மீது சர்வதேச நீதி மன்றம் குற்றம் சாட்டுகிறது. ஸ்றெபிறெனிக்காவில் வாழும் முஸ்லிம் மக்கள் படுகொலைசெய்யப்பட்டார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறது. இது ஒரு திட்டமிட்ட படுகொலை என சர்வதேச நீதிமன்றம் சொல்கிறது. பொஸ்னிய மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட இந்த படுகொலை குறித்த ஆவணப்படம் எல்லா உண்மைகளையும் வெளிக்கொணர்ந்திருக்கிறது.

இந்தச் செயலில் பங்குபற்றிய குற்றவாளிகள் அனைவரையும் நீதிமன்றத்திற்கு முன்பு வருமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொஸ்னியா சேர்பிய நாட்டினுடைய முன்னாள் அரசியல் தலைவர் றாடொவன் கராட்சியும் (Radovan Karadzic), முன்னாள் இராணுவத் தலைவர் றட்கோ மிலடியும் (Ratko Mladic), சேர்பியர்களின் முன்னாள் கமாண்டோ ஸ்டாகோ தொலிமிர் (Zdravko Tolimir) அவர்களும் இன்னும் சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் இருக்கிறார்கள்.

இவர்கள் எங்காவது தப்பி தலைமறைவாய் ஒழிந்திருக்கக் கூடும். அவர்களை தேடிக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்தவேண்டும் என மக்கள் கோருகிறார்கள். அவர்கள் வெளியரங்கமாக மறுத்தாலும் அவர்கள் உளத்தால் இந்த படுகொலையை தாமே புரிந்தோம் என்கிற உண்மையை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

சேர்பியர்களின் மதத் தலைவர்களில் ஒருவர் பொஸ்னிய இளைஞர்களை படுகொலை செய்யுமாறு ஆசிர்வதிக்கின்ற காட்சி எல்லோரையும் பிரமிக்க வைக்கிறது. அதுவே மிகப் பெரிய சாட்சியமாகவும் விளங்குகிறது.

12.07.2005 அன்று நடந்த நினைவுகூறல் தினத்தில் நாற்பதினாயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டிருந்தார்கள். ஸ்றெபிரெனிக்கா நுழைவாயிலில் மனித இதயங்களை அதிரவைக்கும் கல்லறைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. 2003 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இவ் இடத்தில் 1300க்கும் மேற்பட்ட உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன. பதினான்கு வயதிலிருந்து எழுபத்தைந்து வயதிலானோர் வரை படுகொலைப் பட்டார்கள். அவர்களில் அறுநூறு பேரது சடலம் அன்று புதைக்கப்பட்டது.

1995ம் ஆண்டு சுட்டுக்கொல்லப்பட்ட தனது இரு சகோதரர்களையும் தனது மகனையும் தேடிக்கொண்டு அலைந்த பெகுனா முசிக் அன்று அவர்களது எலும்புக் கூடுகளையே இனங்காண்கிறான். சகல மரியாதையுடன் அவர்களை நிலத்தில் புதைக்கிறான். அப்போது அவன் கண்ணீர் சொரிகிறான். வார்த்தைகள் அற்றுப்போன நிலையில் அவன் இருந்தான். அவனது இதயம் உடைந்து நொருங்கிக் கிடந்தது. ஒரு பத்திரிகையாளர் முன்னிலையில் அவன் தன் மனக் குமுறலை வெளிப்படுத்தத் தவறவில்லை. அவ்விடத்தில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. 35 கிலோவிற்கும் அதிகமான வெடி மருந்து அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. அதன் பிற்பாடே பாதுகாப்புகளும் பலமாக்கப்பட்டிருந்தன. இந்நிகழ்வில் சேர்பிய நாட்டுத் தலைவர் பொரிஸ் தர்டிக் அவர்கள் கலந்துகொண்டு அஞ்சலிசெலுத்தினார். நான் ஒரு சேர்பிய நாட்டுத் தலைவனாக இருந்தும் வஞ்சகம் அற்ற அந்த மக்களின் மீது நிகழ்த்தப்பட்ட கொடுமையை வன்மையாகக் கண்டிக்கிறேன். அவர்களுக்காக என் இதய பூர்வமான அஞ்சலியைச் செலுத்துவதற்காகவே அங்கு சென்றிருந்தேன் என்றார்.

ஸ்றெபிறெனிக்கா தாய்மார்களும், இளம் பெண்களும் கண்ணீருடன் அலைகின்றனர். தமக்கு இழைக்கப்பட்ட அநீதியை உலகம் காணாதிருப்பது குறித்து அதிர்ச்சியடைகின்றனர். கணவன்மாரையும், மகன்களையும் கொலை செய்தவர்களை நீதி மன்றத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என காத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பெண்கள் பொஸ்னிய சேர்பிய அதிகாரிகளிடமிருந்து இறந்துபோனவர்கள் பற்றிய தகவல்கள் ஏதும் கிடைத்துள்ளதா என்பதற்காக காத்துக்கொண்டும் இருக்கிறார்கள்.

கூடுதலான பெண்கள் இறந்த தம் உறவினர்களின் உடல்களை அடக்கம்செய்வதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுயை வாழ்க்கையில் ஏற்பட்ட இந்தக் கொடுமையான சம்பவத்தை மாற்றுவதற்காக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சேர்பியர்களோ 1995 இல் நடைபெற்ற படுகொலையை ஏற்க மறுக்கிறார்கள். 1990 ம் ஆண்டுகளில் இந்தப் போராட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்காதுவரை யூகோஸ்லாவியாவில் சமாதானத்தை ஏற்படுத்திவிடுவதற்கான நல்ல சமிக்ஞைகள் கிடைக்குமா. சமாதானத்துக்காக நீண்ட தூரம் மனித குலம் நீண்டத் தடைகளைக் கடக்க வேண்டிருக்கிறது.



https://tamileelamarchive.com/

# மேற்கின் காட்சிக்காக...



அக்ரில் மலையில் இருக்கும் அந்தச் சூரியனை
அந்தக் காற்றை
அந்தப் புயலை
அத்துடன் அந்தப் பனியையும்
அதன் பாட்டுக்கே விட்டு விடு
உன் தலைக்கு மேல் ஆடும் அப் பறவைகளை ஆட விடு

சிலவேளை,
பெண்களும் ஆண்களும்
பிள்ளைகளும் இருக்கும் இடத்துக்கு
நீண்ட நாட்களுக்கு முன் எரியூட்டப்பட்ட அந்தக்
கிராமத்துக்கு
பறந்து கொண்டிருக்கும்
அந்த வல்லூறு உனக்கு வழிகாட்டலாம்

நீண்ட நாட்களுக்கு முன்
இடம்பெயர்ந்த
அக் கோழிகளை பூனைகளை நாய்களைப் பார்

எரியுண்ட பிணவாடையடிக்கும் காற்றை
விளையாட்டுப் பொருட்களை
மாவை, வெண்ணையை அத்துடன் தலைமயிரையும்
தொட்டுப்பார்

தனது குழந்தையின் பிணத்தைத் தூக்கிக்கொண்டு
செல்லும்
அவனிடம் போய் கேள்
பிணங்களைப் பற்றி அவன் என்ன நினைக்கிறான் என்று
அல்லது
வாழ்க்கையைப் பற்றி அவன் என்ன நினைக்கிறான் என்று
அல்லது அவன் எங்கே தான் போவது என்று நினைக்கிறான்

அவன் உடம்பு நடுங்குவதை உணர்
நம்பிக்கை இழந்த அவனது முகத்தைப் பார்
அவனிடம் கேள் எல்லோரும் எங்கேயென்று
மணம் முடிக்கும் வயதுடைய அவனது மகள் எங்கே என்று

அவனிடம் கேள்
அவன் பிறந்த கிராமத்துக்கு
இராணுவ வீரர்கள் நெருப்பு மூட்டும் போது
வீட்டில் படுத்துக்கிடந்த வயசான அவனது அம்மா எங்கே
என்று

அவனிடம் கேள்
நூற்றியிருபது பிணங்களை எப்படி ஒரே நாளில்
ஒரே புதைகுழிக்குள் புதைக்க முடிந்ததென்று

அவனிடம் கேள்
அவன் கடைசியாக எப்பொழுது சாப்பிட்டான் என்று
அல்லது அவனுக்குப் பசிக்கிறதா என்று
இவையொன்றுமே அவனுக்கில்லை

ஆனால் சிறிது நேரத்தில்
அவன் அக் கிராமத்தை நோக்கிப் போகும் வழியில்
கையில் ஒரு துண்டு பாணுடன் கிடக்கும் ஒரு
மூதாட்டியின் பிணம்
மனதில் மகிழ்ச்சி இனித்தான்.

தனது கண்காட்சி யதார்த்தமாகப் போகிறது
அவனது கைகள் படக்கருவியை எடுத்து இயங்கத்
தொடங்குகின்றன
வடக்கு அல்லது தெற்கு கிழக்கு மேற்கு
அவள் பார்வை இருக்கவேண்டும் என்பதற்காக
புரட்டி புரட்டி
அணிந்திருக்கும் ஆடையைக் கூடத்தான்
குர்தானியரின் ஆடை

இக் காட்சி மேற்கின் காட்சிக்கு
மிக உகந்ததென்ற மன நிறைவு அவனுக்கு

அடில் அடாம்

மொழிபெயர்ப்பு: மல்லீஸ்வரி

1. அண்மையில் செய்தித் தாள் ஒன்றில் புகைப்படக் கலைஞராக வேலை செய்யும் ஒருவர் கிழக்குத் துருக்கிக்கு அனுப்பப்பட்டார். அவர் மிகவும் புகழ் பெற்றவர். உலகத்தின் மிகச் சிறந்த புகைப் படக் கலைஞர் என அறியப்பட்டவர். அவரது புகழ் இன்னும் பெருக இது ஒரு நல்ல வாய்ப்பு.

2. படைப்பாளி பற்றி: **அடில் அடாம்** துருக்கிய, குர்திஷ் இனத்தைச் சேர்ந்தவர். அவர் அங்காராவுக்கு அண்மையிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் பிறந்தார். 1982 களிலிருந்து அவர் டென்மார்க்கில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். பல நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது படைப்புக்கள் எல்லாமே அவரது தாய் நாடு இனம் பற்றியதாகவே இருக்கும்.

https://tamileelamarchive.com/



எங்கோ தூரத்தில் சேவல் ஒன்று கூவியது. அரவிந்தன் ஜீன்ஸ் சேட்டுடன் மல்லாந்து... ஒரு கையை நெஞ்சிலும் மறுகையை தலைக்குக் கீழும் வைத்தபடி அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். மெல்லிய மின் விளக்கின் ஒளியில் சிவந்த அவன் முகத்தில் இப்போதும் ஒட்டியிருந்தது குழந்தைத் தனம். குனிந்து அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்து அன்னமுத்து அவனின் தூக்கம் கலைந்து விடாதிருக்க மெதுவாக கதவைச் சாத்திவிட்டு வெளியே வந்தாள்.

நடு அறைக்குள் சின்னவளும் அவள் கணவரும் குழந்தைகளும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். குசினிக்குள் போய்... கிணற்றடிக்குப் போகும் வாசல் கதவின் தாழ்ப்பாளை அகற்றிய போது... சின்னவளின் குழந்தைகளைப் போல் ஓடிவந்து அவளுடன் அப்பிக் கொண்டது குளிர்காற்று...

இரவு முழுவதும் பனி கொடுகவைத்தது.

கட்டிலில் படுத்திருந்த அரவிந்தனை போர்வையால் மூடிவிட்டாள் அவள். "அங்க இதவிட சரியான குளிர்... எங்களுக்குப் பழக்கமாப் போச்சு..."

போர்வையைச் சுருட்டி மறுகரையில் வைத்தான் அவன். அவன் பதினேழு வருடங்களுக்குப் பிறகு .... இப்போது தான் ஊரிற் காலடி எடுத்து வைத்திருக்கிறான்.

# ஒரு புரிதலின் பின்

ஆதிலட்சுமி.சிவகுமார்

https://tamileelamarchive.com/

கனடாவுக்கு அவன் போகும் போது... அரும்பு மீசையும்... ஒல்லியான உடல் அமைப்பும் கொண்டிருந்தான்.

இப்போது சினிமாப்படங்களில் வரும் சில கதாநாயகர்களைப் போல, அடர்த்தியான மீசையும், கட்டான உடலுமாயிருக்கிறான். மகனின் கம்பீரமான தோற்றத்தை நினைக்க அவளுக்குப் பெருமையாகவும் பூரிப்பாகவும் இருந்தது.

அவன் வந்து இறங்கியதும் உறவினர்கள் நலம் விசாரிக்கவென்று வந்து மொய்த்தார்கள்.

விரிந்த அவன் மார்பையும் நிமிர்ந்த அவன் தோற்றத்தையும் உறவினர்கள் கண்ணூறுபடுத்தி விடுவார்கள் என்ற பயம் அவளுக்கு, பிள்ளையார் கோயிலின் அதிகாலைப் பூசை ஆரம்பமணி அடித்தது. அன்னமுத்து அவசரமாய் பல்விளக்கி கால் முகம் கழுவினாள். சுவாமி அறைக்குள் போய் வீபூதியைத் தொட்டுப் பூசிக் கொள்ளும் போது.... சில நாட்களுக்கு, முன்னர் தான் வீட்டுக்கு அடித்த வர்ணப்பூச்சின் மணம் நாசிக்குள் நுழைந்தது.

வீட்டை அவள் கண்கள் ஒருமுறை துளாவின.

இந்த வீடு... கனடாவிலிருந்து அரவிந்தன். அவ்வப் போது அனுப்பிய பணத்திற்கட்டியது. மூத்தவள், கலாவுக்கு இந்த வீடு சீதனம். மூத்தவள் கணவன் குழந்தைகளுடன் நோர்வேயில், கழுத்தில் ஏதோ ஊர்வது போலிருந்தது. கையால் தடவிப் பார்த்தாள் அரவிந்தன் காரால் இறங்கியவுடன் அவள் கழுத்தில் போட்டுவிட்ட நாலரைப் பவுண் சங்கிலி.

சுவரில் தொங்கிக் கொண்டிருந்த கண்ணாடியில் பார்த்தாள் மின்வெளிச்சத்தில் பளபளத்தது அது. "என்ரபிள்ள... எனக்கெண்டு ஆசையாய்க் கொண்டுவந்தது..." சேலையின் சட்டைக்குள் விட்டுக் கொண்டாள் அந்தச் சங்கிலியை குசினிக்குள் போய் கேத்திலைக் கழுவி தண்ணீர் நிரப்பி அடுப்பில் வைத்து மூட்டினாள். பனிக்குளிருக்கு அடுப்புச் சூடு இதமாயிருந்தது. உள்ளே சின்னவளின் கைக்குழந்தை சிணுங்குவது கேட்டது.

"அம்மா....."

"ஓம்பிள்ளை...."

"துஷிக்கு பால் கரைச்சுத் தாங்கோ...."

"இந்தச் சூடு காணும்...."

சூப்பிப் போத்தலைக் கழுவி... பாலைக்கரைத்து அதில் ஊற்றினாள்.

"இந்தா பிள்ளை..."

சின்னவள் இரவு உடுப்போடு எழுந்து வந்து சூப்பியை வாங்கிக் கொண்டு போனாள். குழந்தையின் அழுகை நின்று போனது. அன்னமுத்து குசினிக்குள்ளிலிருந்த கதிரையில் அமர்ந்தாள். அது பழைய கதிரை அதனால் தான் அதுவும் குசினிக்குள்ளிருந்தது.

"புள்ளையப்பாக்க அந்தாளுக்குத்தான் குடுத்து வைக்கேல்லை...." அவள் கண்கள் ஈரலித்தன.

அவளுடைய கணவன் துரைசிங்கம் ஊர்ப்பாடசாலையில் இரவுநேரக் காவலாளியாக நீண்ட காலம் வேலைசெய்தவர். ஆறு வருஷங்களாக சலரோகத்தால் பாதிக்கப்பட்டு... மூன்று மாதங்கள் பெரியாஸ்பத்திரியில் ஒரேகிடையாய்க் கிடந்து இறந்து போனார்.

"குடிக்காம இருந்திருந்தா... மனுசன் இன்னுங் கொஞ்சக்காலம் இருந்திருக்கும்... அதுக்கு விதி இல்லாமல் போச்சு...."

அவள் நெஞ்சுக்குள் துயரம் கொப்பளித்தது. கண்கள் கலங்கின.

"மனுசன் சாகிற நேரம்... வீடு கூட இப்படியில்லை... வெறும் ஓலைக்கொட்டில்... நிலமெல்லாம் புழுதியடிச்சுப் போய். கடைசியாய்... ஒரு சொட்டு... பால்பருக்கக் கூட அருகில ஆளில்லாம...."

அவள் சீலைத்தலைப்பால் கண்களைத் தேய்த்துத் துடைத்தாள்..

"அம்மா... என்னணைசெய்யிறியள்...?

சின்னவள் படுக்கையால் எழும்பி வந்தாள்..

"கொண்ணன் எழும்புறதுக்கிடையில் ஏதும் சாப்பாடு செய்ய வேணும் பிள்ளை.. என்ன செய்யிறது...? ம்... குழல் புட்டு அவிப்பமே.. அங்க வெளிநாட்டில... உதெல்லாம் சாப்பிட்டிருக்கமாட்டினம்....."

"அப்ப நான் மாவைக் குழைக்கிறன்.. நீ கெதியா முகத்தைக் கழுவிப் போட்டு வா..."

முட்டுக்காய்த் தேங்காயை உடையுங்கோ... அது தான் புட்டுக்கு ருசியாய் இருக்கும்..."

அன்னமுத்து உடைத்துவைத்த தேங்காயை சின்னவள் திருவினாள்... கிழக்கிலிருந்து பெரும் ஆரவாரத்துடன் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தான். பனிப்புகையைக் கிழித்து ஒளிக்கதிர்கள் ஊடுருவி வீட்டினுள் நுழைந்து கொண்டிருந்தன.

ஒழுங்கையால் பாடசாலைப் பிள்ளைகள் சிறுசிறு குழுவாகப் போய்க்கொண்டிருந்தார்கள்.

வழமையாக தினமும் எட்டு மணிப் பூசைக்கு பூப்பிடுங்கவரும் வீரசிங்கம் பனிக்குளிரில் நடுங்கி பூப்பறித்துக் கொண்டிருந்தான். அறைக்கதவை மெல்ல நீக்கி அன்னமுத்து எட்டிப்பார்த்தாள். இன்னமும் அப்படியே மல்லாந்து... நெஞ்சில் ஒரு கையையும். தலையின் கீழ் ஒரு கையையும் வைத்து அரவிந்தன் தூங்கிக் கொண்டிருந்தான்... அவனுடைய தலைகட்டிலின் மேற்புற விளிம்பிலும்... கால்கள் அடிப்புற விளிம்பிலும் முட்டிக் கொண்டிருந்தன...

"இவன் தான் சரியாத் தேப்பனமாதிரி... நல்ல உசரம்... தலைமயிரும். நல்ல கருமை..."

அவளுக்கு பதினேழு வருடங்களாக காணாத மகனையிட்டு பெருமை பொங்கிக் கொண்டிருந்தது.

"எட்டுமணியாகுது.... பிள்ள.... இவன் தம்பி இன்னமும் எழும்பாமக்கிடக்கிறான்..."

"எணையம்மா... இப்ப அங்க இரவெண.... அது தான் அவன் இன்னமும் எழும்பேல்ல...."

அன்னமுத்து விறாந்தைக்குள் வந்து வெற்றிலைத் தட்டத்தை எடுத்து ஒருவாய் வெற்றிலை போட்டுக் கொண்டாள்.

அரவிந்தன் கொண்டுவந்த பயணப் பெட்டிகள் சுவரோரமாய் வரிசையாய் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. அவற்றில் பூட்டுக்களும் தொங்கிக் கொண்டிருந்தன.

"சின்னவள்...."

"என்னணை..."

"உவ்வளவு பாரங்களையும்... தம்பி என்னெண்டு பிள்ளை கொண்டு வந்து

https://tamileelamarchive.com/

சேத்தவன்...."

"அவன் தூக்கிச் சுமக்கத்தேவையில்லையணை ... பிளேனில போட்டு விட்டா... எயாப்போட்டில வந்திறங்கும்... பிறகு இஞ்சாலவானில போட்டு கொண்டு வந்தது....."

"அப்பபிள்ள.. ஆமியள் ஒரு தொந்தரவும் தரயில்லையே..."

"வெளிநாட்டு பாஸ்போட்டை காட்ட. விட்டிட்டான்..."

"அம்மா...."

அரவிந்தன். ஓடிவந்து அன்னமுத்துவின் கழுத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கொஞ்சினான். அவளுக்கு மனதுக்குள் கூச்சமாயிருந்தது.

"கால்முகத்தைக் கழுவன் தம்பி.. தேத்தண்ணி ஊத்திக் கொண்டு வாறன்...."

"எனக்குத் தேத்தண்ணி வேண்டாமம்மா... ஜூஸ் இருந்தா ஒருகிளாஸ் தாங்கோ... அது போதும்..."

"விடிய வெள்ளன.... அந்தக் கறுமாதிய ஏனடாமோன.... சுடச்சுடத் தேத்தண்ணி குடி...."

அவன் சிரித்தபடி மீண்டும் அறைக்குள் போனான்.

"பிள்ள சாப்பாடுகள் எல்லாத்தையும் மேசையில எடுத்துவை. தம்பி முகங்கழுவப் போட்டான்..."

மனமளவென்று குசினிக்குள்ளிருந்த உணவுகள் மேசைக்கு வந்தன.. குழல்புட்டு, முட்டைப்பொரியல், வெந்தயக்குழம்பு, உள்ளி மிளகுச் சொதி, கப்பல் வாழைப்பழம்...

தொலைக்காட்சி நாடகத்தொடர்களில் வரும் சாப்பாட்டு மேசைபோல் இந்த மேசையும் அழகாக இருந்தது.

"அரவிந்தன். எழும்பியாச்சோ..." கேட்டபடி சின்னவளின் கணவன்...

"ஓம்.."

இப்போது சின்னவளின் மூத்தவள் நான்குவயது நிரம்பிய சசி... சிணுங்கிக் கொண்டு வந்தான்...

"இஞ்ச வா தம்பி... அம்மா இஞ்ச நிற்கிறன்..."

குசினிக்குள்ளிலிருந்து வந்தது சின்னவளின் குரல்...

"அம்......மா ஆ...." அவனின் அழுகை கூடியது...

"மாமா.... உங்களக் கக்காப்பிள்ள எண்டு சொல்லப் போறார்... அழாதேங்கோ..."

குழந்தைக்கு நேற்றுப் பார்த்த அரவிந்தனின் முகம் நினைவு வந்திருக்க வேண்டும். அரவிந்தனின் அறையைத் திரும்பிப் பார்த்தது.

அரவிந்தன் குழந்தைகளுக்கு நிறைய விளையாட்டுப் பொருட்கள் கொண்டு வந்திருந்தான்.

அவை எல்லாமே பற்றியில் இயங்குபவை. அவை இயங்கத் தொடங்கியதும் குழந்தைகள் வீரிட்டு அழுதன.... அவற்றில் ஒளிர்ந்த வர்ண விளக்குகளைப் பார்த்துக் கண்களைப் பொத்தின.

"அங்க.... இவங்கட வயசுப் பிள்ளையளெல்லாம் கொம்பியூட்டரில கேம்ஸ் விளையாடுதுகள்..." என்றான் அரவிந்தன்.

"இஞ்ச நாங்கள்... உயிரோடை இருக்கிறதே போதுமெண்டு இருந்தம்... இப்ப சமாதானம் வந்தாப் பிறகு தானே.... இப்பிடி இருக்கிறம்...."

பதில் சொன்னவள்.. சின்னவள்..

"பிள்ளை.. குடிக்கிறதுக்கு தண்ணி எடுத்துவைக்க மறந்து போனாய்......" சாப்பாட்டு மேசையை ஒரு தரம் பார்த்துவிட்டு... அன்னமுத்து மகளிடம் சொன்னாள்....

இப்போது சின்னவளின் கணவனும் குளித்துவிட்டு... சுவாமிப் படங்களுக்கு வைக்க கைநிறையப் பூக்களுடன் உள்ளே வந்தான்.

"ப்பா... ப்பா..." குழந்தை அவனுடைய கால்களைக் கட்டிக் கொண்டது. அன்னமுத்து குழந்தையைத் தூக்கிக் கொள்ள அவன் உள்ளே போனான். இப்போது அரவிந்தன் ஈரத் தலையைத் துடைத்துக் கொண்டு விறாந்தைக்கு வந்தான்...

நேரம் ஒன்பது மணியைக் கடந்துவிட்டிருந்தது. ஒழுங்கைக்குள் மீன்வியாபாரியின் ஊதுகுழல் ஒலித்தபடி நகர்ந்தது. அரவிந்தன் மேசையிலிருந்த சாப்பாடுகளை ஒவ்வொன்றாகத் திறந்து பார்த்துக் கொண்டிருந்தான். சேட்போடாத அவன் மார்பில் தங்கச் சங்கிலி ஒன்று பளபளத்தது.

"ஏய்... என்ன இதெல்லாம் வேண்டாம்...." சின்னவளிடம் ஆச்சரியத்தோடு அவன் கேட்டான்.

"காலைச் சாப்பாடு... உங்களுக்குத் தானண்ணா..."

"ஐசீ... எனக்கு இதெல்லாம் வேண்டாம்..."

"அப்ப என்ன வேணும்....?"

"ஒரு கிளாஸ் ஒறேஞ்ச் ஜூஸ் மட்டும் தா... அது போதும்...."

அன்னம்மாவுக்கு மனம் சுருங்கிப் போனது...

"என்னதம்பி... எவ்வளவு காலத்துக்குப் பிறகு ஊருக்கு வந்திருக்கிறாய்... அங்கை நெடுக கடைச்சாப்பாடு தானே திண்டிருப்பாய்... இஞ்ச வடிவாச் சாப்பிடன்..."

வார்த்தைகளால் மகனை வருடினாள்.. அன்னமுத்து...

"அம்மா... நான் அங்க போன நாளையில... இருந்து... இஞ்ச திருப்பி வந்திறங்கின நாள்வரைக்கும்... காலைச்சாப்பாடெண்டா.. எனக்கு ஜூஸ் தான்..."

"ஏன் தம்பி...?"

மகனின் முகத்தை வருத்தத்தோடு பார்த்தாள்...

"எங்களுக்கு அங்கை நேரமே கிடைக்காதம்மா... அதோடை காசும் வீண் தானே... அந்தக் காசை மிச்சம் பிடிச்சா... இஞ்ச அனுப்பி போடலாம்... அங்க நிறையப்பேர் இப்பிடித்தானம்மா... நான் மட்டுமில்ல...."

அன்னம்மாவுக்கு தலை சுற்றிக் கொண்டு வந்தது மகனை இறுகப் பிடித்துக் கொண்டாள். கண்களில் மழை பொழிந்தது.

https://tamileelamarchive.com/

■ தி.தவபாலன்



## கிளிநொச்சி அக்கராயன் காட்டுப்பகுதியில் தொன்மைக்கால குளங்கள் இரண்டு அணைக்கட்டுக்கள் உடைப்பெடுத்த நிலையில் இனங்காணப்பட்டு அவை மக்களால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

இவை சிறிய நீர்ப்பாசனக்குளங்கள் வகையைச் சேர்ந்தவை வன்னியில் பண்டைக்கால மக்களின் குடியிருப்புக்கள் ஆறுகளை மறித்து கட்டப்பட்ட குளங்களுடன் இருந்திருக்கின்றன. அவற்றின் உடைப்பெடுத்த அணைக்கட்டுக்களை இப்போதும் வன்னிக்காடுகளில் காண முடியும். இப்பொழுது உள்ள பாரிய நடுத்தர நீர்ப்பாசனக் குளங்கள் கூட பண்டைய கைவிடப்பட்ட குளங்கள் மீள புனரமைக்கப்பட்டு கொள்ளளவு அதிகரிக்கப்பட்டுள்ளவை ஆகும். அத்துடன் இப்போதுள்ள சிறிய குளங்களும் பெரும்பாலும் பண்டைய குளங்களின் கட்டுமானங்கள் 2000 ஆண்டுகட்கு முன்பே வந்து விட்டன. தமிழ் மக்களின் பெருங்கற்கால பண்பாடு குளங்களுடன் இணைந்ததாகும். இது 2000 முதல் 3000 ஆண்டுகள் வரை தொன்மையானது. ஆரியர் வருகையுடன் தான் கி.மு 5ம் நூற்றாண்டின் பின்தான் இலங்கைக்கு குளக்கட்டுமான நுட்பம் வந்தது என்ற மகாவம்ச இனவாதக் கருத்துக்கு புறம்பாக இலங்கையின் தொல்லியல் திணைக்களம் கி.மு 7ம் நூற்றாண்டுக்கு முன்பதாகவே உலர் வலயப்பகுதிகளில் குளக்கட்டுமான நுட்பம் இருந்ததாக அறிக்கை வெளியிட்டது.

இந்த வகையில் புனரமைக்கப்படாத பயன்பாட்டில் இல்லாத நூற்றுக்கணக்கான பண்டைய குளங்கள் காடுகளில் கிடக்கின்றன. இந்தக் குளங்கள் சிறியனவாகையால் இவற்றின் புனரமைப்பு மூலம் காடுகள் அழியும் என்ற சூழல் மாசுறுதல் பிரச்சினை இல்லை. நடுத்தர நீர்ப்பாசனக் குளங்களின் கட்டுமானத்தில் பெருமளவு காடுகள் அழிக்கப்படும் நிலமை இருப்பதால் பாரிய நடுத்தர நீர்ப்பாசனக் குளங்கள் அமைக்கப்படுவதற்கு இப்போது உலகளவில் ஆதரவில்லை. பாரிய நடுத்தர நீர்ப்பாசனக் குளங்கள் அமைப்பு பாதிக்கும். அத்துடன் பூமி அதிர்வுக்கு காரணமாக இருக்கும் என்பதாலேயே இதற்கு ஆதரவில்லை. வன்னிக்கு அடிக்கடி வந்து சென்ற ஜப்பானிய தூதுவர்கள் சிறு குளங்களை புனரமைக்கவே தாம் விரும்புவதாகக் கூறினர். பாரிய நீர்ப்பாசனக் குளங்கள் அமைப்பு புனரமைப்பு காலம் நீண்டதாகும், செலவு அதிகமானதாகும், சூழல் பாதிப்பு ஏற்படும் எனக் காரணங்களைக் அவர்கள் தெரிவித்தனர். இந்த வகையில் புதிதாக நீர்ப்பாசனக் குளங்களை அமைப்பது இனிச்சாத்தியமில்லை. ஆயினும், சிறிய நீர்ப்பாசனக் குளங்களை புனரமைப்பது நீர்ப்பற்றாக் குறையைத் தீர்க்க உதவும். நீர்ப்பற்றாக்குறை சம காலத்தில் குடிநீர் முதல் வேளாண்மை வரை பெரும் நெருக்கடிகளை கொடுத்து வருகின்றது. இது கைவிடப்பட்டுக் கிடக்கும் பண்டைக்குளங்கள் புனரமைக்கப்படும் அவசியத்தை வலியுறுத்துகின்றது. இதற்கு முன்னோடியான ஒன்று தான் அக்கராயனில் கண்டு பிடிக்கப்பட்டு மக்களால் சுயமாக இரு குளங்கள் துப்புரவு செய்யப்படுவதாகும். இரு குள அணைகளும் தொல் பொருள் தேடலின் போது கண்டுபிடிக்கப்பட்டதாகும். இரு குள அணைகளும் ஒவ்வொரு இடத்தில் உடைப்பெடுத்து இருக்கின்றன. அக்கராயன் குள வலதுகரை வாய்க்கலில் இணைத்துள்ள யூனியன்குளம், சண்முகநாதன்குளம், கோணாவில் குளம் என்பன உள்ளன. அணைகளுக்குரிய குளங்களும் அதிகளவு நீரைக் கொள்ளத்தக்கவை இவற்றின் மூலம் அக்கராயன் குளத்தின் கீழான பயிர்ச் செய்கைப் பரப்பை அதிகரிக்க முடியும். வழமை போல வரும் வறட்சியை தணிக்க முடியும். அக்கராயன் முறிகண்டி வீதியோர குடியிருப்புக்களின் கிணறுகளில் நீர்மட்டத்தினை அதிகரிக்க முடியும். இந்த இரு குள அணைகளையும் மீளமைக்க முன்னோடியாக அக்கராயன் வலது கரை மக்களே தாமே முன்வந்து துப்புரவு செய்து வருகின்றனர். தமக்குரிய கட்டுமானங்களை மக்கள் தாமே செய்கின்ற போது ஒரு உரிமை, கொள்கைப்பற்று அதிகமாக இருக்கும். யாரோ செய்வார்கள் என எதிர்பார்த்திருக்காது தமக்கானதை மக்கள் தாமே செய்து கொள்ள வேண்டும். இது பற்றையும் சமூக ஒற்றுமையையும் அதிகமாக்கும். இத்தகைய பொதுப்பணிகள் சமூகத்தில் அருகி விட்டன. அது மீள வேண்டும். அதன் ஒரு பகுதியாகத்தான் அக்கராயன் மக்களின் பணியும் கூட.

https://tamileelamarchive.com/



# தோணிதாட்டமடு படுகொலை

மட்டுநகர் மண்ணில் கடல்வளமும், வயல்வளமும் சிறந்தது விளங்கும் கிராமங்கள் பல. உழைத்து சேமித்து இலட்சாதிபதியாய், கோடீஸ்வரராய் வாழநினைப்பவர்கள் மிக இலகுவில் அந்த நிலையை அடைந்துவிடமுடியும். இலட்சத்துக்கு அதிபதிகளாகி தமிழ்மக்களின் பாரம்பரிய பண்பாடுகளை மறந்து மனிதநேயத்தை இழந்து, மொத்தத்தில் தமது சுயத்தையே மறந்து வாழும் மனிதர்களாக வாழவிரும்பாத, இனமகத்துவத்தை காக்கின்ற மக்களே இத்தகைய வளமிக்க கிராமங்களில் வாழ்வதை அவதானிக்க முடிந்தது. ஆண்டாங்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருக்கின்ற வாகரை, கதிரவெளி, பனிச்சங்கேணி, வெருகல், தோணிதாட்டமடு என்னும் கிராமங்களும் இத்தகை வளங்களை நிறையக் கொண்டிருந்தன. நிலமிருந்தும், வளமிருந்தும் நாளாந்தம் தமது வாழ்வுக்கு போதுமானதை மட்டும் உழைத்து மற்றவற்கும் கொடுத்து, தாமும் உண்டு. வஞ்சகம், சூது, பொறாமை, தந்திரம், ஏமாற்று என்ற கெட்ட எண்ணங்கள் கொண்ட துட்ட மனிதர்களை இங்கு காண்பது அரிது.

கடலைத்தொட்டு நின்று, அகன்று நீண்டுவிரியும் பனிச்சங்கேணிஆறு வாகரையிலிருந்து தோணிதாட்டமடு கிராமத்தை பிரித்து நிற்கின்றது. சேனைப்பயிர்ச்செய்கைக்காகவும், வயற்செய்கைக்காகவும் தோணி தாட்டமடுவிற்கு வாகரையிலிருந்து மக்கள் சென்றுவருவார்கள். பருவகால பயிர்செய்கைக்கான இடம் பெயர்வுக்கிராமமாக பனிச்சங்கேணி ஆற்றில் இறாலும், நண்டும், மீனும் கொழுத்துக் கிடக்கும்வளம் நிறைந்த இக்கிராமத்துக்கு இன்று மக்கள் சென்றுவர அச்சம்கொள்கின்றனர். புதிதாக பார்ப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் வினோதமாகத்தானிருக்கும். ஆனால் சிங்களப்படைகள் அக்கிராமத்தை அழித்து அசிங்கப்படுத்தியதும் வயற்குடிலிலும், சேனைப்பரணிலும் இந்த ஏதுமறியாத மக்களை சுட்டுக் கருக்கிய நாள் மனதிலிருந்து இலகுவில் அகன்றுவிடக்கூடியதல்ல. நாமுண்டு நம் வாழ்வுண்டு என வாழ விரும்பியவர்களுக்கு நடந்து முடிந்த துயரம் யாருக்கு புரியும், யார் புரிந்தார்கள்?, உலகத்தின் கண்களுக்கு யார் கொண்டுவந்தார்கள்?.

1987ம் ஆண்டு, வைகாசித் திங்கள், 27ம் நாள் தோணிதாட்டமடுக் கிராமத்தின் இருண்ட நாள். இந்தநாள்தான். இரவோடிரவாய் சிங்கள இராணுவ கொலைவெறிக்குள் சிக்கி உயிரோடு தீயில் மக்கள் சுருண்டு பொசிங்கிப்போன கதையை யாரிடம் கேட்பது. தெய்வாதீனமாகத் தப்பிய ஓரிரண்டு முதுமைகள் வாகரைக் கிராமத்தில் தங்களது கடைசி மூச்சுக்காய் இன்று போராடிக் கொண்டிருந்தனர். அவர்களும் போய்விட்டால் யாரிடம் கேட்பதென்ற ஆதங்கத்தோடு அவர்களை அணுகினேன்.

ஓலைக்குடிசை ஒருவருக்குமேல் இருந்து படுத்து எழுந்து நடமாடமுடியாத சிறிய குடிசை. "வாருங்கோ மகன்" என்ற வரவேற்புக்குரல். பிய்ந்து போன இரண்டு பாய்த் துண்டையும் ஒன்றாக்கி எங்களை இருத்த முனைந்து கொண்டிருந்தாள் அந்த அம்மா. கணவனை இப்படுகொலையில் பறிகொடுத்து தனிமரமாய் நின்று வாழ்க்கைப் போராட்டம் நடத்தும் இந்தத் தாயின் உள்ளக் குமுறலைப் பகிர்ந்துகொண்டேன்.

"விடிய 5.00 மணிக்கு ஆத்துப்பக்கமாக வெடிக்கேக்குது எங்க நாசம் பண்ணுறாங்களோ தெரியல்ல. கடவுள்தான் காப்பத்தனும்" என கடவுளத்தான் வேண்டினம்.

வாகரை, கதிரவெளி, வம்மிவெட்டுவான், மாவடி ஓடை இராணுவ முகாமில இருந்தெல்லாம் றக்கிலவந்த ஆமி வடிச்சல் பிள்ளையார் கோவிலடியிலிருந்து இறங்கி நடந்து போயிருக்கிறான். வயல் குடிலுக்குள்ளேயும், சேனைப்புலவுக்கேயும் காவலுக்கு கிடந்த பழம் பிடுங்கப் போனவங்களும் மாட்டீட்டாங்கள். படபடவெண்டு வெடிச்சத்தங்கள் கேட்குது. விடிஞ்சு பொழுது நல்லா மேலவந்திட்டுது. தோணி தாட்டமடுவில ஆமி ஆக்கள வெட்டியும் சுட்டும் எரிச்சுக் கருக்கீட்டுபோயித் தானாம் என கேள்விபட்டு ஓடிப்போனன். அங்க போனா என்னத்த பாக்கிறது. கொஞ்சப்பேரை வெட்டிப் போட்டு அரைகுறையாய் கருக்கியிருந்தான். சிலரை சுட்டுப்போட்டு கருக்கியிருந்தான். எரிஞ்சு கரிக்கட்டையாய் கிடந்த அவரை எடுத்திட்டுவந்து இஞ்சதான் தாட்டம். ஈவிரக்கம் இல்லாத அவங்கள கொல்லனும் மகன். குணமெண்டு ஓராள சுட்டஉடன பொஞ்சா திரெண்டு சின்னப்பிள்ளயளை உயிரோட நெருப்பில தூக்கிப்போட்டிருக்கிறான். இவங்களயெல்லாம விட்டுவைக்கக்கூடாது மகன்" என ஆத்திரமும் அழுகையும் பொங்க கூறினாள். வேலுப்பிள்ளை மாரிமுத்து என்ற மூதாட்டி தாய், சகோதரிகள், சகோதரிகளின் பிள்ளைகள் என பலரைப் பறிகொடுத்த தர்மலிங்கம் பூமணி என்பவரின் துயரக் கதையை கேட்பதற்காக சென்றேன். வாகரைக்கும் பால்ச்சேனைக்குமிடையே பிரதான வீதி யோரத்தினருகே இருந்த சிறிய குடிசை. குடிசைக்குள் புகுந்து இருக்கக் கூடியளவுக்கு இடவசதியில்லை. வெளியே முற்றத்து மண்ணில் அமர்ந்தேன்.



"விடியச் சாமத்தில படுபாவியள் வந்திட்டாங்கள். ஊரைச்சுத்தி வளைச்சு சுடத்துவங்கீட்டான். நான் நம்மிட பிள்ளையள இழுத்திட்டு கடவுள நேந்துகொண்டு ஓடினன். தவமணியின் குழந்தையளும், கமலாவும் கமலான்ர பிள்ளையளும் மாட்டீட்டாங்கள். கமலாவ சுட்டிட்டு பிள்ளைகளையெல்லாம் உயிரோட தூக்கி எரியிற நெருப்பில வீசிட்டான். சுத்திச் சுத்தியெல்லாரும் சுட்டு வயல்குடிலுக்கதான் இருந்தானங்கள். அண்ணன் இரத்தின

https://tamileelamarchive.com/

மணலாறு விஜயன்

சீலன் அவங்கட பொஞ்சாதி பூப்பா. அவங்கடா பெண்குழந்தை எல்லாரையும் சுட்டிட்டான். பால் குடிமாறாத குழந்தை இரக்கமேயில்லா மல் சுட்டு எரிச்சிட்டான். சுடச்சுட ஓடினதால நானும் பிள்ளைளும் தப்பிக் கொண்டம். என்னப்போல ஓடித்தப்பினது நாலு பேர் மட்டும்தான். மற்ற எல்லாரையும் சுட்டிட்டான். என சொல்லிக்கொண்டிருந்த பூமணியின் உடல் நடுங்கியது. பதின்நான்கு ஆண்டுகள் போனாலும் அந்தக் கொலையின் கொடூரத் திலிருந்து அவர் விடுபடவில்லையென்பதை உணர்ந்து கொண்டேன். கேட்பதற்கு யாரு மாற்றவர்களாய் அபயக்குரலெழுப்பி அழுத படி எரிந்துபோன எங்கள் உறவுகளின் உணர் வுகளை உலகம் புரியவில்லை. எங்கிருந்தோ வந்த சிங்களவன் தெருநாய்கள்போல எங்கள் மக்களை ஓடஓடச் சுட்டெரித்த நாள் கொடியது.

சிங்கள இராணுவக் கொலைவெறிப்பசி நின்று விடவில்லை. தட்டிக்கேட்க ஆளில்லையென் றால் தம்பி கண்டப்பிரசண்டம் என்பதுபோல மட்டுநகர் மண்ணில் படுகொலைகள் தொடந்து நடந்தன.

படுகொலையில் அகப்பட்டுக் கொண்ட வர்கள்

இ.சொக்கலிங்கம்
க.வேலுப்பிள்ளை
செ. கணேஸ்வரன்
வீ. தங்கத்துரை
சி.பவானந்தம்
சி.இரத்தினசீலன்
இ. கமலா
சி. கண்ணாச்சி சி.நடராஜா
இ.பூப்பா முருகுப்பிள்ளை.



# சித்தாண்டிப் படுகொலை





சந்தணமடு ஆறு பாய்ந்து வளம்பெருக் கும் எழில்மிகு கிராமம் சித்தாண்டி. பசுமை யான வயல்வெளிகள் இரு போகமும் நெல் விளையும் இவ்வயல்வெளிகள் அறுவடை முடிந்த மாதங்களில் பசுமாடுகளினால் நிரம்பி வழியும். பாலும், மோரும், தயிரும், நெய்யும் தொழிலாக விளங்குகின்றது. பாடசாலைக் கல்வியை பாதியில் நிறுத்தி தொழிலில் இறங் கிவிடுவதால் கல்வியறிவை வளர்த்துக் கொள் ளும் ஆர்வத்தை மக்களிடம் காணமுடியாது. ஆனால் வீரத்திலும் விருந்தோம்பலிலும் சித் தாண்டி மக்களுக்கு நிகராக யாருமில்லை யெனக் கூறலாம். உழைத்து உழைத்து முறுக் கேறிய உடலும், உடலுறுதிக்கேற்ப வீரஉணர் வும் இக்கிராம மக்களின் இயல்பான பண்பு. சித்தாண்டி முருகனாலயத்தில் கொடியேறி விட்டால் ஒன்றுபட்டு நிற்கும் கிராமத்து மக் களின் மகிழ்ச்சிப்பெருக்கு அளவிடமுடியா தது.

மனிதப் பண்பில் உயர்ந்து நின்ற இக் கிராமத்து மக்களின் வாழ்வில் கறைபடிந்த துயரநாள் ஒன்றுண்டு. சித்தாண்டி முருகனின் முன்றலிலே சிங்கள இராணுவத்தினர் தங்கள் கைவரிசையைக் காட்டிய அந்தநாள் 1990ம் ஆண்டு, ஆடித்திங்கள், 27ம் நாளாகும். ஆல யத்துள் அடைக்கலம்தேடி ஓடிவந்தமக்களை நிரையாக நிறுத்தி 137 இளம் ஆண்களை கைதுசெய்து கொண்டுசென்று கொன்றொழித் தார்கள். இன்று வரை இவர்களின் புதைகுழி எங்கு உள்ளதென யாருக்கும் தெரியாது. இக்கைது நடவடிக்கையின்போது தப்பிக் கொண்ட நல்லையா கமலநாதன் என்பவ ரோடு கலந்துரையாடியபோது அந்தநாளை நினைவில் கொண்டுவந்தார்.

"எல்லாரும் ஒரு இடமாயிருந்தால் ஆமி சுடமாட்டானெண்டு நினைச்சு கிராமத்தாக்கள் எல்லோரும் கோயிலுக்க வந்து தஞ்சம் புகுந் தோம். ஒரு வாரத்துக்குள்ள இரண்டு தடவை இப்படி கோயிலுக்குள்ள ஓடிப்போயிருந்தம். ஆடிமாதம் 20ம் திகதி ஒருதடவை, ஆடிமாதம் 27ம் திகதி மறுகா ஓடிப்போயிருந்தம். சித்தா ண்டி மக்களோட மாவடிவேம்புக் கிராமமக் களும் கோயிலுக்கு வந்திருந்தா ஆமி கோயி லையும் சுத்திவளைச்சிட்டான். சிங்கள ஆமி யோட தேசத் துரோகக்கும்பலும் சேந்துவந் திருந்தது. கோயிலுக்க இருந்த எல்லோரையும் நிரையில வரச்சொல்லிப்போட்டு இளம் ஆண்களை தெரிஞ்சு எடுத்தாங்கள். எல் லோரும் நடுங்கி நடுங்கி நிண்டம். ஒவ்வொ ருத்தரையும் தெரிஞ்செடுக்க அவங்க அவங் கட உறவுக்காரர், தாய் தகப்பனெல்லா ரும் கத்திக் குளறினாங்கள். கையெடுத்துக் கும்பிட்டாங்கள். தங்கட தங்கட கஸ்ரங்களை சொல்லிக் கெஞ்சிக் கேட்டாங்கள். ஒண்டை யும் அவங்கள் காதில வாங்கல்ல. 20ம் திகதி 80பேரை இப்படி தெரிஞ்செடுத்து ஏத்தீட்டு போனாங்கள். 27ம் திகதி வந்து 57பேரை பிடிச்சு ஏத்தீட்டுப்போனாங்கள்.

பிடிச்சுக் கொண்டுபோய் இரண்டொரு நாட்களில் தாய் தகப்பன்மார் எல்லா ஆமிக் காம்புக்கும் போய் வந்தாங்கள். ஒருதருமே தாங்கள் பிடிச்சிட்டு வரல்லயென சொல்லிட் டாங்கள். ஒருகிழமைக்குப் பின்னர் தான் கொண்டுபோன எல்லாரையுமே சுட்டிட்டாங் களென கேள்விபட்டம். விசாரிச்சிட்டு விடு வாங்களெண்டுதான் எல்லாருமே நம்பி னாங்கள்.

இரண்டு தரமும் பிடிச்ச மொத்தம் 137 பேரையும் கையைப் பின்புறமாகக் கட்டிப் போட்டு, பஸ்சில ஏத்தீட்டுப் போய் சிங்களக் கிராமத்தில இறக்கி, நிரையாய் விட்டிட்டு, புலியைப் பிடித்துக்கொண்டு வந்துள்ள தாய் சிங்களவர்களுக்குக் கூறிவிட்டு சுட்டுத் தள்ளினார்களாம். கைகளைக்கட்டி நிரை யாக நிறுத்தி கேட்பாரின்றி எங்கட பிள்ளை யள சுட்டவங்கள் சவத்தைக்கூட தரல்ல. இண்டைக்குவரையும் தங்கட பிள்ளைய ளுக்கு நடந்த கதியறியாது அழுது கொண்டி ருக்கும் தாய்மாரின் துயரம் யாருக்குமே தெரியாது. தாங்கள் பிடிக்கவில்லை, சுடவு மில்லையென்று கூசாமல் சொல்லும் சிங் கள ஆமிக்கு அழிவுவராமல் விடாது" என ஆவேசத்தோடு சொல்லி முடித்தார் கமல நாதன்.

https://tamileelamarchive.com/

# மீள்வு

மா.கி.கிறிஸ்ரியன் (பிரான்ஸ்)



எதற்கெடுத்தாலும் சத்தம்போட்டு அச்சுறுத்தும் தாய் யசோதாவின் கோலத்தை ! ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு மகள் யஸ்மினா தன் இரு கண்களையும் இறுக மூடிக்கொண்டாள். மெதுவாகத் தவழ்ந்த குரல் வேகமாகத் தொனித்தது. அம்மா நான் படிப்பதா? இல்லை முடிப்பதா?

யசோதாவின் சர்வாங்கம் அனைத்தும் நடுங்கியது! இரட்டை அர்த்தம் பொதிந்த கேள்வியை விறைப்பாகவும் அழுத்தம் திருத்தமாகவும் கேட்டுவிட்டாள்... மூச்சு விடவில்லை ! மறுகணம் யஸ்மினாவா இப்படிக் கேட்டாள்? பசுப்போல் சாது, புலிபோல் பாய்ந்தாள். கணப்பொழுதில் கேள்விகள் அம்பாய் இதயத்தில் தைத்தன. கணினி யுகமோ குதிரை வேகத்தை மிஞ்சி விட்டது.

மகளின் இந்தக் கேள்வியில் புளுகியடிக்க அவள் கணவன் குணாளன் இல்லை எனும் ஆதங்கம் தென்பட்டாலும் அவரால்தான் புள்ளைகளுக்கு இந்தத் துணிவு வந்தது என நினைத்தாள்.

"எடிமகளே ! இப்படிக் கதைக்க, எங்கயடி, யாரட்ட இருந்தடி, உந்தத் துணிவு வந்தது?."

அம்மா ! நீங்க ஒரே போடலாக எத்தனை கேள்விகள் கேட்டீங்க இப்படிக் கதைக்க, எங்கயடி, யாருட்ட இருந்தடி, உந்தத் துணிவு வந்தது என்று கேட்டிங்களா எத்தனை கேள்விகள் விழுந்ததென்று பார்த்தீங்களா? யசோதாவின் முகத்தில் விழுந்த அடியில் மௌனமாக நிதானித்து நின்றாள்.

அம்மா நான் படிப்பதா? இல்லை முடிப்பதா? என்றுதானம்மா கேட்டேன். இந்தக் கேள்விக்கு உங்களின்ர சம்மதம்

https://tamileelamarchive.com/

தானம்மா என்ர மனம் அடையும் சந்தோசம்.

இப்போது அழைப்பு மணியுடன் கதவு தட்டும் சத்தமும் கேட்டது! இளையவள் நீதா துள்ளிக் குதித்தோடியவள் கதவண்டை போனதும் இந்தமாதிரித் தட்டுவது யாராக இருக்கும்? சின்னத் தலையாட்டலுடன் கதவைத் திறந்தாள்... "அக்கா உன்னைத் தேடி கிறிஸ்ரினா வந்திருக்கா" என்றவள் குரல் அடங்கும் முன்னம் தாயைக் கடந்து சென்றவள் கிறிஸ்ரினா முகமுட்டப் போனதும் கன்னங்களைத் தேய்த்துக் கொண்டனர்.

கோலுக்குள் கூட்டிச் சென்று செற்றியில் அமரும்படி சொன்னாள், தொலைக்காட்சியைப்பார்க்கச் சொன்னாள், குசினிக்குள்ளிட்டு தண்ணீர்பானம் கொண்டு வந்த கொடுத்தாள், பிறகு தானும் அவளோடு நெருக்கமாக அமர்ந்தாள் .

இப்போது இருவரின் உரையாடல் உச்சஸ்தாயில் தொனித்தன... தாயாள் யசோதாவிற்கு அவ்வளவு வயதும் இல்லை நாற்பத்திரண்டு நெருங்கியிருக்கும். முகத்தில் புன்முறுவல் பூத்திருக்கும். கடவுள் பக்தி உள்ளவள். செந்தெழிப்பான உள்ளம் மகிழ்வில் கொழு கொழுப்பாக இருப்பாள், இரக்க சுபாவம் மிக்கவள். இதனால் இப்பகொஞ்ச நாளாய் திடுக்கிடும் பயமும் தொற்றியவளாகிவிட்டாள். பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் தேவைகளை உடனுக்குடன் ஓடி ஓடி சுறுக்காகச் செய்து கொடுப்பவள், பிள்ளைகள் அழுதாலும் யோசித்தாலும் கலங்கிப் போயிடுவாள், பார்த்துக் கொண்டு நிற்கமாட்டாள். யஸ்மினா சாமர்த்தியப் பட்டபின்பு கொஞ்ச நாளாக அவளது மாணவர், மாணவிகளின் தோழமை பயத்தையும் பதகளிப்பையும் சந்தேகத்தையும் சங்கடத்தையும் அவளுக்குக் கொடுத்தன!

யஸ்மினா ஏன் உந்தப் பிள்ளை வந்திருக்கு? கேள்விக்குப் பதில் இல்லை... செற்றியிலிருந்த இருவரிடையே மௌனம் கனமாகப் புதைந்தன எடிமகளே! நான் கேக்கிறன். வாய் திறந்து பதில் சொல்லாமல் இருக்கிறாய்? அம்மா என்னதைக் கேக்கிறிங்க? உந்தப் பிள்ளை போகட்டும் அதுக்கப்புறமாப் பதில் சொல்லுறன். யசோதாவின் வாய் மூடுப்பட்டு மனச் சாட்சியின் சாட்சிக்கு வேளை கொடுத்தாள்... இக்காலம் பிரான்சில் எப்படியிருக்கும் என்பதற்கும் எதிர்காலம் எப்படிப் போகும் என்பதற்கும் பரிசின் புறநகரான சார்சல் நகரில் வாழும் .... மகள் ஓர் எச்சரிக்கை!

தவறிப்போன மகளையும் மகள் பெற்ற பிள்ளையையும்! தினம் தினம் பார்த்துப் படும் தாய் தகப்பனின் கோரணிய வார்த்தைகளைக் கண்டு யசோதாவும் ஆடிப்போனாள். தன் வீட்டில் கணவன் ஒரு கட்சி, அவள் ஒரு கட்சி, யஸ்மினா அப்பா கட்சி, சின்னவளுகள் ஆளும்கட்சி, எல்லாத்திற்கும் எதிர்க்கட்சி வாழ்க்கை! எதிர்நீச்சல் அடிப்பதுதான் இன்றைய வாழ்வியல் நெருடல். அம்மா நான் எந்த விடயத்திலும். பிடிவாதம் பிடிக்கவில்லை எப்பவாவது உங்கட சொல்லை மீறியும் நடக்கவில்லை நீங்க ஏனம்மா நெடுகவும் சந்தேகக் கண்கொண்டு சுழன்று சுழன்று பார்க்கிறீங்க? கண்டதுக்கெல்லாம் கத்துறீங்கம்மா இல்லை மகளே! நீ படிக்கிற புள்ளை. உன்ர வாழ்க்கை குறிக்கோள் உள்ளதாக இருக்க வேண்டும் என்பதை எண்ணித்தான் அம்மா இப்படி நடக்கிறேன். உன்ர வாழ்வு நல்லபடியாக அமையவேண்டும் இல்லையே நானும் அப்பாவும் செத்துப் போயிடுவோம்! பாடசாலையிலும் தினமும் சந்திக்கிறாய் பிறகுமேன் இந்தவீட்டிலும், அந்தப் புள்ளை வீட்டிலும், கண்டகண்ட இடத்திலும் சந்திப்பை உருவாக்குகிறாய்? கேள்விகளோடு யசோதா சற்றுக் கள்ளமாகச் சிரித்துக் கொண்டு அறைக்குள்ளிட்டாள்

தாயின் கேள்விகளைக் கேட்டுக் கொண்டு யஸ்மினா சிரித்துக் கொண்டுதான் மௌனித்திருந்தாள். இந்தவேளை அருகிலிருந்த பிரஞ்சுப் பெண் கிறிஸ்ரினா கனக்க யோசித்தவளாய்க் கேட்டாள்? யஸ்மினா உங்க அம்மா அப்பா படிச்சவங்களா? கிறிஸ்ரினாவின் இந்தக் கேள்வி யஸ்மினாவுக்குப் பிடிக்கவில்லை! சற்றுக் கோபமும் எரிச்சலோடும் பெருமையாகச் சொன்னாள் .

ஓம்! கிறிஸ்ரினா நாங்க படிச்ச உயர்தர கல்விக்கு மேலாகப் படிச்சவங்க அப்பாவவிட அம்மா ஊராக்களுக்குக் கொஞ்சம் பயந்தவங்க! என்னால தங்கைச்சிகளால கெட்டபெயர் வந்திடுமென்று... இப்பதான் அம்மா இப்படி முன்னம் நல்லா அலங்காரம் செய்து கலகலப்பாக இருந்தவங்க. நான் சாமத்தியப் பட்டபிறகு எவ்வளவு தோழமையோடு பழகி அன்புசெலுத்திய அம்மாவிற்கு ஊராக்கள்ர ஒரு சில புள்ளைகள் இங்க கெட்டழிஞ்சு வாழ்வைப் பாழாக்கியது கண்டு மருட்சி கொண்ட மனக் கவலை கவ்வியதால் தான் இப்ப இப்படி மாறிப்போனாங்க. அப்பா எதையும் கண்டிப்பாக்கித் தண்டிக்க மாட்டார். அவருக்கு என்மேல் அளவு கடந்த பிரியமும் நம்பிக்கையும் உண்டு, அம்மாவின் புலன்கள் சற்றுக் கூர்மையானதும் உணர்ச்சிமிக்கவை என்றும் நான் நினைக்கின்றேன். அதனால் மேலும் மேலும் இறுக்கமான அலாதியான பாசத்தில்தான் நான் மிதக்கிறேன். அது சரி யஸ்மினா சதா இப்படிக் கத்தினாலும் தீராதக் கோபத்தைக் காட்டினாலும் எதுதான் தீர்க்கப்பட்டு விடும் ? இதை அவங்களும் தீர்க்கமாக யோசிக்கவேண்டும். எங்கட அம்மா நல்லா படிச்சவங்க அப்பா அவ் வளவாகப் படிக்கவில்லை அவர் சதா குடிக்கிறவர். அம்மாவுடன் நெடுகவும் சண்டைப் பிடிப்பார். இந்தப் பயத்தில்தான் அப்பா வந்தாரெண்டால் இங்க நான் ஓடி வாறனான் உன்ர அன்பின் தோழமையோடு கலகலப்பாக இருக்கலாம் என்று தான்

இவற்றையெல்லாம் ஒழிச்சு நின்று கேட்டுத் தெரிந்து தூதின் மொழியான பிரெஞ்சில் கேட்டு மனம் உருகி இரக்கத்தின் மொழியான தமிழில் மௌனத்தில் புலம்பினாள். பிள்ளைகளைத் தவறாக எடைப்போட்ட குற்ற உணர்வு அம்பாய்க் குத்தி கொஞ்சம் கொஞ்சமாக மனமாற்றம் அடைந்து முந்தின நிலமைக்குக் குதூகலம் நிறைந்த மனதோடு திரும்புவது போல் தோன்றக் கண்டவள், மேலும் அவர்கள் உரையாடுவதை குற்றவாளியாக மறைந்து நின்று கேட்டாள்.

கிறிஸ்ரின் படிப்பு என்பது பலத்தில் பக்கபலம் அறிவு பெறுவது அஞ்சாமல் வாழ்வதற்கு? வாழ்வின் ஆணிவேராகத் திகழ்வதே அறிவு; என்று நம்மை படிப்பிற்கிற எலிசாபெத் ரீச்சார் அடிக்கடி சொல்வது நினைவிருக்கா? இதனடிப்படையில்தான் அம்மாவிடம் கேட்டேன் படிக்கவா ? இல்லை முடிக்கவா? என்று.

படிக்கவா என்பது சரி அதென்ன முடிக்கவா? எனும் பல அர்த்தம் பொதிந்த கேள்வி? இப்போது அழைப்பு மணியும் கூப்பிடு குரல்களும். பெலத்துக் கேட்டன சதா வந்து கொண்டும், போய்க் கொண்டும்தான் இருப்பாங்க உவங்களுக்கு என்ன புடிச்சிட்டு? உவங்களுக்கு அப்படியென்ன தோழ்மை வேண்டிக்கிடக்குது? இப்போது இரண்டு ஆண்களும் பெண்களுமாக சேர்ந்து வந்தனர். வீடு சகல இனப் பிள்ளைகளாலும் நிறைந்து வழியும் நிலவரம். கலவரம் அடைந்த யசோதா பழையபடி முருங்க மரம் ஏறிவிட்டாள்! சற்றும் ஓய்வுக்கு இடமில்லை! பேசாமல் இருந்து படிப்பவள். உந்தப் புள்ளைகள் வர ஆரம்பித்ததால் மிசின் மாதிரி இயங்குவாள். குசினிக்குள் ஓடுவாள். கொம்பியுற்றரில் இயங்குவாள்.

https://tamileelamarchive.com/



தொலைக்காட்சியையும் பார்ப்பாள். உற்சாகம் பிறந்து உச்சஸ்தாதியில் உரையாடுவாள். யசோதா ஆச்சரியத்தில் அங்காலாய்த்து நிற்கிறாள். சின்னவளும் தங்கள் அறைகளை விட்டுவந்து அவர்களுடன் சேர்ந்து குதூகலித்தனர். இப்படியான நேரங்களில் குணாளன் வந்தாரென்றால் குழந்தைகளோடு தானும் குழந்தையாக மாறிவிடுவார். இந்த நேரங்களில் விலத்தி நின்று யசோதா புன்னகைத்தாலும் பிள்ளைகள் லட்சியம் செய்வார்கள் எனும் கவலையும் யசோதாவைத் தொட்டு நிற்கும், கண்காணிப்புக்கு ஒருவர் இருந்தாக வேணும்! மேலும் யஸ்மினா மேல் உள்ள ஆர்வத்தில் கூர்ந்து கவனித்தாள். நொடிக்கொரு தடவை அவளது ஈடுபாட்டையும் சுழன்று சுழன்று நோக்கினாள் பெரிய வீட்டின் விசாலமான கோல்தான் எந்தப் பொருளும் இல்லை என்று சொல்லவும் கேள்வி கேட்கவும் முடியாது. அந்த மட்டில் வேண்டிய எல்லாம் மூவரின் அறைக்குள்ளும் கோலுக்குள்ளும் பிரமித்துப் போகும் அளவுக்கும் ஆசைப்படும் விதமாகவும் வீற்றிருக்கின்றன. தற்கால எந்தப்பொருள் புதிதாக வந்ததும் வாங்கிக் கொடுத்து விடுவார்கள், வாறபிள்ளைகள் இவற்றைக் கண்டதும் தங்களப் பெற்றவர்கள் மீது வெறுப்பும் கோபமும் கொள்வார்கள். ஏன் தான் பெற்றார்கள்? யஸ்மினா கீதா மீரா கொடுத்து வைத்தவர்கள். நாங்கள் கொடுப்பனவு இல்லாதவங்க என்று தகித்துக் கொள்வார்கள். யசோதாவின் கவனம் ஒரு கணம் தாய் நாட்டு வாழ்க்கையில் மூழ்கி ஓடித்திரும்புகையில் தலையில் விழுந்த பேரிடியில் கதிகலங்கிப் போனாள்!

யஸ்மினா பொடியனோடு நெருக்கமாக இருந்து கொம்பியுற்றர் விளையாடிக் கொண்டிருந்தாள். மற்றவர்கள் பிறைபோல் கூடி நின்றனர். கிறிஸ்ரினா துடுக்குத்தனமாக எல்லோரையும் பார்த்துச் சிரித்துவிட்டு யஸ்மினாவின் தோள்மூட்டை அமர்த்தி பொடியனோடு மேலும் ஒட்ட வைத்தாள் அடுத்தவன் சீறினில் விழுந்து ஆணின் தோற்றத்தைக் காட்டி இவரைத் தெரியுமா என்று கேட்டாள் எல்லோரும் சேர்ந்து சிரித்தார்கள். இந்தக் கேள்வி யசோதாவின் காதுக்குள் ஈயக்குண்டுகள் காச்சி ஊற்றியது போலிருந்தது வாசல் கதவு சாத்திய இடைவெளி ஊடாகப் துளாவித் துளாவி கண்ணோட்டம் விட்டாள். கொம்பியூற்றர் ஸ்கிறினில் விழுந்திருக்கும் சாயல் படத்தைப் பார்த்துவிடத் துடியாத் துடித்தாள். கிறிஸ்ரினா மீண்டும் யஸ்மினாவின் தோள்மூட்டை அமர்த்தியபடி கேட்டாள்.

யாரிவர் தெரியுமா?

யஸ்மினா மௌனமாகச் சிரித்தாள்?. யசோதா கல் தூணில் கட்டியடித்த காட்சியில் நெக்குருகித் துடித்தாள். சுற்றி நின்றவர்களின் கைதட்டல் கரகோசங்கள் அடங்கியும் யஸ்மினாவின் சிரிப்பின் ஒலி அடங்கவில்லை! யசோதாவின் குரல் அம்பாய் பாய்ந்தது.

யஸ்மினா எழும்பிக் கெதியா இங்க வாடி...... என்ன அம்மா? பதறியடித்த கீதாவும் மீராவும் அறைக்குள் ஓடினார்கள். உவளின் நடவடிக்கைகள் உந்தப் புள்ளைகள் வந்தால் புதிர் நிறைந்தனவாகவே கிடக்கிறது. விசித்திரமாகவும் புலப்படுகிறது. தாயவள் கூப்பிட்ட குரலை அலட்சியம் செய்தவளாக யஸ்மினா இருந்து விளையாடிக் கொண்டிருந்தாள். இந்த வேளை குணாளன் கதவைத் திறந்து கொண்டு உள்ள வந்தார்! மனைவியின் சினக்கோலம் கண்டு திகைத்துப் போனார்! யசோதா கெம்பிய கோபத்தில் சதிரத்தை ஆட்டியபடி புது ரூபமாய் புதுவேகத் தொனியில் குழறினாள்.

இண்டைக்கே உந்தக் கொம்பியூற்றர், கேம் போய்கள், ரீவி சகல சனியங்களையும் ஆருக்காவது வித்துத் தொலையிச்சிடுங்க; இல்லாட்டி இப்பவே கொண்டுபொய் ஸ்ரோர் றூமுக்க போட்டு மூடிவிடுங்க என்னால மீள முடியாமல் கிடக்கு. குணாளனுக்குப் புலப்படவில்லை. யஸ்மினாவின் எதிர்காலம் நல்லபடியாக அமையவேண்டும். உந்தப் புலத்தில் தமிழ் குடும்பத்துப் பிள்ளைகள் ஏதோ செய்யப் போய் பெற்றோர்கள் நினையாத பிரகாரம் ஏதோ நடந்து விடுவதால் வந்த கோபமும் தவிப்பிலிருந்து மீள முடியாத சங்கடமாகத்தான் குணாளனுக்கும் பட்டது. மனைவியின் உள்மனம் படும் சித்திரவதையை நன்கு புரிந்து கொண்டதால் ஆத்திரப்படாமல் தன் பிள்ளைகளை நெருங்கினார். இந்த வேளை சகல பிள்ளைகளும் திரும்பிப் பார்த்தும் திரும்பாமலும் கோபத்தோடும், கோபிக்காமலும் வெளியேறிவிட்டனர். தங்கள் பிள்ளைகளோடு சேர்ந்து தானும் குழந்தையாக மாறினார்.... மகளின் மனமகிழ்ச்சி நெஞ்சத்துள் இருக்கும் உண்மையையும் மகளின் பிடிவாதத்தையும் அறிந்துவிடும் தொடுப்பின் குறியாகக் குதூகலித்து யஸ்மினாவோடும் சேர்ந்து கும்மாளம் இட்டார். தகப்பனின் உந்தத் தோழமையின் கூடலிலும் தாயின் மீது எந்த வித வெறுப்பும் காட்டவில்லை! தாய் தன்னோடு ஒட்டியும், ஒட்டாமலும், அதட்டியும், அரவணைத்தும் விளங்கியும், விளங்காமலும் இருப்பது யஸ்மினாவுக்கு மேலும் மேலும் அலாதிப் பிரியத்தை கொடுத்தன. தன்னை எந்தவிதக் கேள்வியும் கேட்காமல் தங்கச்சிக்களுக்கு விளையாட்டுக் காட்டும் தகப்பனார் கிட்டப் போய்நின்று முகத்தைப் பார்த்தபடி பூவிரியும் இதழ் திறந்து முத்துக்கள் பளிச்செனச் சிந்தியது. அவள் சித்தம் தெளிவுறக் கூறினாள்.

அப்பா உங்களையும் அம்மாவையும் மீறி நான் ஒருபோதும் எக்காரணம் கொண்டும் நடக்கமாட்டேனப்பா. அம்மா என்னை அதட்டும் போதும் ஆத்திரத்தில் கடுமையான வார்த்தைகளைக் கொட்டும் போதும் என்ர வாழ்விற்குத்தான் என்று அம்மா மீது பாசத்தோடும் பக்தியோடும் தொழுதுதானப்பா நிற்கிறேன். அம்மாவிடம் சிறிதும் கோபம் எனக்கு வாறதில்லையப்பா யசோதாவின் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொலவென விழுந்தன. கன்னங்களில் வெடித்தும் சிதறின.... குணாளன் பெருமையோடு மார்பை நிமிர்த்தி நடந்து தன் அருமை மனைவியைப் பார்த்துச் சிரித்தார்....சிரிப்பு சிலர் சிரித்து வாழாத வாழ்வின் வளர்ப்பின் சிரிப்பாகச் சிந்திச் சிந்திக்கப் பண்ணியது. இப்படியே காலங்கள் காத்திருக்காமல் கடந்தன. யஸ்மினாவின் உயர் படிப்பு முடிந்து உயர்ந்த உத்தியோகத்திற்காகக் காத்திருந்தாள். அம்மா நான் முடிப்பதா என்று கேட்டேன்! கல்யாணம் முடிப்பதாகினும் உங்கள் விருப்பப் படி தான் கல்யாணம் முடிப்பேன். மெல்லிய குரலில் நாணம் இழையோடச் சொன்னாள். உந்தப் பேரிடிக்குத்தான் விடைதெரியாமல் தூக்கத்திலும் புலம்பினாள். நிதானத்திலும் உதாரணம் தேடிக் கண்டுபிடிக்க முடியாது தவித்தாள்! தவப்பேறான மகள் வாயிலிருந்து வந்த வார்த்தையில் சொக்கிப் போனாள். பரிவும்

https://tamileelamarchive.com/



பாசமும் காட்டி அதட்டியும் அச்சறுக்கை பண்ணிய தேவாரப் பாடல்களின் கனிவான தேறுதல் அளித்து இன்று பூரண நிலையடைந்த புதுப்பொளிவை யசோதா பெற்றாள். மீண்டும் மீண்டும் காரியங்கள் ஆற்றச் சுறு சுறுப்படைந்தாள். பெற்றவர்கள் இதயங்களைக் குளிர்ச்சியில் ஆழ்த்திய காவியத் தலைவியின் ஓவியக் காட்சியின் மாட்சிக்கும் நாள் பார்த்து விட்டார்கள். மீள முடியாதிருந்த நடவடிக்கைளிலிருந்து விடுதலை பெற்றுவிட்ட மகிழ்ச்சி சிறகடித்து புலத்து தேசமெங்கும் அகலவிரித்துப் பறந்து கொண்டிருந்தாள் . யசோதாவின் இறக்கைகளுக்குள் மேலும் இரண்டு குஞ்சுகள் உள்ளதை குணாளன் சிரித்தபடி சித்திரவதைப்பட்டார்! திடிரென ஒரு ஆனந்த கீதம் அலையெழுப்பி வந்தது. அம்மா இங்கையோடி வந்து கீதாவைப் பாருங்கம்மா!.... தலைதெறிக்க ஓடியவள் தாய்மையின் பெரும்பாக்கியத்துடன் கீதாவை வாய்விட்டுச் சிரித்து இறுக்கமாக அணைத்துக் கொண்டாள். என்ன ஏதென்று புரியாது நின்ற குணாளனை புன்முறுவல் பூத்து மகிழ்ந்திட யஸ்மினா சொன்னாள்.

"அப்பா கீதா பெரியவளாகி விட்டாளப்பா". கீதாவைப் பார்த்தார். மீராவைத் திரும்பிப் பார்த்தார். மனத்தை முழுமையாக யசோதாவிடம் விட்டவர் மனம் கலங்கி விழிகளைத் தாழ்த்தினார். யசோதா மறுபடி மறுபடி செக்கனுக்குள் கீதாவைக் கட்டியணைத்து ஆனந்த மனோலயத்தில் மூழ்கினாள். மனைவியின் மீள்முடியாத நடவடிக்கையின் தொடர்தல். குணாளனின் உள்ளுணர்ச்சிகள் துடித்துடித்தன. மௌனமாக தனக்குள் புலம்பினார். யசோதா எழும்பிக் கணவன் அருகில் வந்து நின்று நெடுமூச்செறிந்தாள். அடுத்தகட்டத் தாயின் கண்காணிப்பில் கவனம் சுறு சுறுப்படைந்தன.... யஸ்மினா தகப்பனின் இரு கைகளையும் பற்றிக்கொண்டு தாயைப் பார்த்து பூரித்தாள்..... மீரா கணீரென்று சிரித்தாள். கீதாவைப் பார்த்து! பூரித்தாள்... நாள்வரும் மீராவை உற்றுப் பார்த்தனர்! யசோதாவிடமிருந்து..... கண்களிலிருந்து கண்ணீர் குமுறுத்தான் போகின்றது. கண்காணிப்புகள் தீவிரமடையத்தான் போகின்றது. நடவடிக்கைகள் தினமும் நடக்கத்தான் போகின்றது. அரும்பாடு படும்பாடு படரத்தான் போகின்றது அரும்பாடு படும்பாடு படரத்தான் போகின்றது. மீண்டும் மீண்டும் தொடர்கதையின் பாத்திரங்கள் யஸ்மீனா சாட்சியாக நிற்கிறாள். கீதா பெரியவளாகிவிட்டாள்! மீரா வயசுக்கு வரப்போகிறாள் யசோதாவால் மீளமுடியாது.

# பங்கீடு

**ச**மன்பாடு ஒன்றின் பதிவு

ஒரு கானலின்
கலைந்து போகும் உருவைத்
துரத்தித் துரத்தியே...
சலித்துப் போயின
ஜீவிகள்

தேதிகள்
கணக்கிட்டு கரந் தேர்ந்தவராய்......
எதிர்ப் போன பங்கீட்டின்
ஏமாளிகளாய்....
ஏதோ கனவுப் பளிங்குகள்
உடைவுற்றது போல்
கண்ணீர்ச் சொட்டுக்கள்.

குடலையும்,
உயிரையும் தின்னும் பசிக்கு
மட்டும் சொல்லிடல்
வேண்டும்.
கூடுகளின் நிரம்பல்
அதிகரிக்கையில் தொடர்க
பணியென........

பங்கீட்டு அட்டைகளை
அடுக்கிச் செல்லுங்கள்
பல நோக்கு கடைகளில்
அவைகளும்
பட்டினி கிடக்கட்டும்.

அந்த மேசைகளுக்கும்
பணிகள் இருக்கட்டும்

பார்வைகளை பக்குவமாய்
அணுகுங்கள்.
பரிதவிப்புக்கும்
பதில் சொல்லிப் போகும்
அவர்களிடம் முரண்கள்
வேண்டியதில்லை.

நாளும் பட்டினித் திண்ணை
அந்தரிப்புகளாய்
உங்கள் ஆதங்கங்கள்
புரிகின்றது.

உங்கள் அகதிகள்
அடையாளம் அருகிப்
போகுமுன்னே......
அற்றுப் போகின்றதா
பங்கீடு.

நா.கானகன்

https://tamileelamarchive.com/





மாவீரன் அன்ரன்

அவன் கண்களுக்குள்
நிறைந்திருந்த தோழனின் வாழ்க்கையைப்பற்றி
துயருறப் பேசிக் கொண்டு திரிந்தவன் ஒருவன்
என் எதிர்ப்பட்டனன்

அவன் உயிர் பெற்றெழுந்து
மண்ணில் உலவுவது போலக் கதைகள் சொன்னான்
நெரிசலுறும் அவசரமான
ஐரோப்பிய வாழ்வின் இயக்கத்துள்
அவனது உருவை என் முன் எழுப்பினன்

நிலங்களின் மீது தடங்கள் அற்று
அலைபவர்களுள் ஒருவனாகிய சோகம்
அவனுக்குள் ஒரு புறம்

தன் தோழன் நிலத்தின் மீது
காதல் கொண்டிருந்ததை பற்றி
சொல்கையில் விழியோரங்களில்

# அவர்கள் ஆயத்தமானார்கள்

தா.பாலகணேசன்

https://tamileelamarchive.com/

கரும் மேகங்கள் சூழ்ந்து கலைந்தன
அவனைப் பற்றிய ஒரு பாடலை
உள்ளிருந்து இசைக்கும் பாடகனின் குரலை
இடை இடையே அவன் கேவும் குரலில்
நான் அறிகிறேன்

மழைக் காற்றில் கேசங்கள் கலைய
மண்ணைப் பற்றியும் மக்களைப் பற்றியுமே
சிந்தித்துக் கொண்டு திரிந்த கணங்களையெல்லாம்
கொஞ்சமும் சூடு தணியாத ஞாபகங்களோடு
அவன் பவுத்திரப் படுத்தி வைத்திருக்கிறான்

அவ்வாறான ஒருவனையே நான் சந்தித்திருக்கிறேன்
நிமிர்கிறேன்

★★★

போர் வீரர்களின்
காலடித் தடங்களைத் தேடித் தேடி
ஒரு சர்ப்பக் கூட்டம் போலவும்
இந்திய இராணுவம் பின் தொடர்ந்தது

அமைதிப் படையெனும் அர்த்தம்
அப்போ எங்களில் யார்க்கும்
புரிந்திருக்கவில்லை
மௌனப் பண்பாட்டை விதைக்கும்
ஒரு முயல்வுக்கானதே
அவர்களின் வருகை என்று
பின்னாளில் போராளிகள் தான் எமக்குணர்த்தினார்கள்

உண்டு உறங்கிப் பின்
கலவி உற்று வீழும்
விலங்கினமே என அவர்கள்
கருதியிருந்தனர் பலநெடுங் காலமாய் போலும்

★★★

போராளிகள் பசியால் துடித்தார்கள்
மக்கள் பசியாற்றத் துடித்தார்கள்
வீரர்கள் காடுகளுக்குள் உறைந்தார்கள்

இடிபாடுற்ற கட்டிட இடுக்குகளுக்குள்
ஒதுங்கினார்கள்
பற்றைகளுக்குள் படுத்திருந்தார்கள்
வாய்க்கால்களுக்குள் வரம்புகளுக்குள் ஒழிந்திருந்தார்கள்

பசியால் துடித்து இறப்பதை ரசிக்கும்
பச்சைப் பேய்களின் முற்றுகைக்குள்
சனிக்கிழமை காகத்துக்குச்
சோறு பரிமாறுவதைப் போலவும்
மௌன அழைப்போடு
கிழுவைக் கதியால் தபால் பெட்டிகளில்
உணவுப்பொதிகளைத் தொங்க விட்டார்கள்
அவர்கள் உண்ணும் வரை மக்கள் பசிக்கக் கிடந்தார்கள்.

★★★

போராளிகளில் தாய்மைப் பண்பு மேலோங்குகிறது
அன்ரனிலும் அத்தகைய பண்பு மேலோங்கிற்று
இயற்கையின் அனைத்துத்துடிப்பிலும்
அவன் தன்னைக் கரைத்தான்

இலைகளின் சலசலப்பின் கீதம் தனதென்றான்
அன்பின் நதி மண்ணைக் கிழித்துப் பாய்கிறதை
அந்நிய இராணுவத்தால் அறிய முடியாதென்றான்
ஒளியின் கதிரும் தானென்றான்
புல் நனையும் பனியின் துளியும் தானென்றான்
பூமியும் வானமுமாய் கரையும்
போர் வீரர் கூட்டம் நாமென்றான்
கடலின் அலைகளின் கீதம்
வீரர்களின் அணிவகுப்புப் பாடல் என்றான்

காட்டில் உறைந்திருக்கும் அமைதி
வீரர்களின் தியானப் பொறிச் சுரங்கம்
அதுவென்றான்
நிலவு பொழியும் அமுத நதியை
கீழிறங்கி ஓடச் செய்யும் முயல்வே தமதென்றான்
கரிய காக்கைக் கூட்டமும் தாமென்றான்
கனலும் நெருப்பின் வெம்மையும் தாமே என்றான்
உயிரின் உயிராய் உறைகின்ற
ஒரு நதியின் உயிர்ப் பயணமே
தமதென்றான்
அன்பை நிழலாய்ச் சொரியும்
அகப்பண்பாட்டுக்கான புதிய வழியைத் திறக்கும்
திறவுகோலை தாம் சென்ற இடமெல்லாம்
வைத்துச் சென்றதாய் சொல்கிறான்.

★★★

அவன் ஒரு மருத்துவனும் ஆனான்
நோயின் வேர்களைத் தேடி பயணம் போனான்
காயப்பட்ட வீரர்களின் கண்ணீரை துடைத்தான்

புல்லாங்குழல் போன்ற
அவனது உடல்
வலி நிறைந்த இசையால் நிரம்பி
காயங்களைச் சுகப்படுத்தியது

சர்ப்பக் கூட்டம் துரத்துகிறது

விடுதலைப் போராளி குழுக்களுடன்
அன்ரனும் காடொன்றில் ஒழிந்திருந்தான்
மறு நாளும் உணவில்லை
இலைகள் குழைகள் யாவும்
முயன்று பயனின்றிப் போயிற்று
கரிய கோடாய் நிமிர்கிற
ஒற்றைப் பனை சமிக்ஞைக் கோபுரமாய் உயர்கிறது
மரத்தில் யாரோ ஏறுகிறான்
திசைகள் எங்கும் துருவித் துருவிப் பார்க்கிறான்

விடுதலையின் மையங்கள் சிதறக் கூடும்
என்ற பயம் எழுகிறது
அதோ
அவனைப் போராளி ஒருவன்

https://tamileelamarchive.com/




கீழ் இறக்குகிறான்

மரத்தால் இறங்கிய மனிதன்
அவர்களைப் பார்த்து முதலில் கேட்டான்
முற்றுகைக்குள் நீங்கள்
எத்தனை நாள் பசியோடு இருந்திருப்பீர்கள்
என்னிடம் உள்ள எதையாதும் எடுத்து வரவோ என்று
உளவாளி கூட அன்பைக் காட்டுவான்
என போராளிகள் தரப்பில்
அச்சம் இருப்பினும்
உச்சத்தில் நின்ற
அவனது அன்பை அவர்கள் மதித்தனர்
அவனும் அவனைப் போன்றோருமே
அன்று அடைகாத்தனர்
விடுதலை நெருப்பை

★★★

விடுதலை நெருப்பை மூட்டிக்
காத்து வளர்த்துச் சர்ப்பங்களை விரட்டிய
வீரர்களில் அன்ரனும் ஒருவனே

காட்டுக்குள் இருந்து
புறப்பட்ட விலங்கினை ஒத்த பண்பினராய்
இந்திய இராணுவத்தினர் இருந்தனர்
வேசப்பொருத்தம்
நடிப்பு,
கதை, கதைவசனம் எல்லாம் அவர்களுக்கு
கொஞ்சம் கூடப்பொருந்தவில்லை
அகிம்சை பற்றிய வேசப் புனைவின்
பொருத்தமின்மையால் அவர்கள்
அவதிக்குள்ளாயினர்
விடுதலையின் பொருள் அறிந்து
போகவே வந்தனர் போலும்
விடுதலையே நேசித்த
வீரரின் உடலை தெருவில் இழுத்துத் திரிந்தார்
புழுதி தோய்கிறது கிழிகிறது உடல்
நரம்புகள் அறுகின்றன
வலிய உடல்
விடுதலையின் உச்சத்தை தொட்ட உடல் இழுபடுகிறது
இரத்தமும் தசையும் கொண்ட உடல்
கிழிந்து மண்ணில் பரவுகிறது
வானமும் பூமியுமாய் நிமிர்கிறது பேர் உடல்

அவர்கள் உள்ளிழுக்கும் மூச்சுக்காற்றில்
விடுதலை பொறி
வானம் பூராகவும்
அவனது பிம்பம் ஓங்கி வளர்கிறது
தேயும் உடல் ஒரு சூரியனைப் பூக்கிறது
ஒரு நிலவை மலர்விக்கிறது
காற்றாய் திரிகிறது
நெருப்பாய் எழும்புகிறது
அன்பின் ஆறாய்ப் பாய்கிறது
இழுத்துத் திரிந்த இந்திய இராணுவப்
பேய்கள் கூட்டத்தை விடுதலையின் வீச்சுக் கதிர்கள்
தாக்கி கிழிக்கின்றன

அந்தோ அவர்களைப் பயம் சூழ்கிறது
பின்னே அதுவே அவர்களை சர்ப்பமாய் துரத்துகிறது

★★★

சூரியன் மேற்கில்
கதிரடங்கிச் சாய்கையில்
கரியப் பனங்கூடலுக்குள் இருந்து

அற்புத இசையை
எழுப்பிக் கொண்டிருந்தவன்

மலைபோல
மக்களை நேசித்த
இதயத்தை உருவி துயர் தோய்ந்த பாடல்
ஒலிக்கிறது
சடைத்த வேப்ப மரக் கிளைகளில்
இருந்து துக்கச் சிறகை
விரித்தெழுந்து
காகங்கள் இராணுவ மரியாதை செலுத்தும்
விமானங்களைப் போல
அணிவகுத்துப் பறந்தன

முடி நரைத்த தாத்தாக்காரன்
முனகுவதைப் போல கரையில்
நுரைதள்ளிச் சோர்கிறது கடல்
அவனது நினைவுகளைப் பேசியபடி
பனங்கூடலுக்குள் மக்கள்ஏற்றிய ஒரு சுடர்
அவன் நினைவாக எரிகிறது
எல்லா வீடுகளிலும் துக்கம்
கொடி விட்டுப் படரத் தொடங்கியது
அவர்கள் ஆயத்தமானார்கள்.

https://tamileelamarchive.com/

# பேய்கள்



முகாரிராகம்
கேட்கிறது, இங்கே
மாமிச பிண்டங்களின்மீது
நடந்து கொண்டு
அவைகள்...
எங்கும் இரத்த
ஆறு பாய்கிறது
எங்கள் உடலங்கள்
சிதைந்து
வதைந்து கிடக்கின்றன.
எஞ்சிய உயிர்கள்
போகுமிடம்
அறியாது
பொதிகளை சுமந்தபடி
போகின்றன நிர்வாணமாய்
துடிக்கிறது நெஞ்சம்.
பருந்துகள்
இதைப்பார்த்து
வருந்தவில்லை
மாறாக அருந்துகிறது
எங்களை
எங்கள் சடலங்களை
எங்கள் துயரங்களை
எங்கள் முகாரீராகத்திற்கு
அவைகள் முகமகிழ்ந்து
கூத்தாடுகிறது.

எங்கள் துயரங்களை
மாலையாகப்
போட்டுக்கொண்டு
எங்கள் மரணங்களை
சலங்கையாக்க
கட்டிக்கொண்டு
அந்தப் பேய்கள்.

■ தீபச்செல்வன்

https://tamileelamarchive.com/











நாட்டுப்பற்றாளர்
திரு. கணேஸ்வரன்- விஜயரட்ணம்
அவர்களின் இறுதி அஞ்சலி
நிகழ்வு - **யேர்மனி**



தமிழர் விளையாட்டு விழா-சுவிற்சலாந்து



https://tamileelamarchive.com/









# தாயகமே தாகம் - எழுச்சி நிகழ்வு - சுவிற்சலாந்து









https://tamileelamarchive.com/





### லெப்.கேணல் திலீபனின் தியாகப் பயணம்

இந்திய வல்லாதிக்க ஆளும்வர்க்கத்தின் அரசியல் முகமூடியைக் கிழித்தெறிந்து, தமிழ் மக்களுக்கும், உலகிற்கும் இந்திய அரசின் நயவஞ்சகச் செயலை சுட்டிக்காட்டுவதற்காக 15.09.1987 அன்று சாகும் வரை நீராகாரமற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்து, பன்னிரெண்டு நாள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி 26.09.1987 அன்று தனது உயிரைத் தற்கொடை செய்தார். லெப். கேணல் திலீபன் அவர்கள்.

### வந்தாறுமூலை பல்கலைக்கழகப் படுகொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாறுமூலை பல்கலைக்கழகத்துள் தஞ்சம் புகுந்திருந்த தமிழ் மக்கள் 05.09.1990 அன்று பீ.ஏ. கருணாதிலக தலைமையிலான சிங்கள இராணுவத்தினரால் கைதுசெய்து கொண்டு செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். இதில் பெண்கள், குழந்தைகள், வயோதிபர் உட்பட 158 தமிழ் மக்கள் பலியாகினர்.

### சத்துருக்கொண்டான் படுகொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் 09.09.1990 அன்று ஏ.எம்.டபிள்யூ. செனிவரத்தின தலைமையிலான விசேட அதிரடிப்படையினர் சத்துருக்கொண்டான் பகுதியை சுற்றிவளைத்து பெண்கள், குழந்தைகள், வயோதிபர் உட்பட 180 தமிழ் மக்களை கைது செய்து கொலை செய்தனர்.

### தமிழீழத்தில் முதன் முதல் மணக்கொடைத் தடைச்சட்டம் அமுலான நாள் 01.09.1995

### யாழ். கோட்டை மீட்பு

170 நாள் முற்றுகைச் சமரின் பின் விடுதலைப் புலிகளால் யாழ். கோட்டை மீட்கப்பட்டு 26.09.1990 அன்று யாழ். கோட்டையின் மீது தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டது.

### ஒப்பிரேசன் மின்னல் முறியடிப்பு

தமிழீழ தாயகத்தை இரண்டாகப் பிளக்கும் நோக்கத்தைக் கொண்ட மணலாறு ஒப்பிரேசன் மின்னல் படையெடுப்பு விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்ட நாள் 26.09.1991 இப்படையெடுப்பு 28.08.1991 அன்று ஆரம்பித்து 26.09.1991 வரையான 28 நாட்கள் நீடித்தது. இச்சமரில் எமது முதல் நிலைத் தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல். ஜஸ்ரின் உட்பட 236 வீரர்கள் வீரச்சாவாடைந்து தேசத்தைக் காத்தனர். 300 வரையான தமது சிப்பாய்களை இழந்து சிங்களப்படை தோல்வியைச் சந்தித்தது.

### சாவகச்சேரிப் படுகொலை

யாழ். மாவட்டத்தின் சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் 28.09.1993 அன்று சிறீலங்கா விமானக் குண்டுவீச்சால், பதுங்கு குழியில் இருந்த பெண்கள். குழந்தைகள். உட்பட 23 தமிழ் மக்கள் மண்ணால் மூடப்பட்டு மூச்சுத்திணறி உயிரிழந்தனர்.

### ஒப்பிரேசன் யாழ் தேவி முறியடிப்புச் சமர்

29.09.1993 அன்று ஆனையிறவுப் பெருந்தளத்திலிருந்து யாழ். குடாநாட்டிற்கான விநியோக மார்க்கமாக விளங்கிய கிளாலி இறங்குதுறையை கைப்பற்றுவதற்காக கனரகவாகனங்கள் சகிதம் 5000 ற்கு மேற்பட்ட சிங்களப் படையினர் முன்னேறினர். புலோப்பளையில் வைத்துப் படையினரை வழிமறித்த விடுதலைப் புலிகள் ஆக்ரோசமான முறியடிப்புத் தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போது இடம்பெற்ற 4 மணித்தியால முறியடிப்புத் தாக்குதலில் 125 சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர். இப்படை நடவடிக்கையில் சிங்கள இராணுவத்தினரை வழிநடத்திய கட்டளை அதிகாரி கேணல் சரத் பொண்சேகா உட்பட 284 படையினர் படுகாயமடைந்தனர். ரி-55 தாங்கிகள் இரண்டும். பவள் கவச வாகனம் ஒன்றும் முற்றாக சிதைக்கப்பட்டன. வேறு இரண்டு கவசவாகனங்கள் சேதமடைந்தன.

### சாகரவர்த்தனா மூழ்கடிப்பு

19-09-1994 அன்று ஏ-602 இலக்க கடலரசன் எனும் அர்த்தப்படும் சிறீலங்காக் கடற்படையின் சாகரவர்த்தனா கட்டளைக் கப்பல் கடற்கரும்புலிகள் மகளிர் படையணிச் சிறப்புத்தளபதி, லெப். கேணல் நளாயினி தலைமையிலான கடற்கரும்புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது. இச்சம்பவம் தமிழீழத்தின் மேற்குக் கடற்பகுதியான கற்பிட்டிக் கடற்பரப்பில் இடம்பெற்றது. இவ் வெற்றிகர கடற்தாக்குதல் சமரின் போது சாகரவர்த்தனா கப்பலின் கட்டளை அதிகாரி கப்டன் அஜித் போயாகொட மற்றும் உதவிக் கட்டளை அதிகாரியும் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டனர்.

### கிளிநொச்சி நகர் மீட்ட ஓயாத அலைகள் -2

விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் -2 நடவடிக்கை மூலம் 27-09-1998 அன்று ஒரு பிரிகேட் தலைமையகத்தையும் பல மினி முகாங்களையும் கொண்டதான 8 கி.மீ நீளமான இராணுவ வலயமும். 1500 இற்கு அதிகமான படையினரும் அழிக்கப்பட்டு கிளிநொச்சி நகர் மீட்கப்பட்டது. இரண்டு யுத்த டாங்கிகள் உட்பட பெருமளவான ஆயுத தளபாடங்களை புலிகள் கைப்பற்றினர். இழந்த எமது பிரதேசங்களை மீட்டெடுத்த பெரும் சமரின் வெற்றிக்கு வலுச்சேர்த்து 405 விடுதலைப் புலிவீரர்கள் வீரச்சாவடைந்தனர்.

### ரிவிகிரண முறியடிப்பு

03-09-2000 அன்று இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்ட ரிவிகிரண எனும் இராணுவ படையெடுப்பு தொடங்கிய நாளிலே விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள்-3 நடவடிக்கை மூலம் முறியடிக்கப்பட்டது.

### ஓயாத அலைகள் -4

தென்மராட்சிப் பகுதியில் 26.09.2000 அன்று விடுதலைப் புலிகளால் ஓயாத அலைகள் -4 நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

### விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தலைவர் கேணல் சங்கர் அவர்கள் வீரச்சாவு



தமிழீழ விடுதலைப் புலிகள்இயக்கத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான கேணல் சங்கர் 26.09.2001 அன்று வன்னி ஒட்டுசுட்டான் பகுதியில் சிங்கள இராணுவத்தின் கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

### தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடை நீக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை,சிறீலங்கா அரசு 04.09.2002 அன்று நள்ளிரவுடன் நீக்கியது. சந்திரிகா அரசால், 1998ம் ஆண்டு, விடுதலைப் புலிகள் அமைப்பு மீது விதிக்கப்பட்ட தடையானது, சமாதானப் பேச்சுவார்த்தைக்கு பெரும் தடைக்கல்லாக அமைந்திருந்தது தெரிந்ததே. இத்தடை நீக்கமானது, தாய்லாந்தில் நடைபெற்ற நேரடிப் பேச்சுவார்த்தைக்கு வழியேற்படுத்தியிருந்தது.

### புலிகளுக்கும் அரசிற்கும் இடையே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நேரடிப் பேச்சுவார்த்தை

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையே, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நேரடிப் பேச்சுவார்த்தை 16.09.2002 அன்று தாய்லாந்தில் ஆரம்பமாகி நடைபெற்றது. சந்திரிகா அரசுடன் மேற்கொள்ளப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தை, 1995ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முறிவடைந்தற்குப் பின்னர், சுமார் ஏழாண்டுகள் கழித்து நடைபெற்ற நேரடிப் பேச்சுவார்த்தை இதுவாகும்.

### கைதிகள் பரிமாற்றம்

விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்காப் படையினருக்கும் இடையேயான கைதிகள் பரிமாற்றம் ஒன்று 28.09.2002 அன்று, வவுனியா ஓமந்தைப் பகுதியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஏழாண்டுகளாக விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலிருந்த படையினர் ஏழு பேரும் விடுவிக்கப்பட்ட அதே வேளை, சிறீலங்காச் சிறைகளில் இருந்து விடுவிக்கப்பட்ட பதினொரு விடுதலைப் புலிகளும் வைபரீதியாக பரிமாற்றம் செய்யப்பட்டனர். ஓமந்தையில் விடுவிக்கப்பட்ட11பேரில், பலாலியில் சிங்கள விமானப்படைத்தளம் மீது 1994ம் ஆண்டு நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதல் அணிக்கு தலைமையேற்றுச் சென்று, சிறீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்ட கரும்புலிவீரர் கெனடியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

https://tamileelamarchive.com/

# மீள்பார்வை

06 ஜூலை 2005

கரும்புலி வீரர்கள் தமது இறுதி விருப்பமாய் விடுதலையையும் தேசியத்தலைவரின் பாதுகாப்பையுமே முன்வைத்துவிட்டு சென்றதைக் கண்டிருக்கின்றோம். அவர்களது விருப்பமான தேச விடுதலையைப் பெற்று தமிழீழ தேசத்தை சுதந்திர பூமியாக உருவாக்குவதே அந்த கரும்புலி வீரர்களின் உயிர்க்கொடைக்கு நாம் செலுத்தும் கடனாக அமையுமென தமிழீழ புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் திரு. பொட்டம்மான் அவர்கள் தெரிவித்துள்ளார். அனைத்துலக தமிழ் ஊடகம் ஒன்றில் கரும்புலிகள் நாள் தொடர்பாக கருத்துரைத்த போதே திரு.பொட்டம்மான் அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

09 ஜூலை 2005

1995 யூலை 09ம் திகதி நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீது ஸ்ரீலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட குண்டு வீச்சில் பலியான 247 பொது மக்களின் 10ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 09.07.2005 அன்று சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் நினைவு வணக்க நிகழ்வு நடைபெற்றது.

10 ஜூலை 2005

விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஸ்ரீலங்கா அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதாக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசன் தெரிவித்துள்ளார். நெருக்கடிகளுக்கான தீர்வைக் கண்டு சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பாக கடந்த 5ம் திகதி ஒஸ்லோ பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

10 ஜூலை 2005

திருமலை மாவட்டம் செல்வநாயகபுரம் பகுதியில் உள்ள அரசாங்க பண்ணை விடுதியில் தங்கியிருந்த போராளிகள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் துணையுடன் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் திருகோணமலை மாவட்ட கடற்புலிகளின் தளபதி லெப். கேணல் டிக்கான் உட்பட இரண்டு போராளிகளும் தேசிய துணைப்படை வீரர் மற்றுமோர் ஆதரவாளர் என நான்கு பேர் வீரச்சாவடைந்தனர்.

11 ஜூலை 2005

அரசியல் பணிகளில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகளிற்கு உரிய பாது காப்பு வழங்கப்படாவிட்டால் யாழ்ப்பாணத்திலுள்ள படையினரின் உணவு மற்றும் குடிநீர் விநியோகங்களை தடைசெய்யப்போவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வடமாராட்சி கடற்றொழிலாளர் சமா சத்தின் பொது முகாமையாளர் சூரியகுமார் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

16 ஜூலை 2005

எமது விடுதலையென்பது அல்லது மக்களின் நல்வாழ்வு என்பது சிங்களவர்களின் கருணையினாலோ சிறீலங்கா அரசின் பெருந் தன்மையினாலோ விளையப்போவதில்லை. இவ்வாறு தமிழீழ புல னாய்வுத்துறைப் பொறுப்பாளர் திரு. பொட்டம்மான் அவர்கள் தெரிவித் துள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளின் முதல் தாக்குதற் தளபதியான லெப்டினன்ட் சீலன் அவர்களின் இருபத்திரெண்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வில் கலந்து கொண்டு போராளிகள் மத்தியில் சிறப்புரை யாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

16 ஜூலை 2005

மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமுலைப் பகுதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்திற்கு அருகாமையில் வைத்து 16.07.2005 அன்று மாலை 5.30 மணியளவில் ஸ்ரீலங்கா இராணுவச்சிப்பாய் ஒருவர் இனந்தெரி யாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரி விக்கின்றன. 12வது ஆட்டிலறிப் படையணியைச் சேர்ந்த எம்.எஸ்.கே கந்தபொல என்ற இராணுவச்சிப்பாயே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

16 ஜூலை 2005

கருணா குழுவைச் சேர்ந்தவர் என நம்பப்படும் ஆறுமுகம் குகேந் திரன் என்ற நபர் புத்தளம் மாவட்டம் சிலாபத்தில் 16.07.2005 அன்று நண்பகல் 12.30 மணியளவில் உள்ள விடுதி ஒன்றிற்கு சென்ற போது இனந்தெரியாத இளைஞர் ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

17 ஜூலை 2005

போர் நிறுத்த ஒப்பந்தம் ஓர் இறுதிக்கட்டத்திற்கு வந்து விட்டதாகவே நாம் உணர்கிறோம். போர் நிறுத்த ஒப்பந்தத்தின் படி விடுதலைப் புலிகளின் பயணங்களிற்கான பாதுகாப்பினை வழங்க சிறிலங்கா அரசு உறுதியான பதில்களைத் தரவில்லை. அவர்களின் உறுதியான பதில் கிடைக்காவிட்டால் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னதான எமது பயண வழிமுறைகளையே நாம் கையாள்வோம். இராணுவம் அத னைத் தடுக்க முற்பட்டால், எம்மீது தாக்குதல் நடாத்த முற்பட்டால் நாம் எம்மைத் தற்காக்கும் நடவடிக்கைகளில் இறங்கவேண்டி வரும் அப் போது போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவுக்கு வந்து விடும் என தமிழீழ அரசியல்த் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தெரிவித்துள் ளார். 17.07.2005 அன்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் அமைந் துள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின் ஊடகவிய லாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

21 ஜூலை 2005

அம்பாறை மாவட்டம் பொத்துவில் பகுதியில் வைத்து 21.07.2005 அன்றிரவு 11:00 மணியளவில் உந்துருளியில் வந்த இனந்தெரியாத இளைஞர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஸ்ரீலங்கா காவற் துறையைச் சேர்ந்த ஒருவர் பலியாகியுள்ளார். இதனையடுத்து ஸ்ரீலங்கா காவற்துறையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் அப்பாவிப் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

23 ஜூலை 2005

தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம் 23.07.2005 அன்று கிளிநொச்சில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. அன்று காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியில் உள்ள திட்டமிடலுக்கும் மேம்பாட்டிற்குமான செயல கத்தில் இவ் அறிமுகவிழா நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பால குமாரன் அவர்களும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் திரு.கரிகாலன் அவர்களும் ஏற்றிவைத்தனர். தேசியக் கொடியினை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு.சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்கள் ஏற்றிவைத்தார்.

25 ஜூலை 2005

திருமலை மிகிந்தபுர பாடசாலையில் ஆண்டு 10ல் கல்வி பயிலும் மாணவன் ஒருவன் 25.07.2005 அன்று நள்ளிரவு அருகில் உள்ள இராணுவ முகாமினுள் சென்று அங்குள்ள சிப்பாய் ஒருவரின் ரி-56 ரக துப்பாக்கியை எடுத்துக்கொண்டு சென்ற வேளையில் அவனைப் பின் தொடர்ந்து துரத்திய சிப்பாய் ஒருவரை அந்த துப்பாக்கியினால் சுட்டுக் கொன்றுள்ளான். சிப்பாயை சுட்டுக் கொன்றுவிட்டு தப்பிய மாண வனை ஏனைய இராணுவ வீரர்கள் சுற்றிவளைத்து பிடித்துள்ளனர்.

27 ஜூலை 2005

தமிழீழத் தேசிய எழுச்சி மநாடு வவுனியா வைரவர் புளியங்குளம் சிறுவர் பூங்கா மைதானத்தில் 27.07.2005 அன்று முற்பகல் 10.30 மணிக்கு ஆரம்பமாகி எழுச்சி பூர்வமாக நடைபெற்றது. இதில் பெரும் திரளாக தமிழர் தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் சென்ற பேராளர்கள் கலந்து கொண்டுள்ளனர். நிகழ்வின் ஆரம்பத்தில் கரும்புலி லெப்.கேணல் போர்க்கின் தாயார் பொதுச் சுடரினை ஏற்ற கப்டன் மில்லரின் தந்தையார் தேசியக் கொடியினை ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

https://tamileelamarchive.com/

# பதிவுகள்



## ஜேர்மனியில் நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவு

01 ஓகஸ்ட் 2005

28.07.2005 அன்று ஜேர்மனி நாட்டில் சுகவீனம் காரணமாக நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்தார். 1985ம் ஆண்டு முதல் தாயக விடுதலைக்காய் ஜேர்மனியில் பல்வேறு பணிகளை ஆற்றிவந்த திரு. கணேஸ்வரன் விஜயரட்ணம் என்ற நாட்டுப்பற்றா ளரே சாவடைந்தவர் ஆவார்.

## உலங்குவானூர்தி விபத்தில் தென் சூடான் விடுதலை அமைப்பின் தலைவர் ஜோன் கிறாங் சாவு

01 ஓகஸ்ட் 2005

தென் சூடானிய விடுதலை அமைப்பின் தலைவரும், சூடான் நாட்டின் துணை அரசுத் தலைவருமான திரு. ஜோன் கிறாங் அவர்கள் 01.08.2005 அன்று இடம்பெற்ற உலங்கு வானூர்தி விபத்தில் சாவடைந்துள்ளதாக சூடானில் நிலை கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரி கள் தெரிவித்துள்ளனர். தென் சூடானிய மக்களின் விடுதலைக்காக கடந்த 20 ஆண்டுகளிற்கும் மேலாக ஆயுதப் போராட்டத்தை தலைமை யேற்று வழிநடாத்தி வந்த திரு. ஜோன் கிறாங் அவர்கள் சூடானிய அரசுடன் ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டை அடுத்து அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கத்தின் துணைத் தலைவராக கடந்த மூன்று வாரங் களிற்கு முன்பே பதவியேற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.




## எழுச்சி பூர்வமாக நடைபெற்ற மட்டு எழுச்சி மாநாடு

02 ஓகஸ்ட் 2005

ஸ்ரீலங்கா புலனாய்வுப் பிரிவினரின் கொலை மிரட்டல்கள், குண்டுத் தாக்குதல்கள் என்பவற்றிற்கு மத்தியில் 02.08.2005 அன்று மட்டக்களப்பு தேசிய எழுச்சி மாநாடு மிகவும் எழுச்சி பூர்வமாக நடைபெற்றுள்ளது. இந்த நிகழ்வின் போது பெருந்திரளான பேராளர்கள் கலந்து கொண்டு வவுனியா மாநாட்டு பிரகடனத்தை ஆதரித்து முன்னெடுத்துச் செல்ல உறுதி பூண்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாநாடு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர் திரு. ஜோசப் பரராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரினை வண.பிதா ஜேசப் மேரி அடிகளார் மற்றும் மட்டு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சண்முகம் ஆகியோர் சுடர் ஏற்றி வைக்க கரும்புலி கப்டன் சிறைவாசன் உட்பட மூன்று மாவீரர்களின் தந்தையான திரு. நாராயணபிள்ளை அவர்கள் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்து எழுச்சி மாநாட்டினை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. இளந்திரையன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், மதத் தலைவர்கள் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

மட்டக்களப்பு மக்கள ராமய விகாராதிபதி தம்பிட்டிய சுமண தேரர் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர் என்பது குறிப்பிடத் தக்கது.



## இணுவிலில் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் அப்பாவி இளைஞன் பலி: மற்றொருவர் படுகாயம்

04 ஓகஸ்ட் 2005

யாழ். மாவட்டம் இணுவில் பகுதியில் உள்ள ஓர் முடிதிருத்தும் நிலையத்திற்குள் புகுந்த இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் முடி திருத்துபவர் ஒருவர் பலியாகியுள்ளதுடன், மற்றொருவர் படுகாயமடைந்து யாழ். மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனால் ஆத்தரமடைந்துள்ள அப்பகுதி மக்கள் படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். படையினரின் துப்பாக் கிப் பிரயோகத்தில் கொல்லப்பட்டவர் கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த 23 அகவையுடைய, ஜெயசீலன் காந்தரூபன் எனவும் படு காயமடைந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த 29 அகவையுடைய லோக தாஸ் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## மக்களின் போராட்டத்தில் கண்ணீர் புகைக்குண்டு வீச முற்பட்ட காவல்துறை அத்தியட்சகர் கடத்தப்பட்டு கொலை

04 ஓகஸ்ட் 2005

யாழ். இணுவிலில் அப்பாவி இளைஞர் ஒருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டி ருந்த மக்கள் மீது கண்ணீர் புகைக் குண்டை வீச முற்பட்ட யாழ். மாவட்ட காவல்துறை அத்தியட்சகர் சாள்ஸ் விஜேவர்த்தன ஆத்திர மடைந்த இளைஞர்களினால் கடத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்.

## களுவாஞ்சிக்குடி அரசியற்துறை அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு

05 ஓகஸ்ட் 2005

மட்டக்களப்பு மாவட்டம் கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் அமைந்திருக்கும் பட்டிருப்புக் கோட்ட அரசியற்துறை அலுவலம் மீது 05.08.2005 அன்று காலை சிங்களப் படைகளுடன் சேர்ந்தியங்கும் தேசவிரோதிகளினால் கைக் குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

## விடுதலைப்புலிகள் தமது சொந்த பாதுகாப்புடன் பயணம் செய்ய ஆரம்பித்துவிட்டனர் - சு.ப.தமிழ்ச்செல்வன்

05 ஓகஸ்ட் 2005

தமது சொந்தப் பாதுகாப்பில் விடுதலைப் புலிகள் தமது பயணங்களை தற்போது மேற்கொண்டு வருவதாக தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார். நோர்வேயின் துணை வெளிவிவகார அமைச்சர் திரு.விதார் ஹெல்கி சன் அவர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகவியளாளரின் கேள் விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## தென்கொரியாவில் நடைபெற்ற அனைத்துலக சமாதான விளையாட்டு விழாவில் தமிழீழ வீரர்கள் சாதனை!!!

06 ஓகஸ்ட் 2005

யூலை 23ம் நாள் தொடக்கம் ஆகஸ்ட் 02ம் நாள் வரை தென்கொரியா வில் நடைபெற்ற 23 அகவைக்குட்பட்டோருக்கான அனைத்துலக சமாதான விளையாட்டு விழாவில் நிரஞ்சன் மற்றும் ரவீந்திரன் ரதீசன் ஆகிய தமிழீழ வீரர்கள் தங்கப் பதக்கங்களை வென்று சாதனைபடைத் துள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த நிரஞ்சன் 400 மீட்டர், 800 மீட்டர் ஆகிய ஓட்டப்போட்டிகளில் தங்கப் பதக்கங்களையும், 4 தர 400 மீட்டர் அஞ்சல் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும், திருகோண மலை மாவட்ட வீரரான ரவீந்திரன் ரதீசன் நீளம் பாய்தலில் தங்கப் பதக்கத்தையும், 4 தர 400 மீட்டர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். இவர்களின் போக்குவரத்திற்காக தமிழீழ விளையாட்டுத்துறை இவர்களிற்கு 2 இலட்சம் ரூபா பணத் தினை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

https://tamileelamarchive.com/

# பதிவுகள்



### அதிரடிப்படையினர் துப்பாக்கிச் சூட்டில் இரு போராளிகள் வீரச்சாவு

10 ஓகஸ்ட் 2005

அம்பாறை மாவட்டம் பாவட்டையில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்திலிருந்து அரசியற் பணிகளில் ஈடுபட 10.08.2005 அன்று காலை 7.30 மணியளவில் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்ற இரு போராளிகள் காஞ்சிரங்குடா பகுதியில் சிறப்பு அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர். திருக்கோவில் சின்னக்கடையைச் சேர்ந்த வெள்ளையன் ரமேஸ் (அகவை 32) மற்றும் திருக்கோவில் விநாயகபுரத்தைச் சேர்ந்த சுஜிவேந்தன் (அகவை 18) ஆகிய போராளிகளே வீரச்சாவைத் தழுவிக் கொண்டதாக அம்பாறை மாவட்ட அரசியற்துறையினர் அறியத் தந்துள்ளனர்.

### மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிராக மலையக இளைஞர்களின் சாகும்வரையிலான உண்ணாநோன்புப் போராட்டம் ஆரம்பம்

11 ஓகஸ்ட் 2005

மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து மலையகத் தமிழ் இளைஞர்கள் சாகும்வரையிலான உண்ணா நோன்புப் போராட்டத்தை 11.08.2005 அன்று காலை 7.00 மணிக்கு தலவாக்கலையில் ஆரம்பித்துள்ளனர். மலையக இளைஞர் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெறும் இப்போராட்டம் தலவாக்கலை சுற்றுவட்டத்திற்கு அருகில் நடைபெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது.

### துணைப்படைகளிடமிருந்து ஆயுதங்களை களையாவிடின் முழு அளவில் மோதல் வெடிக்கும் - அன்ரன் பாலசிங்கம்



12 ஓகஸ்ட் 2005

இராணுவத்தின் துணைப்படைகளிடமிருந்து ஆயுதங்களை களைய வேண்டிய யுத்த நிறுத்த உடன்படிக்கை கடப்பாட்டை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தவறுமானால், தற்போது அதிகரித்து வரும் பதற்ற நிலை முழு அளவிலான மோதலாக வெடிக்குமென விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான முனைவர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளார். கருணா கும்பலைத் தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடாதென அரச சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ராய்ட்டருக்கு வழங்கியுள்ள நேர்காணலில் தெரிவித்துள்ள நிலையில் அன்ரன் பாலசிங்கம் அவர்களிடமிருந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. தென் தமிழீழப் பகுதிகளில் இராணுவத் துணைப் படைகளுடன் இணைந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசாங்கம் நிழல் யுத்தத்தை நடத்தி வருவதாகவும் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தமிழ்நெட் செய்திச் சேவைக்கு அளித்துள்ள நேர்காணலில் தெரிவித்திருக்கிறார்.



### சினைப்பர் தாக்குதலில் லக்ஸ்மன் கதிர்காமர் பலி

12 ஓகஸ்ட் 2005

ஸ்ரீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் 12.08.2005 அன்று இரவு 11.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட சினைப்பர் தாக்குதலில் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அதிகாலை 12.15 மணியளவில் உயிரிழந்தார். கொழும்பு 07, விஜயராம மாவத்தையில் உள்ள அவரது வீட்டில் வைத்து தூரத்திலிருந்து குறிபார்த்துச் சுடும் சினைப்பர் ரக சுடுகலன் மூலம் லக்ஸ்மன் கதிர்காமர் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. நிகழ்வு ஒன்றில் கலந்துவிட்டு வீட்டிற்கு வந்த கதிர்காமர் வீட்டில் உள்ள நீச்சல் தடாகத்தில் குளித்துவிட்ட வீட்டிற்குள் செல்ல முற்பட்டபோதே இவர் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

### கதிர்காமரின் கொலை தொடர்பில் விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டப்படுவதற்கு தமிழ்ச்செல்வன் கண்டனம்

13 ஓகஸ்ட் 2005

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பில் விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டப்படுவதற்கு தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலில் கண்டனம் தெரிவித்துள்ளார். யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக செயற்படும் பல சக்திகள் தெற்கில் உள்ள அதேவேளை ஸ்ரீலங்கா ஆயுதப்படைகளின் ஒரு பிரிவு யுத்த நிறுத்த உடன்படிக்கையை சீர்குலைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது. எனவே இது தொடர்பில் அரசாங்கம் உரிய விசாரணைகளை மேற்கொண்டு உண்மை நிலையைக் கண்டறிய வேண்டுமென தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார். கதிர்காமர் கொல்லப்பட்ட பகுதி மிகவும் பாதுகாப்பு நிறைந்த பகுதி எனவும் இவ்வாறான பாதுகாப்பு நிறைந்த பகுதியில் வெளியார் வந்து தாக்குதல் நடாத்தி கதிர்காமரைக் கொலை செய்வது என்பது சாத்தியமற்ற விடயம் எனவும் தமிழ்ச்செல்வன் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

### மட்டக்களப்பு நகர அரசியற்துறை அலுவலகம் மீது தாக்குதல்

14 ஓகஸ்ட் 2005

மட்டக்களப்பு அரசடி தாமரைக்கேணி வீதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் நகர அரசியற்துறை அலுவலம் மீது 14.08.2005 அன்று நண்பகல் 12.15 மணியளவில் ஸ்ரீலங்கா படையினருடன் இணைந்து இயங்கும் தேசவிரோதிகள் சிலரால் கைக்குண்டுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளது.

### அன்ரன் பாலசிங்கம் - ஹெல்கிசன் சந்திப்பு

14 ஓகஸ்ட் 2005

நோர்வே நாட்டின் துணை வெளிவிவகார அமைச்சர் திரு. விடார் ஹெல்கிசன் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் முனைவர் அன்ரன் பாலசிங்கம் அவர்களை 14.08.2005 அன்று மாலை லண்டனில் சந்தித்து தற்கால அரசியல் நிலவரங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பின் போது அன்ரன் பாலசிங்கம் அவர்களால் சமகால நிலவரங்கள் தொடர்பில் பல விடயங்கள் விடார் ஹெல்கிசனுக்குத் தெளிவு படுத்தப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

### மூதூரில் படையினன் சுட்டுக்கொலை

16 ஓகஸ்ட் 2005

16.08.2005 அன்று பிற்பகல் 12.20 மணியளவில் திருமலை மாவட்டம் மூதூர் 64 ஆம் மைல் கல் இராணுவ முகாமில் கடமையாற்றிக் கொண்டிருந்த கின்தெனிய எனும் இராணுவக் கோப்ரல் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

### யாழில் கடத்தப்பட்ட போராளியை விடுதலை செய்யாவிட்டால் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிவரும் - தமிழ்ச்செல்வன்

18 ஓகஸ்ட் 2005

யாழ்ப்பாணத்தில் 17.08.2005 அன்று ஸ்ரீலங்கா காவல்துறையினர் மற்றும் இராணுவத்தினரால் கடத்தப்பட்ட போராளியை உடனடியாக விடுதலை செய்யாவிட்டால் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவேண்டி வரும் என யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்துள்ளதாக தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

### மகளிர் படையணியின் 20ம் ஆண்டு நிகழ்வை முன்னிட்டு வன்னியில் சிறப்பு நிகழ்வு!

18 ஓகஸ்ட் 2005

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் முதலாவது அணியின் படையத் தொடக்க பயிற்சிக் கல்லூரியில், தேசியக் கொடி ஏற்றப்பட்டு, பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு இன்றோடு இருபதாண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டு விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிகள், சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட இடமொன்றில் ஒன்றுகூடின.

https://tamileelamarchive.com/



# பதிவுகள்

## மகளிர் படையணியின் வளர்ச்சியில் நான் முழுத் திருப்தி அடைகிறேன் - தேசியத் தலைவர்

19 ஒகஸ்ட் 2005

மகளிர் படையணியின் வளர்ச்சியில் தான் முழுத் திருப்தியடைவதாக தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் 20ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தொலைக்காட்சிக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மகளிர் படைப்பிரிவின் வளர்ச்சியிலே நான் முழுத்திருப்தியை அடைகின்றேன். ஏனெனில் எவ்வளவோ இக்கட்டான சண்டைக் களங்களில் அவர்கள் எவ்விதத்திலும் சளைக்காது நின்று போராடியிருக்கிறார்கள். ஆனையிறவுச் சண்டை என்று சொன்னால் தளபதி பால்ராஜ் தான் நினைவுக்கு வருவார். ஏனென்றால் ஆனையிறவுச் சண்டையை தளபதி பால்ராஜ் முன்னின்று நடத்தியதால் அவர் தான் நினைவுக்கு வருவார். ஆனால் உண்மையிலேயே பால்ராஜ் அந்த தரையிறக்கத்தில் போய் இறங்கி போரிட்டுக் கொண்டிருந்தபோது மகளிர் படைத் தளபதியான துர்க்காவும் அவரோடு அந்தக் களத்திலே அதேயிடத்திலேயே நின்றார். மாலதி படையணித் தளபதி விதுசாவும் அந்தக் களத்தில் அவருடனேயே நின்றார்.

பால்ராஜுடன் அதே களத்தில் அதே சூழலில் எவ்வித மாறுதல்களும் இல்லாமல் நின்று பெண் போராளிகளை வைத்து தலைமை தாங்கிப் போராடினார்கள். எந்த விதத்திலும் அவர்கள் போராட்டத்தில் அந்நியப்பட்டு நிற்கவில்லை இக்கட்டான இறுக்கமான காலகட்டங்களில் போராட்டங்களில் அவர்கள் பங்குபற்றிக் கொண்டிருந்தார்கள். எனத் தேசியத் தலைவர் அவர்கள் மேலும் தெரிவித்தார்.

## யுத்த நிறுத்தம் குறித்து அரசுடன் பேச்சு நடத்த புலிகள் இணக்கம். ஒஸ்லோவில் சந்திப்பு

20 ஒகஸ்ட் 2005

யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர். போர் நிறுத்தத்தை செம்மையாக நடைமுறைப் படுத்துவது தொடர்பான விடயங்கள் குறித்த பேச்சுவார்த்தை அடுத்த இரு வாரங்களுக்குள் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெறும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் முனைவர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

## கேணல் கிட்டுவின் ஓவியங்கள் கண்காட்சியில்...

22 ஒகஸ்ட் 2005

மாவீரரான மூத்த தளபதி கேணல் கிட்டு அவர்களின் ஓவியங்கள் நல்லூர் ஆலய திருவிழாவை முன்னிட்டு ஆலய வீதியின் தென் மேற்கு மூலையில் அமைந்துள்ள தியாகி திலீபன் அவர்களின் நினைவுத் தூபிக்கு அருகாமையில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டன. அனைத்துலக தொடர்பகத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்று வரும் இக் கண்காட்சியில் கேணல் கிட்டுவின் எண்ணங்கள் சிந்தனையில் உருவான ஓவியங்கள் பல பார்வைக்கு வைக்கப்பட்டன.



## வவுனியா மகளிர் அரசியல்துறை அலுவலகம் மீது கைக்குண்டு வீச்சு: 3 பெண் போராளிகள் காயம்

20 ஒகஸ்ட் 2005

வவுனியா மாவட்டம் வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறை அலுவலம் மீது 20.08.2005 அன்றிரவு 10.55 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கைக்குண்டு வீச்சில் மூன்று பெண் போராளிகள் காயமடைந்துள்ளனர்.

## வெளிவிவகார அமைச்சராக அனுரா பதவியேற்பு

22 ஒகஸ்ட் 2005

சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சராக அனுரா பண்டாரநாயக்க 22.08.2005 அன்று அரசுத் தலைவர் சந்திரிகா குமாரணதுங்க முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டுள்ளார். அரசுத் தலைவர் மாளிகையில் இப்பதவியேற்பு நிகழ்வு நடைபெற்றுள்ளது.

## யாழ்.குடாவில் படையினரால் இரு விகாரைகள் அமைப்பு

24 ஒகஸ்ட் 2005

யாழ்ப்பாண குடாநாட்டில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு உயர் பாதுகாப்பு வலயம் எனப்பெயரிடப்பட்டுள்ள பகுதிகளில் புத்த விகாரைகள் மற்றும் சிலைகள் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மாதகல் மற்றும் பலாலி ஆகிய இடங்களில் மிக அண்மையில் இரண்டு புத்த விகாரைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

## ஜேர்மனியில் புகலிடம் கோரிய 50 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்

25 ஒகஸ்ட் 2005

ஜேர்மனியில் புகலிடம் கோரிய 50 இலங்கையர்கள் 24.08.2005 அன்று நள்ளிரவு கொழும்பிற்கு திருப்பி அனுப்பப்பட்டனர். இவர்கள் பயணித்த வானூர்தியில் ஏதாவது வன்செயலில் ஈடுபடலாம் என்ற அச்சத்தில் 50 வரையான ஆயுதம் தாக்கிய காவல்துறையினர் பாதுகாப்பிற்காக வந்துள்ளனர்.

## தமிழ் ஊடகங்கங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தொர்ச்சியாக தாக்கபடுவதைக் கண்டித்து பெரும் ஆர்ப்பாட்டம்

26 ஒகஸ்ட் 2005

அண்மைக் காலத்தில் தமிழ் ஊடகங்கள் தாக்கப்படுவதையும், ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவது மற்றும் கைது செய்யப்படுவதையும், கண்டித்து 26.08.2005 அன்று மாலை 4-30 மணியளவில் கொழும்பு கோட்டை தொடரூந்து நிலையம் முன்பாக மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது.

## சுடர் ஒளி அலுவலகம் மீது கைக்குண்டுத் தாக்குதல்: ஒருவர் பலி, மூவர் படுகாயம்

29 ஒகஸ்ட் 2005

கொழும்பு கிராண்ட்பாசிலுள்ள சுடர் ஒளி பத்திரிகையின் காரியாலயம் மீது 29.08.2005 அன்று மாலை 6.15 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் அலுவலக ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் மூன்று ஊழியர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

## படையினரின் தாக்குதலில் போராளி வீரச்சாவு

30 ஒகஸ்ட் 2005

மட்டக்களப்பு மாவட்டம், வாகரையில் உள்ள கிரிமிச்சைப் பகுதிக்குள் 30.08.2005 அன்று காலை 10 மணியளவில் இராணுவத்தினர், அவர்களுடன் சேர்ந்தியங்கும், தேச விரோத ஆயுதக்குழுவினர் ஊடுருவி மேற்கொண்ட தாக்குதலில் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார். மேலும் ஒரு போராளியும், இரு பொது மக்களும் காயமடைந்துள்ளனர். நீகன் என்ற போராளியே வீரச்சாவடைந்தவர் ஆவார்.

நன்றி: சங்கதி

https://tamileelamarchive.com/

# எரிமலை




ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

Tel: 01 - 43 58 11 42

Fax: (33) 1 43 58 11 91


e.mail: info@erimalai.info

ERIMALAI, C/O T.C.C France, 341, Rue Des Pyrenees, 75020 Paris, FRANCE.

https://tamileelamarchive.com/

# போரும் சமாதானமும்

'தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஆர்வமும் அக்கறையும் கொண்ட அனைவரும் படித்துப் பயன் பெறவேண்டிய அருமையான நூல் இது'






தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகராகவும் தத்துவாசிரியராகவும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனும், தலைவர் பிரபாகரனுடனும் கடந்த இருபத்தியேழு வருடங்களாக நெருங்கிப் பழகி பணியாற்றி வந்ததுடன், அவர்களது போராட்ட வாழ்விலும் பங்குகொண்டு அவர்களுடன் சேர்ந்து பயணித்த அனுபவத்தின் அடிப்படையில் இந்த அரசியல் வரலாற்று நூலைப் படைத்திருக்கிறார். திரு. பாலசிங்கம்.

திரு. அன்ரன் பாலசிங்கம் எழுதியுள்ள 'போரும் சமாதானமும்' என்ற இந்தப் புதுமையான அரசியல் வரலாற்று நூல், விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த போராட்ட வரலாற்றை விறுவிறுப்பாக விளக்கிக் கூறுகிறது. விடுதலைப் புலிகள் இயக்கம் பிறப்பெடுத்த கொந்தளிப்பான அரசியல் பின்னணி, அதன் ஆரம்பகால ஆயுதப் போராட்டங்கள், காலப்போக்கில் அதன் அபாரமான போரியல் வளர்ச்சி என்ற ரீதியில் புலிகள் அமைப்பின் புரட்சிகரமான போராட்ட வரலாற்றை உண்மைத் தகவல்களுடன் பதிவு செய்கிறது இந்நூல்.

ஒரு புறம் நீண்ட தொடர்ச்சியான இரத்தம் சிந்தும் ஆயுதப் போராகவும் மறுபுறம் அமைதி வழியில் தீர்வு வேண்டிய சமாதான முயற்சிகளாகவும் கட்டவிழ்ந்த விடுதலைப் புலிகளது போராட்ட வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளையும், திருப்பங்களையும் கால வரிசையில் மிகவும் நேர்த்தியாக எடுத்துக்கூறுகிறார் நூலாசிரியர். போரியல் மூலோபாயத்திலும் அரசியல் தந்திரோபாயத்திலும் புதுமைகளைப் படைத்து தமிழீழப் போராட்டத்தின் விடுதலைப் போராட்டத்தை புலிகளின் தலைமைப்பீடம் முன்நகர்த்திச் செல்லும் வியப்பூட்டும் கதையாக இந்நூல் விரிந்து செல்கிறது. விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாற்றில் இதுவரை வெளிவராத புதிய சுவையான தகவல்களைக் கொண்டதாக அமையப் பெற்றிருக்கிறது இந்நூல்.

இந்நூலினை www.eelamstore.com இலும் பெற்றுக்கொள்ளலாம்